தேவியின்
# கண்மணி

ரூ-15

சொ.கலைவாணி சொக்கலிங்கம்



# பூமாலையே தோள் சேரவா!

# சமையல்

## நெல்லூர் மீன் கறி



**தேவையான பொருட்கள்:**

மீன் (எந்த மீன் எனினும் செய்யலாம்)-1கிலோ,வெங்காயம்-3, தக்காளி-2, காய்ந்த மிளகாய்- 4, தனியா- 1 ஸ்பூன், பூண்டு- 5 பல், குறு மிளகு- 1/2 ஸ்பூன், மிளகுத் தூள்- 1 1/2 ஸ்பூன், சீரகம்- 1 1/4 ஸ்பூன், வெந்தயம்- 1/2 ஸ்பூன், தேங்காய்ப்பூ- 1/2 ஸ்பூன், கடுகு- 1/2 ஸ்பூன், மஞ்சள் தூள்- 1/2 ஸ்பூன், தனியாத்தூள்- 1 ஸ்பூன், மிளகாய் தூள்- 1 1/2 ஸ்பூன், கார மிளகாய் பொடி- 1/2 ஸ்பூன், புளிக்கரைசல்- 1 கப், நல்லெண்ணெய்- 3 1/2 ஸ்பூன், கருவேப்பிலை- 1 கீற்று, கொத்தமல்லித்தழை- 1 கொத்து, உப்பு- தேவையான அளவு.

**செய்முறை:**

முதலில் காய்ந்த மிளகாய், பூண்டு, தனியா, மிளகுத் தூள், குறுமிளகு, சீரகம், வெந்தயம், தேங்காய்த் துருவல் சிறிதளவு, ஒரு வெங்காயம், கார மிளகாய் பொடி ஆகியவற்றை ஒரு ஸ்பூன் எண்ணெய் ஊற்றி வதக்கி பின்னர் அரைத்துக் கொள்ளவும்.

வாணலியில் மீதமுள்ள எண்ணெயை ஊற்றி காய்ந்ததும் கடுகு, கருவேப்பிலை தாளித்து நறுக்கிய வெங்காயத்தை போட்டு நன்றாக வதக்கியபின்னர் நறுக்கிய தக்காளியை சேர்த்து சாறு இறங்கும் வரை வதக்கவும். இதில் மஞ்சள் தூள், மிளகாய் தூள், தனியாத் தூள் கலந்த புளிக் கரைசல், அரைத்த மசாலா, தேவையான அளவு உப்பு போட்டு தண்ணீர் ஊற்றி வேக விடவும்.

நன்கு கொதி வந்ததும் சுத்தம் செய்து வைத்திருக்கும் மீன் துண்டுகளைப் போட்டு வேக விடவும். வெந்ததும் கொத்தமல்லித்தழையை தூவி இறக்கவும்.

சுவையான, கார சாரமான 'நெல்லூர் மீன் கறி' தயார். சூடான சாதத்துடன் சாப்பிட அருமையாக இருக்கும்.

-ஆர்.கயல்விழி,
வடுகப்பட்டி.



## ஆலு. எக் மசாலா



**தேவையான பொருட்கள்:**

உருளைக்கிழங்கு (நடுத்தர அளவு)- 2, பெரியவெங்காயம்- 1, தக்காளி- 2, முட்டை- 2, மிளகாய்தூள்- 1/4 ஸ்பூன், மஞ்சள் தூள்- 1/4 ஸ்பூன், இஞ்சி பூண்டு விழுது- 1/2 ஸ்பூன், கொத்துமல்லித் தழை- சிறிதளவு, எண்ணெய்- 4 ஸ்பூன், உப்பு- தேவையான அளவு.

**செய்முறை:**

வெங்காயத்தை சன்னமாக அரியவும். தக்காளியை வெந்நீரில் போட்டு எடுத்து தோல் உரித்து ஜூஸ் எடுத்துக் கொள்ளவும். உருளைக் கிழங்கை தோல் நீக்கி சிறு துண்டுகளாக்கிக் கொள்ளவும். வாணலியில் கடாயில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் இஞ்சி பூண்டு விழுது பொடியாக நறுக்கிய வெங்காயம், தக்காளிச் சாறு எல்லாவற்றையும் ஒன்றன் பின் ஒன்றாக போட்டு சிவக்க வதக்கவும். பின் உருளைக் கிழங்கு, மிளகாய் தூள், மஞ்சள் தூள், தேவையான அளவு உப்பு சேர்த்து தண்ணீர் விட்டு வேகவிடவும். உருளைக்கிழங்கு வெந்து கிரேவியாக வரும் போது முட்டைகளை உடைத்து அதில் சேர்த்து நன்கு கிளறவும். முட்டையும் மசாலாவும் சேர்ந்து உதிர்ந்தாற்போல வரும் போது, நறுக்கிய கொத்தமல்லியைத் தூவி இறக்கவும். இரண்டு பிரெட் ஸ்லைசுகளுக்கு நடுவில் வைத்தோ இரண்டு சப்பாத்திகளுக்கு நடுவில் வைத்து ரோல் செய்தோ குழந்தைகளுக்கு தந்தால் நிமிடத்தில் காலியாகிவிடும்.

-ஜே.சி.ஜெரினாகாந்த், ஆலந்தூர்.

## ஸ்பெஷல் மட்டன் மசாலா

**தேவையான பொருட்கள்:**


மட்டன்- 500 கிராம், பெரிய வெங்காயம்- 4, தக்காளி- 100 கிராம், இஞ்சி பூண்டு விழுது- 1 ஸ்பூன், மல்லிப்பொடி- 2 ஸ்பூன், மிளகாய் பொடி- 2 ஸ்பூன், நெய்- 2ஸ்பூன், மஞ்சள்தூள்- 1/2 ஸ்பூன், கறிமசாலாப்பொடி- 2 ஸ்பூன், உப்பு- தேவைக்கேற்ப.

**செய்முறை:**

மட்டனை சுத்தம் செய்து துண்டுகளாக்கிக் கொள்ளவும்.

வாணலியில் நெய் விட்டு வெங்காயத்தை நறுக்கிப் போட்டு வதக்கவும். பொன்னிறத்தில் வரும் போது இஞ்சி பூண்டு விழுது, மட்டன் ஆகியவற்றைப் போட்டு கிளறவும். மட்டன் ஓரளவு வெந்து வரும் போது மல்லி பொடி, மிளகாய் பொடியை அத்துடன் சேர்த்து கிளறவும். பின்பு மூடி வைத்து வேக விடவும். வெந்து வரும் போது கறிமசாலா, நறுக்கிய தக்காளி சேர்த்து கிளறவும். மட்டன் மேல் மசாலா படியும் போது இறக்கவும். வெஜிடபிள் பிரியாணி, தேங்காய்ப்பால் சாதத்துடன் பரிமாற சுவை அபாரமாக இருக்கும்.

-ஆர்.பிரகாசம், நல்லாலம்.



அழகோ அழகு



# ரோஜா பூ கன்னங்கள்

**பெண்கள் பலருக்கும் ரோஜாப்பூ நிற கன்னங்கள் வேண்டும் என்ற ஆசை இருக்கும். பொதுவாக ரோஜாப்பூ நிறக் கன்னங்களுக்கு அதிகளவு மேக்-அப் பயன்படுத்துவார்கள். அப்படி அல்லாமல் ஆரோக்கியமாகவும், எந்த ஒரு கெமிக்கல் கலந்த பொருட்களைப் பயன்படுத்தாமலும், இயற்கையாகவே ரோஜாப்பூ நிறக் கன்னங்களைப் பெறுவதற்கு ஒருசிலவற்றை அவ்வப்போது செய்து வந்தாலே போதும். இப்போது அந்த முறைகளை என்னவென்று பார்ப்போமா!!!**



### வெதுவெதுப்பு

வெதுவெதுப்பான நீரைப் பயன்படுத்தி முகத்தைக் கழுவினால், முகத்தில் இரத்த ஓட்டமானது நன்கு சீராக இருந்து, கன்னங்களும் நன்கு அழகாக அழுக்கின்றி பொலிவோடும், புத்துணர்ச்சியுடனும் இருக்கும்.



**தினமும் இரவில் மோரை சருமத்தில்தடவி, மசாஜ் செய்து ஊற வைத்து கழுவினால், சருமத்தில் உள்ள பழுப்பு நிறம் மறைந்து, சருமம் பளிச்சென்று மின்னும்.**

### பேஷியல் மசாஜ்

தினமும் முகத்திற்கு சிறிது நேரம் மசாஜ் செய்ய வேண்டும். இதனால் முகத்தில் இரத்த ஓட்டமானது அதிகரித்து, முகம் புத்துணர்ச்சியுடனும், அழகாகவும் இருக்கும்



### வண்ணமயமான உணவுகள்

வண்ணமயமான உணவுகளான தக்காளி, சிவப்பு மற்றும் மஞ்சள் நிற குடைமிளகாய், தர்பூசணி போன்றவற்றை போதுமான அளவு சாப்பிட்டால், அதில் உள்ளவைட்டமின் 'சி' மற்றும் 'ஈ' ரோஜாப்பூ நிற கன்னங்களைப் பெற வைக்கும்.

**பப்பாளிப் பழத்தை மசித்து, சிறிது தேன் சேர்த்து கலந்து, முகம் மற்றும் உடலில் தடவி ஊற வைத்து கழுவ பழுப்பு நிறம் விடைபெறும்..**

### தண்ணீர்

தண்ணீர் குடித்தாலே, உடல் ஆரோக்கியமாகவும், புத்துணர்ச்சியுடனும் இருக்கும். ஏனெனில் தண்ணீர் குடிப்பதால்,

உடலில் உள்ள டாக்ஸின்கள் வெளியேறி முகம் பொலிவோடு மின்னும்.

**உருளைக்கிழங்கை துண்டுகளாக்கி, அதனை முகத்தில் தேய்த்து, 10 நிமிடம் ஊற வைத்து கழுவினால், சருமத்தில் உள்ள அழுக்குகள் அனைத்தும் நீங்கி பொலிவாகும். இல்லையெனில் உருளைக்கிழங்கை சாறு எடுத்து, அதில் சிறிது எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து, பாதிக்கப்பட்ட இடங்களில் தடவி ஊற வைத்து கழுவினால் பழுப்பு நிறம் மாறும்.**

**தக்காளி**

தக்காளியின் சாற்றை முகத்திற்கு தடவி, சிறிது நேரம் ஊற வைத்து கழுவி வந்தால், நல்ல நிறத்தைப் பெறலாம்.

**துவரம் பருப்பு**

துவரம் பருப்பை பாலில் 30



**தினமும் கற்றாழை ஜெல் கொண்டு முகத்தில் மசாஜ் செய்து கழுவினால், பழுப்பு நிற சருமத்தில் இருந்து விடுபடலாம்.**

நிமிடம் ஊற வைத்து, பின் அதனை நன்கு கெட்டியாக அரைத்து, முகத்தில் தடவி, 20 நிமிடங்கள் ஊற வைத்து கழுவினால், முகம் பொலிவோடு மின்னும்.

**ரோஸ் மாஸ்க்**

ரோஜாப்பூக்களை பால் சேர்த்து அரைத்து, வாரத்திற்கு 3 முறை முகத்திற்கு மாஸ்க் போட்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.



**குங்குமப்பூவை, மில்க் க்ரீமுடன் சேர்த்து ஊற வைத்து, நன்கு மசித்து பழுப்பு நிறப் பகுதியில் தடவி ஊற வைத்து கழுவினால், சருமம் பொலிவோடு இருக்கும்.**





## 3 பேருக்கு தலா ரூ.1000 மதிப்புள்ள

# பட்டுச்சேலை பரிசு

**கீழே தரப்பட்டுள்ள கூப்பனில் தங்களின் விலாசத்தையும், பதிலையும் எழுதி கவரில் வைத்து அனுப்புங்கள்.**

**குலுக்கல் முறையில் 3 பேர் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். கூப்பன் வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 21-08-2013.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

சேலை பரிசு

**ஆசிரியர்- கண்மணி,**

**246, அண்ணாசாலை, சென்னை - 600006**

**தொலைபேசி எண்: 28297225**

**பட்டுச் சேலை பரிசு 14.08.2013**

**கேள்வி: இந்த மாநிலத்தை இரண்டாக பிரிக்க போகிறார்கள்.**

**பதில்:** ஆ _ _ _ _

அனுப்பும் வாசகர் முழு முகவரி:-

____________________

____________________

**மாவட்டம்.** ________________

**அஞ்சல் எண் :**

**தொலை பேசி எண்:**

**21-08-2013**



# பூமாலையே தோள் சேரவா!

**மல்லிகைப்பூவாய் மாறிவிட ஆசை**
**தென்றலைக் கண்டு மாலையிட ஆசை**
**மேகங்களை எல்லாம் தொட்டு விட ஆசை**
**சோகங்களை எல்லாம் விட்டு விட ஆசை**

முன்பக்க முற்றத்தில் படர்ந்து விரிந்து பூத்துக் குலுங்கிய மல்லிகைப் பந்தலின் அடியில் நின்றிருந்தாள் உமா. பசுமை நிறக்கொடியின் பின்னணியில் பளிச்சென வெள்ளையாய் சிரித்துக் கொண்டிருந்த மல்லிகைகளை கொடிக்கு வலிக்காமல் மென்மையாய் பறித்து கிண்ணத்தில் சேகரித்துக் கொண்டிருந்தாள் உமா எளிமையாய் திருத்தமாய் ஒரு பொன்சிலையைப் போல அற்புத அழகோடு இருந்தாள்.

மல்லிகையின் மணம் சுற்றுப்புறம் முழுக்க விரவி மனதுக்கு இதமளித்தது.

பூக்களைப் பறிக்கும்போது செடி கொடிகளுக்கும் கூட வலிக்கக் கூடாது என்று நினைப்பவள். பேச்சும், செயலும் கூட அப்படித்தான். அதிர்ந்து பேசவோ, பிறர் மனம் புண்படச் செய்யவோ அறியாதவள்.

அக்கா - என்ற அழைப்பில் கலைந்து

உமா பார்க்க, இளையவள் பாரதி. பாரதி சிவப்பு நிற சுரிதாரில் அப்போதுதான் பூத்த செம்பருத்தி பூவாய் வந்து நின்றாள்.

**-சொ.கலைவாணி சொக்கலிங்கம்**



உமா மத்தாப்பு என்றால் பாரதி சரவெடி. அதுவும் தவுசண்ட்வாலா. படபடவென பேசமட்டுமே தெரிந்தவள். கண்முன்னே தவறு நடந்தால் தட்டிக் கேட்பவள்.

வார்த்தையால் மட்டுமல்ல கையால் கூடத்தான். அவர்களது தெருவில் இருக்கும் வாலிபர்களுக்கு பாரதி என்றால் கொஞ்சம் பயம் தான்.

படித்து முடித்து வேலை தேடிக் கொண்டிருப்பவள். அவளது தடாலடி பேச்சுக்காக ஏழெட்டு பணிகளை இழந்தாலும் மனம் சோர்ந்து விடாமல் இதோ இன்று கூட நேர்முகத் தேர்விற்கு புறப்பட்டுக் கொண்டிருக்கிறாள்.

அக்கா இந்த ட்ரெஸ் ஓ.கே.வா? எனக் கேட்ட தங்கையின் உடையை திருப்தியில்லாமல் பார்த்தாள்.

பட்டு பூச்சியின் நிறத்தில் வெல்வெட் சுரிதாரில் அதே நிறத்தில் பூக்களும் சமிக்கி வேலைப்பாடுகளும் அருமையாய் இருந்தாலும், தன் தங்கையின் உடம்போடு அம்சமாய் ஒட்டிக் கொண்டு அவளது பொன் நிறத்தை எடுப்பாய் காட்டியபோதும் மறுப்பாய் தலையசைத்தாள் உமா.

இது வேண்டாம் பாரு! வேற போட்டுக்கோ!

ஏங்க்கா? இது நல்லா இல்லையா?

அழகாகத் தான் இருக்கு. ஆனா இது வேண்டாம்.

ஏன்க்கா?

அந்த ரஞ்சனிஸ் கம்பெனி இண்டர்வியூக்கு இதைத்தான போட்டுப் போனாய்?

ஆமா

அது பெயிலியர் ஆயிடுச்சுல்ல? அதனால இது வேண்டாம். வேற போட்டுப் போ - உமா மென்மையாய் சொல்லிக் கொண்டிருந்த நேரம் தன் சைக்கிளை துடைத்துக் கொண்டிருந்த மோகன் அடக்க மாட்டாமல் சிரித்தான்.

அக்காள், தங்கை இருவரும் தம்பியிடம் திரும்பினர். மோகன் ஏதோ பெரிய ஜோக்கை கேட்டது போல் பொங்கிச் சிரிக்க முறைத்தாள் பாரதி.

ஏய் குண்டு பூசணிக்காய், இப்ப எதுக்குடா இப்படி விழுந்து விழுந்து சிரிக்கிறே?

சிரிக்காம? ஏன் உமாக்கா உன் அறியாமைக்கு அளவே இல்லையா? - என்றவாறு மீண்டும் சிரிக்க உமா புரியாமல் பார்த்தாள்.

நான் என்னடா பண்ணினேன்?

இவ வாய்க்கு ரஞ்சனிஸ் கம்பெனியில மட்டுமில்ல வேற எந்த கம் பெனியிலும் வேலை கிடைக்கப் போறதில்லை.

டேய் - பாரதி கடுப்பாய் பற்களை கடித்தாள்.

இந்த லட்சணத்தில் நீ டிரெஸ்ஸை குறைசொல்றியே! அப்படிப் பார்த்தா இவகிட்ட உள்ள எல்லா டிரெஸ்சுமே ராசியில்லா டிரஸ் ஆகிடுமே!

டேய் பூசணிக்காய்! காலையிலேயே எங்கிட்ட வாங்காதே! ஒழுங்கா ஸ்கூலுக்கு கிளம்பு.

நாங்க கிளம்புறது இருக்கட்டும், நீ இந்த இண்டர்வியூவையாவது ஒழுங்கா அட்டெண்ட் பண்ணு.

எல்லாம் எங்களுக்குத் தெரியும். நீ உன் ஓட்டை வாயை மூடிட்டு போ.

போடி குரங்கு, சிம்பன்ஸி.

நீதாண்டா குரங்கு, பூசணிக்காய், கோணிமூட்டை, தீனிப்பண் டாரம்.

நீ தாண்டி வாயாடிக் கழுதை, காட்டுக்குரங்கு

நீ நீர்யானை... திமிங்கலம்... - என இருவரும் மாறிமாறி திட்டிக் கொள்ள காதை மூடிக் கொண்டாள் உமா.

அடடா! என்ன பேச்சு இது? ரெண்டு பேரும் விலங்கு காட்சி சாலையிலயா இருக்கீங்க? டேய் மோகன் இப்படியெல்லாம் பேசக்கூ டாதுன்னு எத்தனை தரம் சொல்லியிருக்கேன்?

அதை அந்த குரங்கு கிட்ட சொல்லு.

போடா காட்டுப்பன்னி

ஏய் பாரதி அவன் நம்ம தம்பிடி.

தம்பியா? இவனா? இந்த பன்னியைப் போய் தம்பின்னு சொல்றி யேக்கா?

நான் எந்த குரங்குக்கும் தம்பி கிடையாது.



நானும் எந்த பன்னிக்கும் அக்கா கிடையாது.

போடி உன்னைப் போய் எவனாவது அக்கான்னு கூப்பிடுவானா?

டேய்ய்ய்... என்று கத்தியவாறு சைக்கிள் அருகே இருந்த காற்ற டிக்கும் பம்பை எடுத்து மோகனின் தலையை குறிவைத்து ஓங்க, பதறிப்போனாள் உமா.

ஏய்! ஏய்! என்ன பண்ற நீ?- என ஓடிவந்து தடுக்க, இந்த களே பரம் சமையலறை வரை கேட்க, குழம்பை தாழித்துக் கொண்டிருந்த செங்கமலம் கரண்டியோடு வெளியே வந்தாள்.

மோகனுக்கும், பாரதிக்கும் நடுவே நின்று உமா போராடிக் கொண் டிருக்க வேகமாய் அவர்களை நெருங்கினாள்.

ஏய் கழுதைகளா? காலையிலே தொடங்கிட்டீங்களா? நீ என்னடி பெரிய ரௌடி மாதிரி பம்பை கொடு...- என மகளிடம் இருந்து ஆயு தத்தை பறிக்க ஆவேசமானாள் பாரதி.

அம்மா இவன் என்னை என் னவெல்லாம் சொல்றான் தெரியுமா?

நீ மட்டும் கண்ணே, மணியேன்னு கொஞ்சினியா?

என்னை குண்டு பூசணிக் கான்னு சொல்றாமா.

ஏன்டா இப்படி மோதிக் கிட்டே இருக்கீங்க? இவளை பெத்த வயித்தில தான உங் களையும் பெத்தேன்? இவ பொறுமையில கால் அளவாவது உங்க கிட்ட இருக்கா?

அம்மா இந்த பூசணிக்காயை விட நாலு வயசு மூத்தவ நான். இந்த நாய் என்னிக்காவது என்னை மதிக்குதா?

மதிக்கிற மாதிரி நீ நடந்திருக்



**"தலைவர் இலையில மட்டும் ஊறுகாயை வைக்காதீங்கன்னு சொன்னேனே, கேட்டீங்களா...?"**

**"ஏன் என்ன ஆச்சு?"**

**"ஊறுகாயைப் பார்த்ததும் இலையை மடக்கிட்டு நாட்டுச் சரக்கு இருக்குற இடத்துக்குப் புறப்பட்டுட்டார் பாருங்க...!"**

**-ஆர்.எம்.வடுகநாதன், வேதாரண்யம்**

கிறியா?

போதும் நிறுத்துங்க. பாரதி! உனக்கு இண்டர்வியூவுக்கு நேரமாகு தில்ல? - உமா சொன்னதும் லேசாய் தணிந்தாள் பாரதி.

உன்னை வந்து கவனிச்சுக்கிறேன் என தம்பியின் தலையில் குட்டி விட்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

ராட்சசி! எப்படி கொட்டுறா பாருங்கம்மா!

மோகன்! மூத்தவள்ன்ற மரியாதையில்லாம பேசாதே!

இவளுக்கென்ன மரியாதை?

டேய் என் பேச்சை எடுத்தே கொன்னுடுவேன் - உள்ளிருந்து பாரதியின் குரல் ஒலிக்க நெற்றியலடித்துக் கொண்டாள் செங்கமலம்.

ரெண்டுமே ஒத்து வராது. பேசாம தனித்தனி ஹாஸ்டல்ல கொண்டு போய் விட்டுடணும்.

அம்மா! நீங்க சமையலை கவனிங்க. நான் இந்த பூவை கட்டிடுறேன். மோகன் உனக்கு ஸ்பெஷல் கிளாசுக்கு டயமாகுது பார். போய் குளி!

ம்..ம்.. என நகர வெளிப்பக்க கதவைத் திறந்து கொண்டு கதிர்வேலன் கையில் காய்கறிகள் அடங்கிய கூடையோடு வந்தார்.

என்னம்மா! கையில கரண்டியோட நிற்கிறே?

இப்பத்தான் இங்க ஒரு போராட்டம் முடிஞ்சது. நீங்க குளிச்சிட்டு வாங்க. சாப்பாடு எடுத்து வைக்கிறேன் - என்று அவர் கையில் இருந்த கூடையை வாங்கிக் கொண்டு போனாள் செங்கமலம்.

கதிர்வேலன் பெருமையாய் சிரித்துக் கொண்டார்.

இது வழக்கமா நடக்கிறது தானே?

க்கும்... உங்க புள்ளைகளை நீங்க தான் மெச்சிக்கணும்.

அம்மா நான் கிளம்புறேன் - என வந்து நின்ற இளையமகளை கீழிருந்து மேலாய் பார்த்தாள்.

பசும்புல் நிறத்தில் வெள்ளை நிற எம்பிராய்டரி வேலைப்பாடுடைய சுரிதாரில் பளிச்சென நின்றிருந்தாள்.

ஏய் முதல்ல போட்டிருந்த டிரெஸ்சுக்கு என்ன?

அது வேணாம்னு அக்கா சொல்லிட்டா.

என்னவோ அவ சொல்லுக்காவது மதிப்பு இருக்கே ரொம்ப சந்தோஷம். இரு. சாப்பிட்டுப் போ.



வேண்டாம் டயமாச்சு - என்றவள் தன் கைப்பையையும், சான்றிதழ்களையும் பத்திரப்படுத்திக் கொண்டு தந்தையை நெருங்கினாள்.

அப்பா! ஒரு நூறு ரூபா கொடுங்கப்பா

எதுக்கும்மா?

இண்டர்வியூ போறேனில்ல?

அப்பா! இவ இண்டர்வியூ அட்டெண்ட் பண்றாளோ, இல்லையோ மாசாமாசம் உங்க கிட்ட இருந்து லம்பா ஒரு அமவுண்ட் அடிச்சுடுறா - ஈரத்தலையை துவட்டிக் கொண்டே வந்த மோகன் சொல்ல, அவனிடம் சீறினாள் பாரதி.

நான் ஒண்ணும் தண்டமா செலவு செய்யல. இந்த வேலை மட்டும் கிடைக்கட்டும், மாசம் ஆறாயிரம் ரூபாயை அப்படியே கொண்டு வந்து அப்பா கையில கொடுப்பேன்.

முதல்ல வேலை கிடைக்குதான்னு பாரு

கண்டிப்பா கிடைக்கும். அவங்க கேட்கிற எல்லா குவாலிபிக்கேசனும் என்கிட்ட இருக்கு.

அதுமட்டும் இருந்தா பரவாயில்லையே. உன் வாய் காதுவரை கிழியுமே. வேலை கொடுக்கிறவன் பயந்து தானே உன்னை அனுப்பிடுறான்?

கதிர்வேலன் மகனை அதட்டினார். தம்பி, அக்கா வெளியே கிளம்பும்போது பெஸ்ட் ஆப் லக் சொல்லி அனுப்பணும்.

விடுங்கப்பா கழுதை மாதிரி வளர்ந்திருக்கானே தவிர இந்த நாய்க்கு கொஞ்சம் கூட மேனர்ஸே கிடையாது. நீங்க காசு கொடுங்கப்பா. டயமாச்சு.

இதோ இருக்கிற கே.கே.நகர் தானேம்மா. அரை மணி நேரத்தில் போயிடலாம். முதல்ல சாப்பிடு.

ஐயோ அப்பா! காலை நேர ட்ராபிக்ல ஒரு ஆட்டோ கூட பிரியா வராது. பஸ்ல போனா ஒரு மணி நேரமாகிடும். எல்லா சிக்னலயும் நின்னு போக டயமாகிடும்.

அப்போ நடந்தே போ. நூறு ரூபா மிச்சமாகட்டும்.- யூனிபார்மை மாட்டிக் கொண்டே சொன்ன தம்பியை கடித்து குதறிவிடுவதைப் போல பார்த்தாள் பாரதி.

உன் அண்டா வாயை கொஞ்சம் மூடு.

எப்படியும் உனக்கு இந்த வேலை கிடைக்கப் போறதில்ல. தண்டச் செலவு பண்ணணும்? பேசாம நடந்தே போ. வாக்கிங் போன மாதிரியும் இருக்கும், உன் கொழுப்பும் குறையும்.

மோகன் - அதட்டியவாறே உள்ளே வந்தாள் உமா. கையில் நெருக்கமாய் கட்டிய மல்லிகைச் சரம். அதைத் தங்கையின் தலையில் சூடினாள்.

எதுக்குக்கா இவ்வளவு பூ?

பொண்ணுங்க பூ வெச்சுக்க கணக்கு பார்க்கக் கூடாது. சாப்பிட்டியா?

வேணாம். அப்பா காசு கொடுங்கப்பா!

நீ சாப்பிடும்மா. தர்றேன். வெறும் வயித்தோட வெளியே போகக் கூடாதும்மா.

போகட்டும் விடுங்கப்பா நாலு இட்லி மிச்சம்.

அதையும் நீ மொக்கிடலாம்னு நினைச்சியா? அம்மா சாப்பாடு போடுங்கம்மா - என வீம்பாய் சாப்பிட்டு விட்டு அப்பாவிடம் பணத்தையும், அம்மாவிடம் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டு தமக்கையிடம் கையசைத்து விட்டு வீட்டை விட்டு வெளியேறுகையில் மணி ஒன்பதை நெருங்கியிருந்தது.

பத்து மணிக்குள் சென்றாக வேண்டுமே என்ற பரபரப்பில் பிரதான சாலையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

கடந்து சென்ற ஆட்டோக்கள் எல்லாம் கூட்டத்தை நிரப்பிக் கொண்டு செல்ல, சலிப்பாய் பேருந்து நிறுத்தத்தை நோக்கிச் சென்றாள்.

சாலை நெரிசலில் நீந்திக் கடந்து செல்கையில் வெகு திடீரென்று அந்த சம்பவம் நடந்தது.



**''என்னது... அந்தக் கடையில் இன்னிக்கு இவ்வளவு கூட்டம்...?''**

**''அதுவா... போர்டு எழுதினவரு, 'ஞாயிறு கடை உண்டு'ன்னு எழுதுறதுக்குப் பதிலா, 'ஞாயிறு வடை உண்டு'ன்னு எழுதித் தொலைச்சுட்டாராம்....!''**

**-ஆர்.எம்.வடுகநாதன், வேதாரண்யம்**



## 2

**அம்பு விழியென்று ஏன் சொன்னான்?**
**அது பாய்வதனால் தானா – அவள்**
**அருஞ்சுவை பால் என்று ஏன் சொன்னான்?**
**அது கொதிப்பதால் தானோ?**

காற்றை கிழித்துக் கொண்டு விரைந்த காரின் முன் இருக்கையில் அமர்ந்திருந்த சஞ்சய் காரை ஓட்டிக் கொண்டிருந்த இளைஞனிடம் சீறிக் கொண்டிருந்தான்.

பத்து மணிக்கு இண்டர்வியூ. இப்ப மணி என்ன?

ஒன்பது இருபது சார்.

நான் லேட்டாப் போனால் எவனாவது மதிப்பானா? காலையில் சீக்கிரம் புறப்படணும்னு சொன்னேன்ல?

சாரி சார்! அம்மா கோவிலுக்கு போகணும்னு சொன்னதால...

ஏதாவது ஒரு காரணத்தை ரெடியா வச்சிருப்பியே! சீக்கிரம் போ.

சரி சார்

ஜெகன்!

சார்?

இனிமே வீட்டுக்குன்னு தனியே கார் வாங்கிடலாம்.

வாங்கிடலாம் சார்.

நீ வீட்டுக்காரை ஓட்டினால் போதும்!

சார் அப்போ இது?

ஏன் எனக்கும் டிரைவிங் தெரியுமே. நான் டிரைவ் பண்ண மாட்டேனா?

நோ சார் நீங்க டிரைவ் பண்ணக் கூடாதுன்றது பெரிய ஐயாவோட உத்தரவு!

அப்பாகிட்ட நான் பேசிக்கிறேன். நீ பாஸ்ட்டா போ. ஏய் சிக்னல் விழப்போகுது பார். க்விக்! க்விக்! பாஸ்ட்டா போ - இளமைத்

துடிப்பும், வேகமும் நிறைந்த சஞ்சய் விரட்ட, அவன் கட்டளைப்படி காரின் வேகத்தை அதிகரிக்க அந்த நேரம் தான் சாலையோரம் நின்றிருந்த கும்பலோடு கும்பலாய் பாரதியும் சாலையை கடக்க முயன்றாள்.

சாலையின் இருபுறமும் பார்த்து விட்டே மற்றவர்கள் சாலையில் இறங்கி நடக்க, நான்கைந்து பள்ளிக் குழந்தைகளும் அவளோடு நடந்து வந்தது.

அதிவேகமாய் வந்து கொண்டிருந்த கறுப்பு நிற ஸ்கார்ப்பியோவைக் கண்டு மற்றவர்கள் மிரண்டு ஒதுங்க ஒரு குழந்தை மிரட்சியாய் திணறி விலகும் முன் காருக்குள் விழுந்தது.

க்கிரிய்ச்ச் - என பிரேக்கிட்டு கார் நிற்க பாரதி வீறிட்டாள்.

ஐயோ குழந்தை! காதுகளை இறுக மூடிக் கொண்டு வீறிட்டவளை சஞ்சய் அனிச்சையாய் ஏறிட்டான்.

பச்சை நிற ஆடையில் குளிர்ந்த சோலை போல் நின்றவளை சில கணநேரம் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்க, அதற்குள் கூட்டம் சேர்ந்து காரின் கண்ணாடியைத் தட்டத் தொடங்கியது.

அதிர்ச்சியில் இறங்கிய ஜெகனை மற்றவர்கள் மொய்த்துக் கொள்ள பதறிப்போய் இறங்கினான் சஞ்சய்.

ஏய் விடுங்க அவனை. விடுங்கன்னு சொல்றேனில்ல?

ஏன்டா? கார்ல வந்தா கண்ணு தெரியாது? என்னவோ பிளைட்ல வர்ற மாதிரி பறக்குற?

காரை நொறுக்குங்கடா....-என ஆளாளுக்கு எகிற, அவர்களை அலட்சியமாய் ஒதுக்கி விட்டு காரின் முன் பகுதிக்கு வந்தான்.

காரின் சக்கரத்திற்கு முன்பாகவே குழந்தை விழுந்திருக்க, ஒரு நிம்மதி பெருமூச்சோடு குனிந்தான். அதற்குள் அவனை விலக்கி விட்டு குழந்தையை வாரியெடுத்தாள் பாரதி.

பஞ்சு போல் இருந்த கையிலும் கால்களிலும் கரடு முரடான சாலை சிராய்த்திருக்க ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. காயங்களைக் கண்டதும் குழந்தையின் அழுகை அதிகரிக்க, அதை தோளில் போட்டு தட்டிக் கொடுத்தவாறே உஷ்ணமாய் எழுந்தாள் பாரதி.

அறிவில்ல? ரோட்டுல போகும்போது நிதானமா போகணும்னு தெரியாதா? என்ன தண்ணியடிச்சுட்டு ஓட்டுனியா?- தன்னை நோக்கி ஆவேசமாய் கேட்டவளிடம் சஞ்சய் மறுப்பாய் தலையசைக்கும் முன் அவளே தொடர்ந்தாள்.

இவ்வளவு டிராபிக்ல ஜெட் வேகத்தில் போனால் ரொம்ப பெரிய வீரன்னு நினைப்பாங்களா? பக்கத்தில் ஸ்கூல் இருக்கே. போர்டு



பாக்கலே? படிக்கத் தெரியாதா?

ஹலோ ஒன் மினிட்

ஷட் அப்! முதல்ல காரை எடுங்க. ஹாஸ்பிடலுக்கு போகணும்.

என்ன ஹாஸ்பிடலுக்கா?

ஆமா குழந்தைக்கு அடிபட்டிருக்கே! கண்ணு தெரியலை? - பாரதி சீற குழந்தை வலியில் மம்மி.... மம்மி... என அழுதது.

சரிடா! சரிடா செல்லம் இப்ப ஹாஸ்பிடல் போயிடலாம். மிஸ்டர்! இப்படி மரம் மாதிரி நின்னா எப்படி? வண்டியை எடுங்க

என உத்தரவிட்டவளை வியப்பாய் ஏறிட்டான் சஞ்சய். இது இந்தப் பெண்ணின் குழந்தையா?

ஹலோ மேடம்! ஹாஸ்பிடலுக்கு வேற ஏதாவது வண்டி பிடிச்சு போங்க. நான் அர்ஜெண்டா போகணும்.

வாட்?

ஏற்கனவே எனக்கு லேட்டாச்சு. நீங்க ஏதாவது ஒரு ஆட்டோ அல்லது கார் பிடிச்சு....

என்ன மிஸ்டர்? விளையாடுறீங்களா?

யார் நானா?

பின்னே? குழந்தையை காரால மோதிட்டு...

ஹலோ நான் மோதல. குழந்தை தான் குறுக்கே வந்து விழுந்தது.

நீங்க வேகமா வந்ததால் தான் குழந்தை விழுந்தது!

அதுக்கு நான் என்ன பண்றது? உங்க குழந்தையை நீங்க தான் பத்திரமா பார்த்துக்கணும். இப்படி பொறுப்பில்லாம விட்டது உங்க தப்பு.

என்ன?

ரோட்டை கிராஸ் பண்ணும் போது குழந்தைகளை கையில் பிடிச்சுக்கணும்னு தெரியாதா? நீங்க கேர்லஸ்சா இருந்திட்டு எவனாவது இளிச்சவாயன் கிடைச்சா இப்படி கூட்டம் போட்டு மிரட்டி எவ்வளவு கறக்க முடியுமோ அவ்வளவு கறந்திட வேண்டியது! இதெல்லாம் என் கிட்ட நடக்காது. வழிவிடுங்கய்யா. ஜெகன் காரை எடு - அலட்சியமாய் சொல்லி விட்டு காரில் ஏற முயன்றவனின் சட்டையைப் பற்றித் திருப்பினாள்.

யோவ் இப்ப என்ன சொன்ன?

என்னம்மா மரியாதையில்லாம பேசுற? சட்டையை விடு.

என்னைப் பார்த்து என்ன சொன்ன? நான் ப்ராடா?

நான் எங்கே சொன்னேன்?

பின்னே? என்னவோ கூட்டம் போட்டு மிரட்டி பணம் பறிக்கேன்னு...

ஹய்யா! வாட்ஸ் திஸ்? ஏன் இப்படி பிரச்சனை பண்றீங்க? எனக்கு ஆயிரம் வேலை இருக்கு.

நாங்க மட்டும் வேலை வெட்டியில்லாமலா இருக்கோம்? முதல்ல குழந்தையை ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டு போகணும். வண்டியை எடுங்க.

''நான் தான் சொல்றேனே. எனக்கு வேலை இருக்கு''

''என்ன மனுஷன்யா நீ? ஒரு பச்சப்புள்ள அடிபட்டு கத்துது. உன் மனசுல இரக்கம் வரலையா? பணம், காசு இருந்தா மனிதாபிமானம் செத்திடுமா? ச்சே!''- வெறுப்பாய் கூறி விட்டு குழந்தையோடு திரும்பி நடந்தாள். கூட்டம் கலைந்து செல்லத் துவங்கியது.

''என்ன சார் நீங்க? கார்ல போனா அஞ்சு நிமிஷத்தில ஒரு ஹாஸ்பிடல் வந்திடும். இறக்கி விட்டுட்டு போயிடலாம் சார்''- என்றான் ஜெகன்.

''இல்ல ஜெகன்! ஏற்கனவே லேட்டாயிடுச்சு''

''போற வழியில இறக்கிடலாம் சார். பாவம் அந்த லேடி''

''யாரு? இவளா பாவம்? என்னல்லாம் பேசினா... நீயும் தானே கேட்ட?''



''உங்க மனைவி என்ன சார் வாயே திறக்க மாட்றாங்க?''

''எங்க அம்மாவைப் பார்த்தால் திட்றதுக்கு வாயைத் திறந்திடுவா டாக்டர். கொஞ்சம் இருங்க அம்மாவை அழைச்சிட்டு வந்துடறேன்''

-சீர்காழி வி.ரேவதி.

''பேசிட்டு போகட்டும் சார். இதோட விட்டாங்களே''

''என்ன?''

''ஆமா சார்! அந்தப் பொண்ணு பாட்டுக்கு போலீசுக்கு போயிருந்தால்''- ஜெகன் சொல்லி முடிப்பதற்குள் தோளில் குழந்தையோடு ஒரு கையால் போனை ஆன் செய்து யாரிடமோ பேசிக் கொண்டே காரின் எண்களை கூறினாள் பாரதி.

''ஐயோ சார்! அவங்க போலீஸ்கிட்டதான் பேசுறாங்க போலிருக்கு''- ஜெகன் பதறினான்.

''ஓ! நோ''- பதட்டமாய் அவளை நெருங்கினான் சஞ்சய்.

''ஹலோ மேடம்! என்ன பண்றீங்க?''

''ம்? சம்பந்தப்பட்டவங்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டாம்?''



''சாரிங்க! நான் ஏதோ டென்ஷன்ல பேசிட்டேன். பிளீஸ்! மனசில வெச்சுக்காதீங்க''

''சார்! உங்களுக்கு ஏதோ அவசர வேலை இருக்குன்னீங்களே? நீங்க போங்க. வரவேண்டியவங்க உங்களை தேடி வருவாங்க''

''மேடம் பிளீஸ்! சாரி! சாரி! வாங்க! நான் உங்களை ஹாஸ்பிடல்ல டிராப் பண்ணிடுறேன்'' என்ற நேரம் எதிர் திசையிலிருந்து இளம் பெண் ஒருத்தி பதட்டமும் கண்ணீருமாய் ஓடி வந்தாள்.

''ஐயோ! என் குழந்தை. எம்புள்ளைக்கு என்ன ஆச்சு. காவ்யா குட்டி''- என்றவாறே கதற, பாரதியின் தோளில் இருந்த குழந்தை தாயைக் கண்டதும் திரும்பி வீறிட்டது.

''அம்மா!''

''காவ்யா குட்டி! என்னடா ஆச்சு? அம்மா பிஸ்கட் வாங்கிட்டு வரதுக்குள்ள ஏன்டா ஓடி வந்தே? ஐயோ! உடம்பெல்லாம் ரத்தமா இருக்கே. மேடம்! என் பிள்ளைக்கு என்னாச்சு?''- வந்தவள் கதறித் துடிக்க, பாரதி அவளிடம் நடந்தவற்றை விளக்கி, சமாதானப்படுத்தினாள். சஞ்சய் மீண்டும் திகைத்தான்.

''அப்போ இது இவ குழந்தை இல்லையா?'' திகைப்போடு துளி நிம்மதியும் உண்டானது சஞ்சய்க்கு.




**நான் உனை பார்த்தது**
**பூர்வஜென்ம பந்தம்**
**நீண்ட நாள் நினைவிலே**
**வாழும் இந்த சொந்தம்!**

விடாப்பிடியாய் நின்று சஞ்சயை மிரட்டி அதட்டி குழந்தையின் தாயோடு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டுத்தான் தன் வேலையை கவனிக்க புறப்பட்டாள் பாரதி.

வேறு வழியின்றி பற்களைக் கடித்தவாறே மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று குழந்தைக்கான டிரீட்மெண்ட் முடியும் வரை காத்திருந்து பில்லை செட்டில் பண்ணுவதற்குள் அலுவலகத்திலிருந்து நான்கு முறை அழைப்பு வந்தது.

இயல்பாகவே சஞ்சய்க்கு அத்தனை பொறுமை கிடையாது. பணிபுரிவதில், பயணிப்பதில், பேசுவதில், சாப்பிடுவதில் கூட பொறுமையில்லாதவன்.

ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்காமல் உழைப்பவன். இன்று கிட்டத்தட்ட இரண்டு மணிநேரமாய் சச்சரவு, மருத்துவமனை அலைச்சல், இன்டர்வியூ நடத்த காலதாமதமாகி விட்டது என மொத்தமாய் கொதித்து போயிருந்தான்.

இவை எல்லாவற்றையும் விட அந்தப்பெண் சொன்னது இன்னும் கடுப்பை அதிகமாக்கிக் கொண்டிருந்தது.

''இதோ பாருங்க மிஸ்டர்! சும்மா ஹாஸ்பிடல் வாசல்லயே இறக்கிட்டு எஸ்கேப் ஆயிடாதீங்க. குழந்தைக்கு டிரீட்மெண்ட் முடிஞ்சதும் அதுக்கான செலவை நீங்க தான் ஏத்துக்கணும்.

அப்புறம் இவங்களை வீட்ல கொண்டு போய் டிராப் பண்ணிட்டு உங்க வேலையை கவனிக்கப் போங்க. புரியுதா? நான் கூட உங்க கூட வந்துடலாம். பட் ஒரு முக்கியமான வேலையா போயிட்டு இருக்கேன்''- என்றவள் அந்த பெண்ணிடம் திரும்பினாள்.

''சிஸ்டர்! உங்க பொண்ணோட ஐடென்டி கார்டுல இருந்து உங்க வீட்டு போன் நம்பரை என் செல்லுல பதிவு பண்ணிட்டேன். இன்னும் ஒன் அவர்ல உங்களுக்கு போன் பண்றேன். இவர் பில் பே பண்ணலன்னா எங்கிட்ட சொல்லுங்க. நான் பார்த்துக்கிறேன்''- என சஞ்சயை பார்த்தவாறே எச்சரித்து விட்டுத்தான் சென்றாள்.

சஞ்சயின் சிவந்த முகம் கோபத்தால் மேலும் சிவந்தது. எத்தனை திமிர்? என்னையா மிரட்டி விட்டு போகிறாய்? இரு. என் கண்ணில் படாமலா போய் விடுவாய்?

பற்களை கடித்துக் கொண்டு இருப்பு கொள்ளாமல் நடை போட்டுக் கொண்டிருக்க, மீண்டும் அவனது அலைபேசி அழைத்தது. கோபமாய் எடுத்தான்.

''ஹலோ!''

''சார்! இன்டர்வியூக்கு எல்லாரும் வந்திட்டாங்க''

''எல்லாரையும் போகச்சொல்லு''- எரிந்து விழுந்தான்.



''சா...ர்?''

''நான் இப்போ வெளியே இருக்கேன். எப்ப வருவேன்னு தெரியாது. வந்தாலும் என்னால எதிலயும் டிசைட் பண்ண முடியாது. இன்னொரு நாள் பார்த்துக்கலாம்''

''இப்போ... அவங்ககிட்டே... என்ன சொல்றது சார்?''

''எல்லாத்தையும் எங்கிட்டயே கேளு. ஏன் உனக்கு மூளை இல்லையா? எதையாவது சொல்லி அனுப்பு''

''ச... சரி சார்''

''ரெண்டு நாள் கழிச்சு வரச்சொல்லு''

''சார்! நாளை மறுநாள் நீங்க ஹைதராபாத் போகணும் சார்!''

''ஓ! ஷிட்! சரி. நாளைக்கு மார்னிங் வரச்சொல்லு. ஷார்ப்பா டென் ஓ கிளாக் ஸ்டார்ட்டாகிடும்னு சொல்லி அனுப்பு''

''யெஸ் சார்!''

''போனை வை''- என தொடர்பை துண்டித்த நேரம் அறைக்கதவை திறந்து கொண்டு அந்தப் பெண் கையில் மருந்து சீட்டோடு வந்தாள். அவளை நெருங்கினான்.

''என்னாச்சு? டாக்டர் என்ன சொன்னார்?''

''சும்மா லேசான காயம்தானாம். பயப்பட வேண்டாம்னு சொன்னார்''

''ஓ! தேங்க் காட்''- நெஞ்சில் கை வைத்து கண்ணை மூடி நிம்மதியாய் மூச்சு விட்டான்.

''சார்!''

''ம். சொல்லுங்க''

''நான் மருந்து வாங்கிட்டு வீட்டுக்கு போயிடுறேன். நீங்க கிளம்புங்க சார்''

''ஐயோ! இருக்கட்டும். பீஸ் எவ்ளோன்னு சொன்னீங்கன்னா நான் பே பண்ணிடுவேன்''

''இரு நூறு ரூபாய் தான் சார். எங்கிட்ட இருக்கு. நானே கட்டிடுறேன்''

''வேண்டாம் சிஸ்டர்! சும்மாவே அந்தப் பொண்ணு அத்தனை ஆர்ப்பாட்டம் பண்ணினாள். இதுல பில் பே பண்ணலன்னு தெரிஞ்சா என்ன பிரச்சனை செய்வாளோ நானே கட்டிடுறேன் ஜெகன்''

''சார்?''

''இந்தா இதை பே பண்ணிட்டு மெடிஸனையும் வாங்கிட்டு வந்

திடு''- என மருந்து சீட்டோடு ஐநூறு ரூபாய் தாள் ஒன்றையும் ஜெக னிடம் நீட்டினான்.

''சரி சார்''- என ஜெகன் நகர மீண்டும் அந்தப் பெண்ணிடம் திரும் பினான் சஞ்சய்.

''குழந்தை எப்படி இருக்கா?''

''ஊசி போட்டுட்டாங்க. படுக்க வெச்சிருக்கேன்''

''சாரி சிஸ்டர்! நாங்க மோதல. உங்க குழந்தை தான் குறுக்கே வந் திட்டா''

''மன்னிச்சிடுங்க சார். எப்பவும் என்கூடத்தான் வருவாள். இன் னிக்கு ஸ்நாக்ஸுக்கு பிஸ்கட் வேணும்னு கேட்டாள். பக்கத்து கடையில வாங்கிட்டு இருக்கும்போது இவ எப்படியோ ஓடி வந் திட்டா. சாரி சார்! உங்களுக்குத்தான் ரொம்ப சிரமம் கொடுத்திட் டோம். சாரி''- அந்தப்பெண் மன்னிப்பு கேட்க, லேசாய் புன்னகைத் தான்.

''இட்ஸ் ஓ.கே. ஆமா! அந்தப் பொண்ணு யாரு? உங்க உறவா?''



**''நம்ம அரசர் பாம்புக்குப் பயப்படுற விஷயம் எதிரி நாட்டு அரச னுக்குத் தெரிஞ்சுடிச்சு ன்னு நெனைக்கிறேன்... பிளாஸ்டிக் பாம்பைக் தூக்கிப் போட்டு நம்ம அரசரை பயமுறுத்தறான், பாருங்க...!''**

**-ஆர்.எம்.வடுகநாதன், வேதாரண்யம்**

''யாரு சார்?''

''அதான்... உங்க குழந்தையை தோள்ல போட்டுட்டு இருந்தாளே அந்தப் பொண்ணு''

''தெரியல சார். நான் இதுவ ரைக்கும் அந்தப் பொண்ணை பார்த் ததே இல்ல''

''ஈஸிட்?''

''ஆமா சார்! யாரு பெத்த பிள்ளையோ? அத்தனைக் கூட்டத்தில எம்புள்ளைய காப்பாத்தியிருக்கு. எல் லாரும் அவங்க வேலையை பார்த் திட்டு போயிட்டாங்க. அந்தப் பொண் ணுக்கு நல்ல மனசு சார். அழுக்கு ஒட்டுமே ரத்தம் ஒட்டுமேன்னு பார்க் காம எம்புள்ளைய தூக்கி தம்புள் ளையா அணைச்சி தேத்தியிருக்கு''- அந்தப்பெண் நெகிழ்வாய் சொல்ல, அதுவரை இருந்த கோபம் லேசாய்



தணியத் துவங்கியது.

ஆமாம்! மற்றவர்கள் அடிங்கடா- உடைங்கடான்னு வாய்ச்சவடா லுக்கு மிரட்டி விட்டு அவரவர் வேலையை கவனிக்க போய் விட்டார் களே. இந்தப் பெண் மட்டும்தானே குழந்தையை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டுமென்று பதறினாள்.

சாலையில் கிடந்த குழந்தையை வாரி எடுத்து தோளில் சாய்த்துக் கொண்டாளே. நான் கூட அது அவள் குழந்தை என்றல்லவா நினைத் தேன்?

யாரோ ஒரு பெண் பெற்ற குழந்தைக்காக பதறி, தன்னிடம் சண்டையும் போட்டாளே. ம்... பெரிய ஆள் தான்- மனதில் மெச்சிக் கொண்டான்.

''சார்! மருந்து''- என வந்த ஜெகனிடம் மருந்துகளையும், பில்லையும் மீதமிருந்த சில்லறையையும் வாங்கி அந்தப் பெண் ணிடமே கொடுத்தான்.

''குழந்தையை அழைச்சிட்டு வர்றீங்களா? கார்ல டிராப் பண்ணிடு றேன்''

''வேண்டாம் சார். என் ஹஸ்பண்டுக்கு போன் பண்ணிட்டேன். இப்ப வந்திடுவார். நீங்க கிளம்புங்க''

''இல்ல... அப்போ''

''நீங்க கிளம்புங்க சார். நாங்க போயிடுவோம்''

''தேங்க்ஸ். குழந்தையை பார்த்துக்கங்க. வர்றேன்''

''சரி சார். ரொம்ப நன்றி சார்''

''எதுக்கு?''

''இவ்வளவு தூரம் வந்து ஹெல்ப் பண்ணினதுக்கு இல்லேன்னா தனியா ரொம்ப சிரமப்பட்டிருப்பேன்''- நன்றியோடு அந்தப் பெண் கை கூப்ப, திணறிப் போனான் சஞ்சய்.

தான் செய்த சிறிய உதவிக்கு இத்தனை மதிப்பா? மனம் சிலிர்த் தது. மெல்லிய புன்னகையோடு தலையசைத்து விடை பெற்று காரில் ஏறிய பிறகும் அந்தப்பெண் கை கூப்பியது மனதை நிரடிக் கொண்டே இருந்தது.

இந்த நன்றிக்கு உரியவள் அந்தப் பெண் அல்லவா? யாரவள்? என்ன பெயர் எந்த ஊர்? எங்கே வசிக்கிறாள்? இனி எப்போது பார்ப் போம்? என அவனது மனம் அவளையே சுற்றி பறக்கத் துவங்கியது.

ஓட்டமும் நடையுமாய் பாரதி அந்த அலுவலகத்தை அடைந்த

போது நான்கைந்து இளைஞர்களும், இளம்பெண்களும் வெளியேறிக் கொண்டிருந்தனர்.

''ஐயோ! இன்டர்வியூ முடிந்து விட்டதா?''- பதட்டமாய் அலுவலகத்திற்குள் நுழைந்தாள் பாரதி. எதிர்பட்ட இளைஞனை நெருங்கினாள்.

''எக்ஸ்கியூஸ் மீ சார்''

''எஸ்?''

''சார்! இன்டர்வியூ முடிஞ்சிடுச்சா?''

''நீங்க?''

''இன்டர்வியூ அட்டெண்ட் பண்ண வந்திருக்கேன்''- என்றவளை மேலும் கீழுமாய் பார்த்து விட்டு சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தை பார்த்தான் அவன்.

''இப்ப டைம் என்ன?''

''டைம்... பதினொன்றரை சார்''

''பத்து மணி இன்டர்வியூக்கு இப்பத்தான் வர்றதா?''

''சாரி சார். வர்ற வழியில ஒரு சின்ன ஆக்ஸிடென்ட்''

''ஏம்மா! வேலையில சேர்றதுக்குள்ளயே இப்படி லேட்டா வந்ததுக்கு சாக்கு போக்கு சொல்றீங்களே. உங்களுக்கு எப்படி வேலை கொடுக்க முடியும்?''- சற்று முன்னரே தன்னை வறுத்தெடுத்த முதலாளியின் மீதிருந்த கோபத்தை பாரதியிடம் காட்டினான் ராஜேந்திரன்.

''சார் சார்! அப்படியெல்லாம் சொல்லாதீங்க சார். நிஜமாவே ஒரு ஆக்ஸிடெண்ட் ஆனதில குழந்தைக்கு அடிபட்டிடுச்சு. அதை ஹாஸ்பிடல்ல சேர்க்க...''

''ம்ப்ச்! எனக்கெதுக்கும்மா உன் கதை. கிளம்பு''

''சார்!''

''போம்மா! ஏற்கனவே இங்கே ஏகப்பட்ட டென்ஷன். இதுல நீ வேற''- என தன் இருக்கைக்கு செல்ல முனைந்தவனை பார்த்து குரலை உயர்த்தினாள்.

''ஹலோ மிஸ்டர்!''

''என்னம்மா?''

''இந்த கம்பெனிக்கு நீங்க தான் எம்.டி.யா?''

''இல்ல. மேனேஜர்''

''நாங்க உங்க எம்.டி.யைப் பார்க்கணும்''

''ஏ... எதுக்கு?''

''அவர்கிட்டயே நியாயம் கேட்கிறேன்''

''நியாயம் கிடைக்க இது என்ன கோர்ட்டா? போம்மா''

''மிஸ்டர்! நான் லேட்டா வந்ததுக்கான ரீசனை நான் சொல்லிட்டேன். என்னை இன்டர்வியூ பண்ணியே ஆகணும்''

''அட! யாரும்மா நீ? எனக்கே உத்தரவு போடுற?''

''வெறும் மானேஜர் தானே நீங்க. உங்க எம்.டி. சொல்லட்டும். எம்.டி.யோட ரூம் எது?''- பாரதியின் கேள்வியில் மெய்யாகவே பதறிப் போனான் ராஜேந்திரன்.

எம்.டி. எந்த நேரத்திலும் வந்து விடலாம். இந்த பெண் சட்டமாய் நிற்கிறாளே. இந்த நேரம் அவன் வந்து விட்டால்...

''இதோ பாரும்மா... எம்.டி.யை எல்லாம் பார்க்க முடியாது''

''ஏன்?''

''அவர் இங்கே இல்லை''

''அப்போ... இன்டர்வியூ பண்ணினது?''

''இங்கே எல்லா இன்ஜார்ஜும் நான் தான். அவருக்கு இதே மாதிரி இன்னும் மூணு கம்பெனி இருக்கு. எப்ப வருவார்னு சொல்ல முடியாது. கிளம்பு. கிளம்பு''- என்றவாறு தனது கேபினுக்குள் நுழைந்து கொண்டான்.

''அப்படியா?- என்றவள் ரிசப்ஷனை அடைந்தாள்.

''எக்ஸ்கியூஸ் மீ''

''யெஸ்''

''உங்க எம்.டி. எப்போ வருவார்?''

''சார் வெளியே போயிருக்காங்க. எப்ப வருவார்னு சொல்லல''

''நான் அவரைப் பார்க்கணுமே''

''என்ன விஷயமா?''

''வேலை விஷயமா! இன்டர்வியூக்கு''

''ஓ! சாரி! இன்டர்வியூ நாளைக்கு பத்து மணிக்கு மாத்தியிருக்கு. நீங்க நாளைக்கு வாங்களேன்''- ரிசப்னிஸ்ட் புன்னகையோடு சொல்லி விட்டு ஒலித்துக் கொண்டிருந்த தொலைபேசியை எடுத்து பேச, குழப்பமாய் திரும்பினாள் பாரதி.

''நாளைக்குத்தான் இன்டர்வியூவா? பிறகேன் அந்த மானேஜர் அப்படிச் சொன்னான்? இரு! நாளைக்கு வந்து உனக்கு வேட்டு வைக்கிறேன்''- மனதிற்குள் சூளுரைத்துக் கொண்டே அவள் வெளியேறிய அடுத்த நிமிடம் சஞ்சயின் கறுப்பு நிற ஸ்கார்ப்பியோ கார் உள்ளே நுழைந்தது.

## 4

**பறவைகளில் அவள் மணிப்புறா**
**பாடல்களில் அவள் தாலாட்டு**
**கனிகளிலே அவள் மாங்கனி**
**காற்றினிலே அவள் தென்றல்!**

தொலைக்காட்சி முன் அமர்ந்து வேண்டா வெறுப்பாய் ஒவ்வொரு சேனலாய் மாற்றிக் கொண்டிருந்த பாரதி தந்தையின் வருகையை உணர்ந்து தொலைக்காட்சியை நிறுத்தி விட்டு வெளியே வந்து வாயிற் கதவை திறந்து வைத்தாள்.

தன் இருசக்கர வாகனத்தை தள்ளிக் கொண்டு வந்தவாறே மகளிடம் கேட்டார் கதிர்வேலன்.

''என்னம்மா! தம்பி டியூசன் முடிஞ்சு வந்திட்டானா?''

''வந்திட்டாம்ப்பா. படிச்சிட்டு இருக்கான்''- என்றவாறே தந்தை கொண்டு வந்த சாப்பாடு கூடையை வாங்கிக் கொண்டாள். மிளகாய் பஜ்ஜியின் மணம் நாசியைத் தீண்ட மூச்சை இழுத்தாள்.

''மிளகாய் பஜ்ஜியாப்பா?''

''ஆமாம்மா! சூடா இருக்கு. சாப்பிடுங்க''

''கை, கால் அலம்பிட்டு வாங்கப்பா. சேர்ந்தே சாப்பிடலாம்''- என்றவாறு வீட்டுக்குள் நுழைந்ததும், படித்துக் கொண்டிருந்த மோகன், தையல் மிஷினில் இருந்த உமா, அடுக்களையில் இருந்த செங்கமலம் என மொத்தமாய் ஹாலில் கூடினர்.

''இன்றைய ஸ்பெஷல் மிளகாய் பஜ்ஜி''

''ஹேய்! அம்மா! சீக்கிரமா காபி கொண்டாங்க''

''உமாக்கா! நீயும் வா. இல்லன்னா இந்த தடியன் எல்லாத்தையும் காலி பண்ணிடுவான்''

''போடி கஜினி! நீ காலி பண்ணாம இருந்தா சரி''



''அதென்னடா தம்பி கஜினி?''

''அம்மா! இவளும் அவரை மாதிரியே தொடர்ந்து போராடுறாளே வேலைக்காக. அதான் இந்தப் பேர் வெச்சேன்? பொருத்தமா இருக்கில்ல?''

''டேய்! நானாவது வேலைக்காக போராடுறேன். ஆனா நீ...''

''என்ன? உங்க சண்டை ஆரம்பமாயிடுச்சா?''

ஈரமுகத்தை டவலால் துடைத்துக் கொண்டே வந்த தந்தையை கண்டதும் மோகன் சிரித்தான்.

''அப்பா! வழக்கம் போல இன்னிக்கும் உங்களுக்கு நூறு ரூபா தண்டம்''

''என்னப்பா சொல்ற?''

''அதான் இந்தக் குரங்கு வாங்கிட்டு போச்சே''

''மோகன் அக்காவை அப்படியெல்லாம் சொல்லக்கூடாது' இந்தா காபிய குடி''- என அனைவருக்கும் காபியை ஊற்றி நீட்டினாள் உமா.

சூடான பஜ்ஜியும், காபியும் கிடைத்ததில் அனைவரும் மவுனமாகி விட, காபி குடித்து முடித்ததும் கேட்டார் தந்தை.

''பாரதி! இண்டர்வியூ என்னாச்சும்மா?''

''வழக்கம் போலத்தான்''- என்ற தம்பியை முறைத்தாள்.

''நாளைக்கு மாத்தி வெச்சிருக்காங்கப்பா''

''ஏனாம்?''

''அது தெரியல. நாளைக்கு போனால் தான் தெரியும்''

''அப்பா! இவ ரீல் விடுறாப்பா''

''என்னய்யா சொல்ற?''

''இண்டர்வியூக்கு போறேன்னுட்டு மெயின் ரோட்டுல நின்னு ஒரு கார்க்காரன்கிட்ட சண்டை போட்டிருக்கா. பத்து மணிக்கு போக வேண்டியது பனிரெண்டு மணிக்கு போனால் எப்படி வேலை கிடைக்கும்?''

''என்ன? சண்டையா? பாரதி! என்னம்மா இது?''- பதறினார் கதிர்வே



**''நேற்று எனக்கும் என் மாமியாருக்கும் சரியான சண்டைடீ''**

**''இப்ப அவுங்க உயிரோடு இருக்காங்களா, இல்லையாடீ?''**

**-வி.ரேவதி, தாம்பரம்.**

லன்.

''அப்பா! இந்த குண்டன் சும்மா பயமுறுத்துறான்ப்பா. நான் எந்த சண்டையும் போடல''

''ஏன்டி பொய் சொல்ற? நீ அம்மாகிட்ட பேசும்போது நானும் கேட்டேன்''

''அதானே! படிக்கிறத தவிர மிச்ச எல்லா வேலையும் செய்வியே! போடா! போய்ப்படி''

''ஹூம்''- என்று முறைத்து விட்டு படிக்கும் அறைக்கு சென்றதும் தந்தையின் அருகே வந்து அமர்ந்து காலையில் நடந்தவற்றை விவரித்தாள் பாரதி.

பொறுமையாய் கேட்டவர் மகளின் துணிவையும் பரிவையும் கண்டு மன மகிழ்ச்சியடைந்தாலும் லேசாய் பயமும் தோன்றிட மகளது தலையை பரிவாய் வருடினார்.

''உனக்கேன்மா இந்த வேலையெல்லாம்?''

''அப்பா!''

''நீயோ வயசுப்பொண்ணு. இப்படி நடுரோட்ல நின்னு சண்டை போட்டா பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க?''

''அதுக்காக.. கண்முன்னால ஒரு குழந்தை அடிபட்டு கிடக்கும் போது பார்த்திட்டு சும்மா போக முடியுமா?''

''ஏன்டி! ரோட்ல ஆயிரம் பேர் போவாங்களே. அதுல யாராவது இதைச் செய்தாங்களா? உனக்கு மட்டும் என்ன அக்கறை?'' - செங்கமலம் கடிந்தாள்.

''காலம் மாற மாற மனிதாபிமானம் செத்துப் போச்சும்மா. இப்படி கொஞ்ச நஞ்சம் இருக்கிறதையும் நீங்க சாகடிச்சிடாதீங்க.''

''பாரதிம்மா! நீ காப்பாத்தினது நல்ல விஷயம்தான். ஆனா ஏன் சண்டை போட்டன்னுதான் கேட்கிறேன்.''

''இல்லப்பா! அவன் கார்ல தானே மோதிச்சு. ஆனா அவனுக்கு எந்த கவலையும் இல்லப்பா. பதறக்கூட இல்ல.''

''எல்லாரும் உன்னை மாதிரியே இருப்பாங்களா?''

''இருக்கணும்மா. பணம் காசு இன்னைக்கு இருக்கும் போகும். ஆனா மனசுல ஈரம் இருக்கணும்.''

''சரி! கடைசியில என்னதான் ஆச்சு?''

''இன்டர்வியூக்கு போகும்போது பதினோரு மணி தாண்டிடுச்சு.





நாளைக்கு வரச் சொல்லியிருக்காங்க.''

''பாரதிம்மா!''

''என்னப்பா?''

''நீ ஏம்மா வெளியே வேலை தேடி அலையணும்? பேசாம அக்கா கூட உட்கார்ந்து தையல் கத்துக்கம்மா.''

''என்னப்பா நீங்க? என் திறமையையெல்லாம் முடக்கி போடச் சொல்றீங்களா?''

''என்னம்மா சொல்ற?''

''ஆமாம்ப்பா. நான் வேலைக்குப் போகணும். நிறைய கத்துக்கணும். என்னால அக்கா மாதிரி ஒரு இடத்தில உட்கார்ந்து வேலை செய்ய முடியாது. சும்மா பம்பரம் மாதிரி சுத்திட்டே இருக்கணும்.''

''அதெல்லாம் சரிதான். ஆனா உன் வாயை அடக்கமாட்டேங்கிறியே'' - தாய் குறைபட்டுக் கொள்ள பாரதியின் முகம் மாறியது.

''அடக்கமா இருந்து அக்கா என்னம்மா சாதித்தாள்? ரொம்ப அடக்கமா அமைதியா இருந்ததாலதானே அவளை இப்படி மூலையில ஒடுங்க வெச்சிட்டாணுங்க'' - கண்கள் சிவக்க சொன்ன தங்கையை திகைப்பாய் ஏறிட்டாள் உமா.



''எதிரி நாட்டு மன்னனுக்குத் திமிர் அதிகமாயிடிச்சு, மன்னா... நாம தூது அனுப்பின புறாவைச் சமைச்சுச் சாப்பிட்டுட்டு, அதோட எலும்பு களையெல்லாம் பார்சல் பண்ணி அனுப்பியிருக்கிறார்.பாருங்க...!''

**-ஆர்.எம்.வடுகநாதன்,**
**வேதாரண்யம்**

''அவ மட்டும் என்னை மாதிரி துணிச்சலா இருந்திருந்தால் இவளை விட்டு இன்னொருத்தியை தேடிப்போயிருப்பானா இவ புருஷன்?''

மற்றவர்களின் முகமும் கலங்கிப் போய்விட உமாவின் விழிகள் நீரைச் சொரிந்தன.

''நீ ஏன்க்கா அழறே? உன்னை அழ வெச்சிட்டு போனான் பாரு. அவன் தான் அழணும். அழுதிட்டு இருக்கான்.''

''பா..ர..தி!''

''ஆமாக்கா! கல்யாணமாகி ரெண்டு வருஷமா உனக்கு குழந்தை இல்லன்னுதானே உன்னை விட்டுட்டு இன்னொருத்திய கட்டினான்? அவ



மட்டும் பெத்துட்டாளா என்ன?''

ஆனா அவ உன்னை விட தைரியசாலி. செக்-அப் பண்ணியே ஆகணும்னு பஞ்சாயத்து பண்ணி ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டு போயிட்டா.''

''எ..ன்..ன?''

''ம். ரிப்போர்ட்ல அவனுக்குத்தான் தகப்பனாக தகுதி இல்லன்னு சொல்லிட்டாங்களாம்.''

''அய்யோ!'' - செங்கமலம் பதறினாள்.

''இப்ப அவன் நிலமை உன்னை விட மோசமாப் போச்சு தெரியுமா?''

''ஏன்? என்னாச்சு?''

''என்ன ஆகும்? அவன் உன்னை என்ன சொல்லி இங்கே அனுப்பினானோ அதே குறையை சொல்லி அவனோட புதுப்பொண்டாட்டி கோர்ட்டுக்கு போயிருக்காளாம். சீக்கிரமே டைவர்ஸ் கிடைச்சிடுமாம். இதைத்தான் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்னு சொல்லியிருக்காங்க. சீக்கிரமே நடுத்தெருவுக்கு வந்திடுவான். அப்பத்தான் என் மனசு ஆறும்'' - கொதிப்பாய் சொன்ன தங்கையின் கைகளைப் பற்றினாள் உமா.

''அப்படியெல்லாம் சொல்லாதே பாரதி''

''ஏங்க்கா? இன்னுமா அந்த ஆள் மேலே பரிதாபப்படுற?''

''இல்லடி! அதையெல்லாம் எப்பவோ விட்டுட்டேன்''

''பின்ன என்னக்கா?''

''யாரோ எப்படியோ போகட்டும். நாம ஏன் சபிக்கணும்?''

''உன்னைப் போய் விட்டுட்டு ஓட அந்த மிருகத்துக்கு எப்படி மனசு வந்தது? செய்த பாவத்தை தொலைக்கட்டும் அவன்.''

''சண்டாளப்பாவி! இவ்வளவு பெரிய குறையை வெச்சிக்கிட்டு எம் புள்ளைய மலடின்னு சொல்லிட்டானே? விளங்குவானா அவன்?''

''அதான் கைமேல பலன் கிடைச்சிருக்கேம்மா. இனிமே அவனை ஊர்ல என்ன சொல்வாங்க? ம்?''

''ஆமா! இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்?''

''ஏம்மா! இது பெரிய விஷயமா? எனக்குத்தான் ஊரெல்லாம் பிரெண்ட்ஸ் இருக்காங்களே.''

''இப்போ எங்கே இருக்கானாம்?'' - எனக்கேட்ட கணவரை அதட்டினாள் செங்கமலம்.

நாளைக்கு வரச் சொல்லியிருக்காங்க.''

''பாரதிம்மா!''

''என்னப்பா?''

''நீ ஏம்மா வெளியே வேலை தேடி அலையணும்? பேசாம அக்கா கூட உட்கார்ந்து தையல் கத்துக்கம்மா.''

''என்னப்பா நீங்க? என் திறமையையெல்லாம் முடக்கி போடச் சொல்றீங்களா?''

''என்னம்மா சொல்ற?''

''ஆமாம்ப்பா. நான் வேலைக்குப் போகணும். நிறைய கத்துக்கணும். என்னால அக்கா மாதிரி ஒரு இடத்தில உட்கார்ந்து வேலை செய்ய முடியாது. சும்மா பம்பரம் மாதிரி சுத்திட்டே இருக்கணும்.''

''அதெல்லாம் சரிதான். ஆனா உன் வாயை அடக்கமாட்டேங் கிறியே'' - தாய் குறைபட்டுக் கொள்ள பாரதியின் முகம் மாறியது.

''அடக்கமா இருந்து அக்கா என்னம்மா சாதித்தாள்? ரொம்ப அடக் கமா அமைதியா இருந்ததாலதானே அவளை இப்படி மூலையில ஒடுங்க வெச்சிட்டாணுங்க'' - கண்கள் சிவக்க சொன்ன தங்கையை திகைப் பாய் ஏறிட்டாள் உமா.

''அவ மட்டும் என்னை மாதிரி துணிச்சலா இருந்திருந்தால் இவளை விட்டு இன்னொருத்தியை தேடிப்போ யிருப்பானா இவ புருஷன்?''

மற்றவர்களின் முகமும் கலங்கிப் போய்விட உமாவின் விழிகள் நீரைச் சொரிந்தன.

''நீ ஏன்க்கா அழறே? உன்னை அழ வெச்சிட்டு போனான் பாரு. அவன் தான் அழணும். அழுதிட்டு இருக் கான்.''

''பா..ர..தி!''

''ஆமாக்கா! கல்யாணமாகி ரெண்டு வருஷமா உனக்கு குழந்தை இல் லன்னுதானே உன்னை விட்டுட்டு இன்னொருத்திய கட்டினான்? அவ



''எதிரி நாட்டு மன்னனுக்குத் திமிர் அதிகமாயிடிச்சு, மன்னா... நாம தூது அனுப்பின புறாவைச் சமைச்சுச் சாப்பிட்டுட்டு, அதோட எலும்பு களையெல்லாம் பார்சல் பண்ணி அனுப்பி யிருக்கிறார்.பாருங்க...!''

**-ஆர்.எம்.வடுகநாதன், வேதாரண்யம்**



மட்டும் பெத்துட்டாளா என்ன?''

ஆனா அவ உன்னை விட தைரியசாலி. செக்-அப் பண்ணியே ஆகணும்னு பஞ்சாயத்து பண்ணி ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டு போயிட்டா.''

''எ..ன்..ன?''

''ம். ரிப்போர்ட்ல அவனுக்குத்தான் தகப்பனாக தகுதி இல்லன்னு சொல்லிட்டாங்களாம்.''

''அய்யோ!'' - செங்கமலம் பதறினாள்.

''இப்ப அவன் நிலமை உன்னை விட மோசமாப் போச்சு தெரி யுமா?''

''ஏன்? என்னாச்சு?''

''என்ன ஆகும்? அவன் உன்னை என்ன சொல்லி இங்கே அனுப் பினானோ அதே குறையை சொல்லி அவனோட புதுப்பொண்டாட்டி கோர்ட்டுக்கு போயிருக்காளாம். சீக்கிரமே டைவர்ஸ் கிடைச்சிடு மாம். இதைத்தான் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்னு சொல் லியிருக்காங்க. சீக்கிரமே நடுத்தெருவுக்கு வந்திடுவான். அப்பத்தான் என் மனசு ஆறும்'' - கொதிப்பாய் சொன்ன தங்கையின் கைகளைப் பற்றினாள் உமா.

''அப்படியெல்லாம் சொல்லாதே பாரதி''

''ஏங்க்கா? இன்னுமா அந்த ஆள் மேலே பரிதாபப்படுற?''

''இல்லடி! அதையெல்லாம் எப்பவோ விட்டுட்டேன்''

''பின்ன என்னக்கா?''

''யாரோ எப்படியோ போகட்டும். நாம ஏன் சபிக்கணும்?''

''உன்னைப் போய் விட்டுட்டு ஓட அந்த மிருகத்துக்கு எப்படி மனசு வந்தது? செய்த பாவத்தை தொலைக்கட்டும் அவன்.''

''சண்டாளப்பாவி! இவ்வளவு பெரிய குறையை வெச்சிக்கிட்டு எம் புள்ளைய மலடின்னு சொல்லிட்டானே? விளங்குவானா அவன்?''

''அதான் கைமேல பலன் கிடைச்சிருக்கேம்மா. இனிமே அவனை ஊர்ல என்ன சொல்வாங்க? ம்?''

''ஆமா! இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்?''

''ஏம்மா! இது பெரிய விஷயமா? எனக்குத்தான் ஊரெல்லாம் பிரெண்ட்ஸ் இருக்காங்களே.''

''இப்போ எங்கே இருக்கானாம்?'' - எனக்கேட்ட கணவரை அதட் டினாள் செங்கமலம்.

''எங்கேயோ இருந்திட்டு போறான். கடங்காரன் நம்ம கண்ல படாம இருந்தால் சரிதான். எம்புள்ளைய இப்படி ஒதுக்கி மூலையில உட்கார வெச்சிட்டானே?.

நல்லா இருப்பானா அவன்? நம்ம கும்பிடுற கடவுள்தான் அவனுக்கு கூலி கொடுத்திருக்கான். ஆண்டவன் இருக்காங்க.''

''போதும்மா! இப்படியே பேசிட்டு இருந்தா நைட் சமையல் எப்பப் பண்றது? கொஞ்ச நேரத்தில மோகன் பசின்னு வந்து நிற்பான். வாங்க சமைக்கலாம்'' - எதுவும் நடவாதது போல் உமா எழுந்து செல்ல, மூவரும் இயலாமையாய் அவளை பார்த்தனர்.

''அப்பா!'' - பாரதி மெதுவாய் அழைத்தாள்.

''என்னம்மா?''

''அக்காவை இப்படியே விட முடியுமா?''

''கூடாதும்மா. விடக்கூடாது.''

''சதாசிவம் மாமாகிட்ட பேசினீங்களா?''

''அவனுக்கு சம்மதம்தாம்மா. அவன் புள்ளைகூட சரின்னு சொல்லிட்டான். ஆனா...''

''ஆனா என்னப்பா?''

''உமாவோட மனசில என்ன இருக்குன்னு தெரியாம எப்படி முடிவெடுக்கிறதுன்னு தான் தயக்கமா இருக்கு.''

''அதை நான் பார்த்துக்கிறேம்ப்பா.''

''நீயா?''

''ம். நான் அந்த ரமேஷை பார்த்து பேசறேன்.''

''அவர்கிட்ட என்னம்மா பேசப்போற?''

''பேசிட்டு சொல்றேன்''

''பார்த்துடி! இவளே இப்பத்தான் கொஞ்சநாளா அமைதியா அழாம இருக்கா. ஏதாவது பிரச்சனை ஆகிடாம.''

''அதெல்லாம் எதுவும் ஆகாதும்மா. முதல்ல எனக்கு வேலை கிடைக்கட்டும். நெக்ஸ்ட் வீக்ல அந்த ரமேஷைப் பார்த்து பேசறேன்.''

''பாரதி!'' - கதிர்வேலின் குரலில் பயம் தொனிக்க அவரது கையைப் பற்றி மென்மையாய் அழுத்தினாள்.

''பயப்படாதீங்கப்பா! இனிமே நடக்கிறதெல்லாம் நல்லதாவே நடக்கும். அக்கா வாழ்க்கையில நிச்சயமா வசந்தம் திரும்பும்'' - நம்பிக்கையோடு சொன்ன மகளைக் கண்டு திருப்தியாய் புன்னகைத்தனர் பெற்றவர்கள்.



## 5

**காண்பதெல்லாம் உன் உருவம்**
**கேட்பதெல்லாம் உனது குரல்**
**கண்களும் இமைக்க விரும்பாது**
**என் எதிரில் நீ வரும்போது!**

விடிந்ததில் இருந்தே மல்லுக்கட்டிய தம்பியிடம் எப்படியும் இந்த வேலை கிடைத்தே தீரும் என சபதம் செய்துவிட்டு வந்த பாரதிக்கு நேர்முகத் தேர்வை நடத்தும் நபரைக் கண்டதும் மொத்த நம்பிக்கையும் சிதறிப்போனது.

சுழல் நாற்காலியில் கம்பீரமாய் அமர்ந்து தன் முன் இருந்த விண்ணப்பத்தில் கவனமாய் இருந்தவனைக் கண்டதும் உடல் லேசாய் ஆட்டம் கண்டது.

இவனா? இவனா எம்.டி. போச்சு. இந்த வேலையும் தனக்கு கிடைக்கப் போவதில்லை. நேற்று இவனை காய்ச்சி எடுத்ததற்கு இன்று பிடிபிடியென்று பிடித்து விடுவான்.

கழுத்தை பிடித்து வெளியே தள்ளினாலும் ஆச்சரியமில்லை. அவனாக அனுப்புமுன் நாமே வெளியேறி விடுவதுதான் மரியாதை என்ற முடிவுடன் மெதுவாய் நழுவ முயன்றபோது சஞ்சய் நிமிர்ந்தான்.

''மிஸ் பாரதி?'' - என நிமிர்ந்தவனின் கண்கள் வியப்பாய் விரிந்தது. இவளா? இவள்தானா? இது கனவில்லையே? கண்களை அழுத்தமாய் மூடித் திறந்தான்.

அவளது உருவம் கலைந்து போகாமல் நிற்க இது கனவில்ல என்று புரிந்தது. இனி என்று காண்போமோ என ஏங்கியவன் கண்ணெதிரே வந்து நின்றதும் முகம் பிரகாசிக்க பளீரென புன்னகைத்தான்.

அந்தப் புன்னகையில் திகைத்துதான் போனாள் பாரதி. தன்னைக் கண்டதும் எரிமலையாய் சீறிவிழுவான் என எதிர்பார்த்தவள் புன்ன

கைத்தது மட்டும் அந்த திகைப்பிற்கு காரணமல்ல.

இது என்ன புன்னகை? எதிராளியை வேரோடு சாய்த்துவிடும் புன்னகை. அந்தப் புன்னகை அவளது இதயம் வரை நுழைந்து அதிரச் செய்தது. அசைவற்று நின்றவளைப் பார்த்து பளிச்சென சிரித்தான்.

''ஹலோ! வாட் எ சர்ப்ரைஸ். நீங்கள்தான் பாரதியா?''

''ஆ... மா... ஸார்''

''நேற்றே நினைத்தேன்'' - என்று அவன் சிரிக்க புரியாமல் விழித்தாள் பாரதி.

''எ.. ன்ன நினைத்தீர்கள்?''

''இல்ல.. அநியாயத்தைக் கண்டு பொங்கும்போதும் அதை தைரியமாய் தட்டிக் கேட்கும்போதும் எனக்கு பாரதியார் நினைவுதான் வந்தது. அதைச் சொன்னேன்.''

''ஓ! ச...ரி... நான் கிளம்புறேன் ஸார்''

''வ்வாட்? ஏன்?''

''இல்ல... நான் போறேன்''

''ஹலோ! உங்களுக்கு இன்னும் இன்டர்வியூ முடியலையே? அதுக்குள்ள போனால் என்ன அர்த்தம்?''

''நோ ஸார்! எப்படியும் எனக்கு வேலை கிடைக்க போறதில்ல. பிறகேன் உங்க நேரத்தை வீணாக்கணும்?'' - பாரதி தயக்கமாய் சொல்ல, புருவம் உயர்த்தினான்.

''வேலை கிடைக்காதா? ஏன் உங்ககிட்ட எந்த சர்டிபிக்கேட்ஸூம் இல்லையா?''

''நோ நோ.. எல்லாம் வெச்சிருக்கேன்.''

''வேற என்ன? எங்க கம்பெனியைப் பார்த்து பயந்திட்டீங்களா?''

''ம் ஹூம்'' - தலையாட்டினாள்.

''வேற என்ன?''

''உங்களைப் பார்த்துதான்... பயமா இருக்கு''

''என்ன? என்னைப் பார்த்தா?'' - என்றவன் வாய்விட்டு சிரிக்க, இமைக்காமல் அந்த சிரிப்பை பார்த்தாள்.

''ஏன் ஸார் சிரிக்கறீங்க?''

''சிரிக்காம? நான் சொல்ல வேண்டிய டயலாக்கை நீங்க சொல்றீங்களே!''

''ஸார்?''

''முதல்ல உட்காருங்க.''



''இ..ருக்கட்டும் ஸார்.''

''அட உட்காருங்க. எனக்கு கழுத்து வலிக்குது''

''ஏன் ஸார்?''

''எவ்வளவு நேரம் இப்படியே பார்த்து பேசறது?'' - என அவன் பின்னங்கழுத்தை சாய்த்துகாட்ட, கமுக்கமாய் வந்து அவன் எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

''ம். குட். அப்புறம்...''

''இது என்னோட சர்டிபிக்கேட்ஸ்'' - என அவள் நீட்டிய பைலை வாங்கிப் பார்த்துவிட்டு வியந்தான்.

''எம்.பி.ஏ. வா?''

''ஆமா ஸார். பர்ஸ்ட் கிளாஸ்ல பாஸ் பண்ணியிருக்கேன். அதோட கம்ப்யூட்டர் கோர்ஸூம் முடிச்சிருக்கேன்.''

''குட்! இதுக்கு முன்னால எங்கேயாவது வேலை பார்த்த அனுபவம் இருக்கா?''

''இ..ல்ல ஸார்! படிப்பை முடிச்சு ஜஸ்ட் திரீ மன்த்ஸ்தான் ஆகுது.''

''ஓஹோ! இங்கே என்ன வேலைக்கான தேர்வு நடக்குதுன்னு தெரியுமா?''

''தெரியும் ஸார். விளம்பரத்தில சொல்லியிருந்தீங்களே. மேலாளர் வேலை தானே?''

''ம்''

''என்னால அந்த வேலையை திறமையா செய்ய முடியும் ஸார்'' - தன்னம்பிக்கையோடு சொன்னவளை பிரமிப்பாய் ஏறிட்டான்.

சின்னஞ்சிறுமுகம். பளிங்கு முகத்தில் படபடத்த கரு விழிகளில் அசாத்திய தன்னம்பிக்கை. ஒருவித ஈர்ப்பு விசை தெரிந்தது. பயமோ பதட்டமோ இன்றி அவள் நிமிர்வாய் அமர்ந்திருந்த தோரணை இவள் இந்த பணிக்கு பொருத்தமானவள் என அடித்துக் கூறியது.




**''நீங்க ஏன் இப்பல்லாம் சோதிடம் பார்க்கிறதையே விட்டுட்டீங்க?''**

**''என்னோட சோதிடத்தை பல பேர் பொய்யாக்கிடறாங்களே''**

**-சீர்காழி வி.ரேவதி.**

அதோடு முந்தைய தினம் அவளது துணிவை நேரிலே கண்டிருந்தானே? நிச்சயமாய் மற்றவர்களை அதட்டி வேலை வாங்கி விடுவாள்தான். ஆனால் தந்தை திரும்ப திரும்பச் சொல்லி அனுப்பியிருந்தாரே?.

பொறுப்பான பதவி. கொஞ்சம் அனுபவசாலியாய் இருக்கட்டும். அப்போதுதான் வேலை சுலபமாய் நடக்கும் என்று சொன்னாரே!

''என்ன ஸார் யோசிக்கிறீங்க?''

''இல்ல.. எல்லா திறமையும் இருக்கு. பட் எக்ஸ்பீரியன்ஸ் இல்லையேன்னுதான்...''

''ஏன் ஸார்? எல்லாருமே இப்படி எக்ஸ்பீரியன்ஸ் உள்ள ஆட்களைத் தேடினா என்னை மாதிரி ஆட்களுக்கு எப்படி ஸார் எக்ஸ்பீரியன்ஸ் கிடைக்கும்?'' - அவள் தயக்கமின்றி கேட்க, வியப்பாய் புருவம் உயர்த்தினான்.

''என்ன?''

''நிறைய கம்பெனிகள்ல இதே கேள்வியைத் தான் கேட்கிறீங்க? அது ஏன்னு எனக்கு புரியல.''

''ஏன்னா உங்களை மாதிரி புது ஆட்களுக்கு வேலை விபரங்களை புரிய வைக்கவே நாளாகிவிடும். அனுபவஸ்தர்களா இருந்தால் எங்களுக்கு அந்த வேலை மிச்சம் தானே?''

''சரி! இங்க ஏற்கனவே மானேஜர் இருக்கார் இல்லையா?''

''ஆமா''

''அவருக்கு என்ன ஆச்சு?''

''ம்ப்ச்! அவன் ஒரு யூஸ்லெஸ்பெல்லோ. சுயமா ஒரு வேலையும் செய்யுறதில்ல. வாரத்தில நாலு நாள் லீவு போடுறான். வொர்க்கிங் டேயிலயும் வொர்க் பண்றதில்ல. சுத்த சோம்பேறி'' - என்றான் எரிச்சலாய்.

''ஸோ! அவரோட பணி திருப்திகரமா இல்ல. அதனால அவரை வெளியே அனுப்புறீங்க?''

''ஆமா''

''இப்போ அவர் அனுபவஸ்தர். அப்படித்தானே?'' - எனக் கேட்டவளை புரியாமல் பார்த்தான்.

''வாட் யூ மீன்?''

''இனிமே இவர் இந்த அனுபவத்தை வெச்சு வேற ஒரு கம்பெனியில சேர்ந்திடலாம்.''



''யா''

''ஏன் ஸார்? இவர் பொறுப்பில்லாம இருக்கிறதால தானே வெளியே அனுப்புறீங்க? அதே மாதிரி மத்த கம்பெனியில சரியா வேலை செய்யாத ஆட்கள் தானே வேலை பறிபோய் இந்த மாதிரி இன்னொரு வேலையை தேடுவாங்க?''

''ம்'' - தலையாட்டினான்.

''அப்படி ஒரு பொறுப்பில்லாத அனுபவசாலியை விட நான் எந்த விதத்தில குறைஞ்சு போயிட்டேன்? என்னை ஏன் வேலையில சேர்த்துக்க கூடாது'' - என நிமிர்வாய்க் கேட்டவளைக் கண்டு வாயடைத்துப் போனான் சஞ்சய்.

''இதோ இன்டர்வியூ பண்றீங்க. இதுல திறமையான ஆளைத் தேர்ந்தெடுத்து வேலையைக் கொடுங்க. திறமை உள்ளவங்க சுலபமா வேலையை கத்துக்குவாங்க. அதோட கொடுத்த வேலையை சுத்தமா செய்யணும்ற வெறியும் எங்களுக்கு இருக்கும். யூத்துங்க கையில பொறுப்பைக் கொடுத்துப் பாருங்க ஸார். எங்களாலயும் சிறப்பா செய்ய முடியும். வேலை கிடைத்தால்தானே நாங்களும் அனுபவசாலியாக முடியும்'' திடமாய் பேசியவளைக் கண்டு மூக்கின் மேல் விரலை வைத்தான் சஞ்சய்.

அதே சமயம் வாசலருகே வந்து நின்ற கிருஷ்ணதாசனும் மலைத்துதான் போனார். இத்தனை சின்னப்பெண் எவ்வளவு தெளிவாய் பேசுகிறாள்? நான்கூட இதைப்பற்றி சிந்தித்ததில்லையே.

''ஸார்! இந்த வேலையை எனக்கே தந்திடுங்கன்னு நான் கேட்கல. கேட்கவும் மாட்டேன். என்னைவிட திறமைசாலிங்க கூட வந்திருக்கலாம். அப்படி வர்றவங்களை இப்படி ஏதாவது சப்பைக் காரணம் சொல்லி நிராகரிச்சிடாதீங்க.'' - என்றவாறே எழுந்து கொண்டாள் பாரதி.

''வெல்டன் மை சைல்ட். வெல்டன்! வாவ்! என்ன ஒரு பேச்சுத்திறமை'' - மெலிதாய் கைகளைத் தட்டியவாறே கிருஷ்ணதாசன் உள்ளே வர, முகமலர்ச்சியோடு எழுந்தான் சஞ்சய்.

''வாங்கப்பா! பாரதி! இது அப்பா'' - என அவளிடம் அறிமுகம் செய்ய, பணிவாய் வணங்கினாள்.

''வணக்கம் ஸார்''

''இருக்கட்டும்மா. ஆமா! உன் பேர் என்ன?''

''பாரதி''

''ரொம்பப் பொருத்தமான பேரும்மா. உட்காரு.''

''இருக்கட்டும் ஸார்''

''சஞ்சய்!''

''அப்பா?''

''இண்டர்வியூ முடிஞ்சாச்சா?''

''ஏறக்குறைய...''

''யாரையாவது செலக்ட் பண்ணியிருக்கியா?''

''ம். உங்ககிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டு....''

''தேவையில்ல. இந்த பொண்ணையே செலக்ட் பண்ணிடு'' - அவர் பளிச்சென சொன்னதும் இருவரின் முகம் மலர்ந்தது.

''ஸா..ர்?''

''உன்னை மாதிரி ஒரு ஆள்தான் இப்ப எங்க கம்பெனிக்கு தேவைம்மா. ஸோ! யூ ஆர் செலக்டட்.''



**''எதிரி நாட்டு மன்னன் நிறைய சீரியல் பார்ப்பான் போலிருக்கு...!''**

**''எதனால அப்படிச் சொல்றீங்க, மன்னா...?''**

**''சண்டை போட்டுக்கிட்டு இருந்தவன், திடீர்னு 'ஒரு சின்ன இடைவேளைக்கப்புறம் சண்டை தொடரும்'ன்னு சொல்லிட்டுப் போயி உட்கார்ந்துட்டானே...!''**

**-ஆர்.எம்.வடுகநாதன், வேதாரண்யம்**

''தே.. தேங்க்யூ ஸார்.''

''சஞ்சய்! நீ சம்பள விபரமெல்லாம் சொல்லிட்டு அப்பாயின்மெண்ட் ஆர்டரை கையில கொடுத்திடு. நீ நாளைக்கே வேலையில சேர்ந்திடும்மா. ஓ.கே. தானே?''

''கண்டிப்பா ஸார்''

''ஓ.கே. கேரி ஆன் சஞ்சய்! நீ இந்தப் பொண்ணை அனுப்பிட்டு போர்டு மீட்டிங் வந்திடு. நான் கிளம்புறேன்''

''சரிப்பா''

''நான் போயிட்டு வர்றேம்மா. ஆல் த பெஸ்ட்!''

''தேங்க்யூ ஸார்'' - புன்னகையோடு தலையசைக்க, வாசல்வரை சென்றவர் நின்று திரும்பினார்.

''சஞ்சய்!''

''அப்பா?''

''நேற்று மார்னிங் மெயின் ரோட்ல ஏதோ பிரச்சனையாமே? ஏதோ ஒரு பொண்ணு...''



''இல்லப்பா! அதெல்லாம் சரியாப்போச்சு.'' - அவசரமாய் அவன் மறுக்க, நிம்மதியானாள் பாரதி.

''வேற ஒண்ணும் பிராப்ளம் இல்லையே.''

''ஜஸ்ட் சின்ன ஆக்ஸிடென்ட்ப்பா. உடனே ஸால்வ் பண்ணிட்டேன்.''

''ஓ.கே. இனிமே ஓவர்ஸ்பீடுல போகாதே.''

''சரிப்பா''

''சரி. வேலையை முடிச்சிட்டு வா'' - என அவர் வெளியேறிவிட, ''ஹோ'' - என்றவாறு தன் இருக்கையில் அமர்ந்தான் சஞ்சய்.

''ஸார்! ஒரு நிமிஷத்தில ஆடிப்போயிட்டேன்''

''நானும்தான்.''

''ஸார்?''

''உங்களை மாதிரி ஒரு ஸ்டாப்பை நான் இழக்க மாட்டேன். எனிவே கன்கிராட்ஸ்'' - என புன்னகையோடு கை நீட்ட, தயக்கமாய் கை கொடுத்தாள். மென்மையாய் அதைப்பற்றி குலுக்க, பாரதிக்குள் மின்சாரம் பாய்ந்தது.

## 6

**பொட்டு வைத்த முகமோ**
**கட்டி வைத்த குழலோ**
**பொன்மணிச் சரமோ**
**அந்தி மஞ்சள் நிறமோ!**

புடவை அணிந்து கூந்தலை தளர பின்னலிட்டு, அதில் மல்லிகையைச் சூடி அழகு பதுமையாய் காலில் விழுந்து நமஸ்கரித்த இளைய மகளை நம்பமுடியாத வியப்புடன் ஆசி வழங்கி எழுப்பிவிட்டாள் செங்கமலம்.

இதுநாள் வரையிலும் பள்ளி சீருடையிலும் சுடிதாரிலும் இரவு உடையிலுமே பார்த்த கண்கள் முதன்முறையாய் மகளை புடவையில் கண்டதும் பெருமையில் பூரித்தது.

என் பிள்ளை எத்தனை அழகு? கைதேர்ந்த சிற்பி ரசனையுடன் செதுக்கிய செப்புசிலைபோல் பொலிவுடன் நின்ற மகளை திருஷ்டி கழித்தாள் செங்கமலம்.

''அம்மாடி! பாரிக்குட்டி! நீ இம்புட்டு அழகா? என் கண்ணே பட்டுடும் போலிருக்கே!''

''அம்மா! சும்மா புகழாதீங்கம்மா... சும்மாவே பத்து தரம் கண்ணாடி முன்னே நின்னிட்டு இருக்கிறாள். இதுலே நீங்க வேற...'' என்ற தம்பியின் தலையில் குட்டினாள் பாரதி.

''டேய்! இனிமேலாவது எங்கிட்ட ஒழுங்கா மரியாதையா நடந்துக்க. அப்பத்தான் என் சம்பளத்தில் உனக்கு ஏதாவது கிப்ட் கிடைக்கும்''

''அக்கா! நிஜமாவா சொல்ற? எனக்கு ஏதாவது வாங்கித் தருவியா?''

''தம்பி! எனக்கிருக்கிறது ஒரு தம்பி தானே? உனக்கு செய்யாமல் வேற யாருக்குச் செய்வேன்?''

''அடடா! இன்னிக்கு மழை கொட்டோ கொட்டுன்னு கொட்டப் போகுது''- செங்கமலம் வாயில் கைவைத்து அதிசயித்தாள்.

''ஏன்மா?''

''சதா அனிமல்ஸ் பேரைச் சொல்லி திட்டிட்டு இருக்கிறவங்க இன்னிக்கு அக்கா தம்பின்னு அன்பை பொழியுறீங்களே... மழை வராம என்ன பண்ணும்?''

''போங்கம்மா! ஆயிரம் இருந்தாலும் இவ என் அக்காவாச்சா? பாசம் இல்லாம போயிடுமா?'' மோகன் மெச்சிக்கொள்ள, சாப்பாடு கூடையுடன் வந்த உமா புன்னகைத்தாள்.

''பாரதி''

''அக்கா?''

''பணம் பத்தும் செய்யும்னு சொல்வாங்களே, அது இதுதானா?''

''உமாக்கா! நீ கூட கிண்டல் பண்றியேக்கா''

''இல்லடா தம்பி! சும்மா விளையாட்டுக்கு நீ போய் சாப்பிட்டுட்டு ஸ்கூலுக்கு கிளம்பு. பாரதி இதுல புளிசாதமும் புதினாதுவையலும் வெச்சிருக்கேன். மிச்சம் வெக்காம சாப்பிடணும்''



''சரிக்கா''

''சாமி கும்பிட்டுட்டு கிளம்பு. நேரமாகுது''

''அக்கா! நான் எப்படி இருக்கேன்? இந்தப்புடவை நல்லா இருக்கா?''

''புடவை மட்டுமில்ல என் தங்கையும் அமர்க்களமா இருக்கா. வேலைக்கு போயிட்டு வா. திருஷ்டி சுத்திப்போடணும்''

''சேலை கட்டினபிறகு தான் உனக்கும் கல்யாண வயசாச்சேன்னு புத்தியில உறைக்குது. இத்தனை நாளா உன்னை சின்னப்புள்ளையாவே நினைச்சிட்டேன்டி''

''அம்மா! காலையிலேயே மூட்-அவுட் பண்ணாதீங்க...''

''ஏன்டி? எல்லாம் அந்தந்த வயசுல நடக்க வேண்டியதுதானே? இதுல தப்பென்ன?''

''அம்மா! போதும் நான் போயிட்டு வர்றேன்'' என்றாள் கடுப்பாய்.

''பாரதி! பர்ஸ்ட் டே வேலைக்குப் போற. கொஞ்சம் சிரிச்ச மாதிரி போயேன்'' உமா புன்னகையோடு கழுத்தைச் சாய்த்து சொல்ல, பாரதியின் முகம் புன்னகைத்தது.

''ம்... இப்படியே போ.. பை'' தாயும் தமக்கையும் கையசைக்க, அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள் பாரதி.

வழக்கமான போக்குவரத்தில் நீந்தி பேருந்தில் ஏறி நசுங்கி ஒரு வழியாய் அலுவலகத்தை அடைந்தபோது புடவை கசங்கிப் போய் விட்டது.

சீக்கிரமே அப்பாவை ஒரு இருசக்கர வாகனம் வாங்கித் தரச் சொல்ல வேண்டும் மனதிற்குள் முடிவெடுத்துக் கொண்டே புடவையை நீவிவிட்டுக் கொண்டு உள்ளே நுழைய எதிர்ப்பட்ட பெண் புன்னகையோடு காலை வணக்கம் கூறினாள்.

''குட்மார்னிங் மேம்''

''கு...குட்மார்னிங்...''

''மிஸ் பாரதி?''

''நான்தான்''

''உங்களை எம்.டி. வந்து பார்க்கச் சொன்னார்''

''அவர் வந்துட்டாரா?''

''யா. அரைமணிமாச்சு அவர் வந்து''

''ஓ.காட். அப்போ நான்தான் லேட்டா?''

''நோ மேம். ஸார் இன்னிக்கு வெளியூர் போறதால சீக்கிரம் வந்திட்டார். மற்றபடி நீங்கவந்தது கரெக்ட் டைம்தான்''

''தேங்க்யூ'' என்றவள் அவளிடமே தனது இருக்கை எது என விசாரித்து தன் உடமைகளை வைத்துவிட்டு 'சஞ்சய் கிருஷ்ணா எம்.டி.' என பொறிக்கப்பட்டிருந்த அறைக்கதவை நாசூக்காய் தட்டினாள்.

''எஸ்.கமின்'' சஞ்சயின் கணீர்குரல் அவசரமாய் தன்னை திடப்படுத்திக் கொண்டு கதவைத் திறந்து உள்ளே நுழைய குளிரூட்டப்பட்ட அறை சில்லென அவளை வரவேற்றது.

தன் இருக்கையில் சாய்ந்தமர்ந்து எதிரில் நின்ற இளைஞனிடம் ஆங்கிலத்தில் உத்தரவுகளை பிறப்பித்துக் கொண்டிருந்த சஞ்சயின் புருவம் உள்ளே நுழைந்தவளைக் கண்டு குழப்பமாய் உயர்ந்தது.

உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு புன்னகைத்தாள் பாரதி.

''குட்மார்னிங் ஸார்''

''குட்மார்னிங். நீங்க?''

''வரச்சொன்னீங்களாமே ஸார்''

''நானா?'' குழப்பமாய்க் கேட்டவனைக் கண்டு தானும் குழம்பிப் போனாள் பாரதி.

''ஆமா! அந்தப்பெண் சொன்னாளே!''

''எந்தப்பெண்?''

''அது.... அவங்க பேர் தெரியலையே''

''எக்ஸ்கியூஸ்மீ! யார் நீங்க? முதல்ல அதைச் சொல்லுங்க'' அவன் சீரியஸாய்க் கேட்க பதறிப்போனாள்.

''ஸார்... நான்... பாரதி! நேற்று இண்டர்வியூ...''

''பாரதி?''

''யெஸ் ஸார்!

''ஓ! ஸாரி ஸாரி..! நேற்று பார்த்த பாரதியா இது? அடையாளமே தெரியல. வெரி ஸாரி!'' புன்னகையும் ஆனந்தமுமாய் அவன் சொல்ல, ஆசுவாசமானாள் பாரதி.

''ஸாரி பாரதி! சாரியில நீங்க வந்து நின்னதும் என்னால கெஸ் பண்ண முடியல. ஸாரி''

''பரவாயில்ல ஸார்''

''அப்புறம் பாரதி.. மீட் மிஸ்டர் பாலா. பாலமுருகன். அஸிஸ்டெண்ட் மானேஜர்! பாலா! இவங்கதான் பாரதி'' என இருவரையும் அறிமுகம் செய்ய, இருவரும் புன்னகையோடு ''ஹலோ'' சொல்லிக் கொண்டனர்.

''பாரதி! நான் அர்ஜெண்டா ஹைதராபாத் போறேன். வர ரெண்டு நாளாகும். உங்க வொர்க்கைப் பத்தி பாலா சொல்வார்''

''ஓ.கே. ஸார்''

''பாலா! அவங்க வொர்க்கை கிளியரா சொல்லிடு. மத்தவங்கிட்டயும் அறிமுகப்படுத்திவை''

''யெஸ் ஸார்''

''அப்புறம் ராஜேந்திரன் வந்தால் அவன் கணக்கை செட்டில்பண்ணி அனுப்பிடு. லட்டர்ஸ்ல ஸைன் வாங்கிடு. மறந்திடாதே''

''ஓ.கே. ஸார்''

''பாலா! அவன் கொஞ்சம் தண்ணிபார்ட்டி. பார்த்து ஜாக்கிரதையா ஹேண்டில் பண்ணு. பாரதி கேபின் வரை அலவ் பண்ணவேண்டாம்''

''ஓ.கே. ஸார்''

''பாரதி! வொர்க் சம்மந்தமா உங்களுக்கு எந்த டவுட்னாலும் எனக்கு போன் பண்ணுங்க. ஓ.கே.?''

''ஓ.கே. ஸார்''

''பாலா! நான் கொண்டு போக வேண்டிய பைல்ஸ் எல்லாம் எடுத்திட்டு வர்றியா?''

''இதோ ஸார்'' மின்சார வேகத்தில் அவன் வெளியேற தயக்கமாய் சஞ்சயை ஏறிட்டாள் பாரதி.

''ஸார்! நான்... போகலாமா?''

''நான் போகச் சொல்லலியே....''

''ஸார்?''

''மிஸ் பாரதி! வேலையில சேருவதற்கு முன் இந்த கம்பெனியைப் பத்தியும் என்னைப்பத்தியும் நீங்க தெரிஞ்சிக்கணும்''

''சொல்லுங்க ஸார்!''

''எனக்கு எப்போதுமே வொர்க்



**''என் மனைவியை நான் டீ போட்டுத்தான் கூப்பிடுவேன். நீங்க எப்படி?''**

**''என்பொண்டாட்டிக்கு 'டீ' பிடிக்காதுங்க, அதனால காப்பி போட்டுத்தான் கூப்பிடுவேன்''**

**-சீர்காழி வி.ரேவதி.**

பர்ஸ்ட். வேலை நேரத்தில யாராவது வெட்டியா அரட்டை அடிச்சிட்டு இருந்தால் எனக்கு சுத்தமா பிடிக்காது''

''யார்கிட்டயும் பேசமாட்டேன் ஸார்''

''உங்களை மட்டுமில்லை மத்தவங்களையும் சேர்த்து தான் சொல்றேன். மொத்தம் முப்பத்தி நாலு ஸ்டாப் வொர்க் பண்றாங்க. அவங்களை நீங்கதான் வேலைவாங்கணும்''

''கண்டிப்பா ஸார்''

''அப்புறம் டைம். கரெக்ட்டா நைன் ஓ. கிளாக் எல்லாரும் ஆபீஸ்ல இருக்கணும். யாரும் லேட்டா வரக்கூடாது. உங்களையும் சேர்த்து தான்''

''லேட் பண்ணமாட்டோம் ஸார்''

''அப்புறம்.. இதுக்கு முன்னால மானேஜரா இருந்த ராஜேந்திரனை வேலையைவிட்டு அனுப்பிட்டோம். ஸோ அந்த கோபத்தில அவன் ஏதாவது பிரச்சனை பண்ணினா...''

''நான் பார்த்துக்கிறேன் ஸார்'' துணிச்சலாகவும் தயக்கமின்றியும் சொன்னவளை வியப்பாய் பார்த்தான்.

''பாரதி!'' நான் ஊர்ல இருந்து வர்ற வரைக்கும் இந்த ஆபீஸோட முழு பொறுப்பும் உங்களதுதான்''

''பொறுப்பா பார்த்துப்பேன் ஸார்''

சஞ்சயின் புன்னகை பெரிதானது. ''தேங்க்ஸ். ரொம்ப டென்ஷனா இருந்தேன். உங்களைப் பார்த்ததுல இப்ப ரிலாக்ஸ்டா இருக்கேன்''

''ஸார்''

''ஐ. மீன்.. பொறுப்பான வங்ககிட்ட ஒப்படைச்சிட்டு போறதால உண்டான நிம்மதி''

''தேங்க்யூ ஸார்!''

''அப்போ நான் கிளம்பட்டுமா?''

''ஓ.கே. ஸார்''

''திரும்பவும் சொல்றேன் பாரதி. ராஜேந்திரன் வந்தால் பாலாவே பேசி அனுப்பட்டும். நீங்க இன்வால்வ் ஆக வேண்டாம்''

''ஓ.கே. ஸார்''

''அவனுடைய கேரக்டர் கொஞ்ச நாளாவே சரியில்ல. அவனோட அதிகாரத்தை மிஸ்யூஸ் பண்ணிட்டு இருந்தான். அதான்... வேற வழியில்லாம அனுப்ப வேண்டியதாப்போச்சு''



''கேரக்டர்ன்னா....''

''ம்ப்ச்! வொர்க்கிங் ஹவர்ஸ்ல குடிக்கிறது ஆபீஸ் லேடீஸ்கிட்ட எல்லாம் இன்டீஸண்ட்டா பிஹேவ் பண்றது... இப்படி நிறைய ரிப்போர்ட்ஸ்''

''அப்போ அவனை அனுப்பினதுதான் சரி ஸார்''

''ம்... அதுதான் சரி. ஆனா அப்பாதான் கொஞ்சம் பயப்படுறாங்க...''

''தைரியமா இருக்கச் சொல்லுங்க ஸார். அவனால யாருக்கும் எந்த பிரச்சனையும் வராது. என்னால எல்லாரையும் பாதுகாக்க முடியும். நீங்க தைரியமா போயிட்டு வாங்க ஸார். ஹேவ் எ நைஸ் ஜர்னி''

உற்சாகமாய் இருக்கையை விட்டு எழுந்தான் சஞ்சய். அதற்குள் பைல்களோடு பாலமுருகனும் வர, புன்னகையோடு அவளிடம் தலையசைத்து விடை பெற்றான்.

பாரதியை அவளது வார்த்தைகளை அவளுடைய தைரியத்தை வெகுவாய் பிடித்துப்போனது சஞ்சய்க்கு.

# 7

**காற்றுக்கென்ன வேலி**
**கடலுக்கென்ன மூடி-கங்கை**
**வெள்ளம் சங்குக்குள்ளே**
**அடங்கி விடாது!**

சஞ்சய் எச்சரித்த போது வீணாய் பயப்படுகிறான் என்றுதான் நினைத்திருந்தாள் பாரதி. ஆனால் மறுநாளே மூச்சுமுட்ட குடித்து விட்டு வந்த ராஜேந்திரனைப் பார்க்கையில் அவனது கூற்று உண்மையென்றுபட்டது.

அலுவலக வேலையாய் பாலா வெளியே செல்ல, அவன் சென்ற பத்தாவது நிமிடம் தள்ளாட்டமாய் அலுவலகத்திற்குள் நுழைந்தான் ராஜேந்திரன்.

'முதலாளி ஊரில் இல்லை. வந்தபிறகு வாருங்கள்' என்ற வாட்ச்மேச னை அடித்து வீழ்த்திவிட்டு உள்ளே நுழைந்தவனைக் கண்டு அலுவ லகம் மொத்தமும் பயந்து நடுங்க, பாரதியின் அறைக்கு தகவல் பறந் தது.

எந்தவித பதட்டமும் இல்லாமல் வெளியே வந்தவள் நடுவழியில் நின்று அனைவரையும் ஏகவசனத்தில் திட்டி தீர்த்துக் கொண்டிருந்த ராஜேந்திரனைப் பார்த்து முகம் சுளித்தாள்.

இவனா? இவன் அன்று தன்னிடம் கோபமாய் பேசியவனாயிற்றே. ஓ! இவனது வேலைக்கே உலை வைக்க வந்ததால்தான் அப்படி பேசினானோ?

''என்னங்கடி அப்படி பார்க்கிறீங்க? நான் உங்களை என்ன பண்ணி னேன்னு என்னைப் பத்தி அவன்கிட்ட வத்திவெச்சீங்க? சொல்லுங் கடி'' மேசைமீது பலமாய்த் தட்டியவாறே அவன் கேட்க, மேசை மீதிருந்த பொருட்கள் கீழே சிதறின.

பாரதி அவன் முன்னே சென்று கைகளைக் கட்டிக் கொண்டு நேராய் பார்த்துக் கேட்டாள்.

''மிஸ்டர்! இப்ப உங்களுக்கு என்ன வேணும்?''

''இது யாருடா? இந்த ஆபீஸ்ல ஒரு பய என் முன்னால நின்னு பேசமாட்டான். நீ ஒரு பொம்பளை..''

''ஏன்? பொம்பளையா இருந்தா பேசக்கூடாதா?''

''ஏய்..யார்டா நீ?'' நிற்க இயலாமல் தள்ளாடிக் கொண்டே நின்ற வனை மேலும் கீழுமாய் பார்த்தாள் பாரதி.

''ஏன் ஸார்! படிச்சவர் தானே நீங்க?''

''அதிலென்ன சந்தேகம்?''

''படிச்ச நீங்களே இப்படி அநாகரீகமா நடந்துக்கலாமா? வேலை நடக்கிற இடத்தில வந்து ஏன் கலாட்டா பண்றீங்க?''

''ஏய்! எனக்கு யார் அட்வைஸ் பண்ணினாலும் பிடிக்காது. நான் சொல்றதைத்தான் மத்தவங்க கேட்கணும். நான்தான் மானேஜர்''

''அது நேத்து வரைக்கும்''

''என்ன?''



''இப்போ நான்தான் இங்கே மானேஜர்'' திடமாய் நின்று சொன்ன வளை கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான் ராஜேந்திரன். நன்றாய் உற்றுப் பார்த்துவிட்டு சத்தமாய் சிரிக்க ஆரம்பித்தான்.

மற்றவர்கள் விலக, வயிற்றைப் பற்றிக் கொண்டு சிரித்தான். கோப மானாள் பாரதி.

''மிஸ்டர்! இப்ப ஏன் சிரிக்கிறீங்க?''

''நினைச்சேன். நான் அப்பவே நினைச்சேன்'' என்று கூறிவிட்டு மீண்டும் அவன் சிரிக்க, முகம் கடுத்தாள்.

''என்ன சொல்றீங்க?''

''அவன் என்னை வேலையை விட்டு போகச் சொல்லும் போதே எனக்கு சந்தேகம்தான். இளசா புதுசா எவளையோ பார்த்து வெச்சிருக் கானோ நினைச்சேன். அது சரியாப் போச்சு.

சும்மா சந்தனத்தில செய்து வச்ச சிலையாட்டம் சும்மா தளதளன்னு இருக்கியே. உன்னை பார்த்திட்டு என்னை வேலையில வைப் பானா?''

''மிஸ்டர்! மைண்ட் யுவர் வேர்ட்ஸ்''

''ஏய்! சும்மா நிறுத்தடி. எட்டு வருஷம். எட்டு வருஷமா நான் இந்த வேலையில இருக்கேன். நீ வந்து ஒரே நாள்ல என்னை வெளியே அனுப் பிட்டியே... ஆமா! அப்படி எதைக்கா ட்டி அவனை மயக்கின? அவன் அவ் வளவு சீக்கிரமா யார்கிட்டயும் மசிய மாட்டானே. எப்படி உன்கிட்ட விழுந் தான்? எது அவனை மயக்கிச்சு? இந்த பளபள முகமா.. இல்ல..'' என்றவாறே அவனது கைகள் பாரதியின் முகத்தை வருட, கொதித்துப் போனாள் பாரதி.

மொத்த கோபத்தையும் திரட்டி 'பளார்'என அறைந்தாள். ஏற்க னவே குடிப்போதையில் தள்ளா டிக் கொண்டே நின்றவன் திடீரென விழுந்த அறையில் நான்கைந்து சுற்று



**''சோதிடரே... நான் ஒரு சிட்பண்ட் ஆரம்பிக்கப் போறேன்... நல்லா வருவேனா, பார்த்துச் சொல்லுங்க...?''**

**''நல்லா ஓடுவீங்க... ஊரை விட்டு...!''**

**-ஆர்.எம்.வடுகநாதன், வேதாரண்யம்**

சுழன்று தூரமாய் போய் விழுந்தான்.

பணியாளர் நெருங்க, அவர்களை அதட்டினாள் பாரதி. ''யாரும் கிட்ட வராதீங்க. போய் அவங்கவங்க வேலையைப் பாருங்க''

''மேடம்! ரிஸ்க் வேண்டாம் மேடம். போலீசுக்கு போன் பண்ணிடலாம்...''

''எதுக்கு? இவனை நாலு சாத்த என்னாலயே முடியும்''

''ட்ரிங்ஸ் சாப்பிட்டிருக்கார் மேடம். ஏதாவது ஆகிடப்போகுது''

''நானும் அதான் யோசிக்கிறேன். இவனுக்கு குடும்பம் இருக்கா?''

''இருக்கு மேடம். மூணு குழந்தைங்க இருக்கு''

''இந்த ஆளோட வீட்டு அட்ரஸ் போன் நம்பர்?''

''இருக்கு மேடம்''

''இவர் வீட்டுக்கு போன் பண்ணி வொய்ப்பை உடனே வரச்சொல்லுங்க. இம்மீடியட்லி!''

''இதோ சொல்றேன் மேடம்''

''மத்தவங்க உங்க வேலையைக் கவனிங்க''

''யெஸ் மேடம்'' மற்றவர்கள் தங்கள் இருக்கையில் அமர்ந்து பணியைத் துவங்க, ராஜேந்திரன் தடுமாறி எழுந்தான்.

''ஏய்! ஒரு பொட்டச்சி. எம்மேலே கைவெச்சிட்டியா? விடமாட்டேன். உன்னை விடமாட்டேன்டி'' என நெருங்கியவனை சட்டையோடு கொத்தாய் பற்றினாள் பாரதி.

''என்னடா பண்ணுவ?''

''ஏய்! நான் யார்னு தெரியாது உனக்கு''

''தெரியும்டா. வேலை செய்யுற இடத்தில குடிச்சிட்டு கும்மாளம் போடுற பொறம்போக்கு தானே நீ? பொண்ணுங்ககிட்ட எல்லாம் சில்மிஷம் செய்வியாமே? எங்கே இப்ப செய் பார்க்கலாம்?''

''ஏய்! விடு... விடு என்னை..''

''பொண்ணுங்கன்னா உனக்கு அவ்வளவு இளப்பமாப் போச்சா? ஏன் வீட்ல இருக்கிற பெண்டாட்டி போதலையா உனக்கு? உடம்பு அரிப்பெடுக்குதோ? நான் கராத்தேயில பிளாக் பெல்ட் வாங்கினவ. தட்ட வேண்டிய இடத்தில தட்டினேன்னு வை. ஜென்மத்துக்கும் நீ பொண்டாட்டி பக்கமே போகமுடியாது. பீகேர் புல்'' கோபத்துடன் உதறித் தள்ள தரையில் போய் பொத்தென விழுந்தான் அவன்.

அப்போதுதான் அலுவலகத்திற்குள் நுழைந்த பாலமுருகன் இந்த



காட்சியில் அசந்து போனான். பாரதியின் அடியில் நடுங்கிப் போயிருந்தான் ராஜேந்திரன். போதையில் பாதி தெளிந்து போயிருந்தது கை முஷ்டியை மடக்கி அவன் முகத்தில் குத்துவிடத் தயாரானாள் பாரதி.

''இந்த பயம் உனக்கு எப்பவும் இருக்கணும். இனிமே எந்த பொண்ணுகிட்டயாவது வாலாட்டுவியா?''

''இல்லம்மா... மாட்டேன்''

''பொழைச்சிப்போ'' எச்சரித்தவாறு விரலால் சொடுக்கினாள்.

''இதோ பார். எட்டு வருஷமா இந்த நிறுவனம் உனக்கு தண்டமா சம்பளம் கொடுத்திட்டு இருந்திருக்கு. இனிமேலாவது ஏதாவது ஒரு வேலையைத் தேடிட்டு உண்மையா உழை.

உழைக்காம வர்ற காசுங்றதாலே இப்படி தண்ணியா செலவழிக்கிற? உன் பொண்டாட்டி புள்ளைக்கு இந்த பணத்துல சாப்பிட ஏதாவது வாங்கிக் கொடுக்கலாமில்ல? குடிகார நாயே!''

எழுந்து நிற்க இயலாமல் அப்படியே கிடந்தான் ராஜேந்திரன். ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தாள்.

''இனிமே உன்னை இந்தப்பக்கம் பார்த்தேன்... உடம்புல உள்ள பார்ட் எல்லாம் இடம் மாறிடும். ஜாக்கிரதை''

பாலமுருகன் வியப்பாய் மூக்கின் மேல் விரலை வைத்தான். யாரிவள்? பாரதி கண்ட புதுமைப் பெண்ணா? இந்தக் கண்களில் தெறிப்பது என்ன? கோபக்கனலா? அநீதியைச் சுட்டெரிக்கும் தீப்பிழம்பா?

சிலையாய் நின்றவனைக் கடந்து உள்ளே ஓடி வந்தாள் ஒரு பெண். சட்டென கலைந்தவன் இது ராஜேந்திரனின் மனைவி அல்லவா? இவள் ஏன் இங்கே வந்திருக்கிறாள் என்ற குழப்பத்துடன் தானும் உள்ளே நுழைந்தான்.

''ஐயோ! என்னங்க! ஏன் இப்படி கீழே விழுந்து கிடக்கிறீங்க? எழுந்திருங்க. என்னங்க ஆச்சு''-என ராஜேந்திரனை பற்றி தூக்கினாள். பாரதி அவளை ஏறிட்டாள்.

''நீதான் இவன் வொய்ப்பா''

''ஆமாங்க.''

''எத்தனை புள்ளைங்க?''

''மூணு பொண்ணுங்க''

''மூணு பொம்பளைப் புள்ளைகளை பெத்துட்டுத்தான் இப்படி

அலையுறியா? பொறுக்கி நாயே''-என மீண்டும் அறைந்தாள் பாரதி. அந்தப்பெண் கோபமானாள்.

''ஐயோ! ஏம்மா எம்புருஷனை அடிக்கிறீங்க?''

''உம் புருஷன் பண்ணின காரியத்துக்கு அவனை உள்ளே தள்ளியிருக்கணும்''

''ஐயோ!''

''இவனால நீயும் உம் புள்ளைகளும் கஷ்டப்படக் கூடாதுன்னுதான் இதோட விடுறேன். இனிமேலாவது உம் புருஷனை ஒழுங்கா அடக்கிவை. இனிமே குடிச்சிட்டு வந்தால் நாலு மிதி. ரெண்டு அறைவிட்டு வீட்ல போட்டு பூட்டு. சோறு போடாதே. தன்னால குடிக்கிறதை நிறுத்திடுவான். குடிக்கிறதால தானே புத்தி கெட்ட வழியில போகுது''-என்றவளைக் கண்டு வாயடைத்துப் போனாள் அந்தப் பெண்.

''பாலா!''

''மேடம்!''

''இந்த ஆளோட கணக்கை முடிச்சி பேலன்ஸை இவன் வொய்ப் கிட்ட கொடுத்தனுப்புங்க. இவன்கிட்ட ஸைன் வாங்கிடுங்க.''



**''அந்தாளு சரியான சந்தேகப் பேர்வழி''**

**''மூளை இருக்கா?ன்னு உன்னை கேட்டுட்டுப் போனானே அவன் தானே...?''**

**-வி.ரேவதி, தாம்பரம்.**

''யெஸ் மேம்''

''இதோ பாரும்மா. இன்னியோட உம்புருஷனுக்கும் இந்தக் கம்பெனிக்கும் எந்த சம்பந்தமும் இல்ல. இனிமே இவன் இந்தப்பக்கம் வந்து ஏதாவது கலாட்டா பண்ணினா நான் சிவியரா ஆக்ஷன் எடுக்க வேண்டியிருக்கும். லாக்-அப்ல தான் நீ இவனை சந்திக்க வேண்டியிருக்கும்!''

''ஐயோ! இந்த பக்கமே இனி வர மாட்டாரும்மா!''

''பார்த்து கூட்டிட்டு போ. பாலா! அவங்க கணக்கை முடிச்சி அனுப்புங்க.''-என்றவாறுதன் கேபினுக்கு திரும்பி நடக்கத் துவங்கினாள்.

தொடர்ச்சியாய் அடிவாங்கியதில் ராஜேந்திரனின் போதை சுத்தமாய் இறங்கியிருந்தது. போதை இறங்கியதும் சுற்றுப்புறமும் தன் நிலையும் உறைத்தது.

இத்தனை ஆண்டுகளாய் கர்வமாய் நடந்த இடத்தில் இத்தனை பெண்களின் முன் தன்னை ஒரு பெண் கைநீட்டி அடித்துவிட்டாளே என்ற அவமானம் பிடுங்கித்தின்றது.

இவளை ஏதாவது செய்தால்தான் தன் ஆத்திரம் தீரும். கண்களில் வெறி மின்ன பரபரவென தேடியவனின் பார்வையில் மேசை மீதிருந்த கண்ணாடியால் ஆன பேப்பர்வெயிட்பட்டது.

குண்டுக்கல் போலிருந்த அதை கையிலெடுத்தான். தன் கேபினை நெருங்கிவிட்டவளை குறிவைத்து எறிந்தான் ராஜேந்திரன். அது மிகச் சரியாய் பாரதியின் தலையை நோக்கி சீறிப்பாய்ந்து அவளது தலையில் மோதியது.

# 8

**ஒரு வானவில் போலே-என்**
**வாழ்விலே வந்தாய் உன்**
**பார்வையால் எனை வென்றாய்**
**என்னுயிரிலே நீ கலந்தாய்!**

''உமா! கதவை பூட்டிக்கம்மா. நான் கோயிலுக்கு போயிட்டு வந்திடுறேன்.''

''சரிம்மா''-தையல் மிஷினை நிறுத்தி விட்டு எழுந்தாள் உமா. கையில் பூஜைக் கூடையோடு வெளியேறிய தாயைத் தொடர்ந்து கதவு வரை வந்தவள் வீட்டின் முன் வந்து நின்ற ஆட்டோவைப் பார்த்ததும்

தாயை ஏறிட்டாள்.

''அம்மா! யாரோ வர்றாங்க''

''யாரு?''-குழப்பமாய் ஆட்டோவைப் பார்த்தவள் தலையில் கட்டோடு இறங்கிய மகளைப் பார்த்ததும் பதறிப் போனாள்.

''ஐயோ! எம்புள்ளைக்கு என்னாச்சு? அம்மாடி! பாரதிம்மா!''-தாயின் குரலில் பதறி வெளியே வந்த உமாவும் ஆட்டோவை நோக்கி ஓடினாள்.

''பாரதி! என்னம்மா ஆச்சு? ஐயோ! கட்டுப் போட்டிருக்கே''-என்பதற்குள் உமாவின் விழிகள் கண்ணீரைச் சுரந்தது.

ஆட்டோவை வெயிட் பண்ணச் சொல்லிவிட்டு இறங்கிய பாலமுருகனின் பார்வையில் அழுத கண்களோடு உமா தெரிய, மகளை வருடியவாறே பதறிய செங்கமலத்தையும் கண்டு மனம் கசிந்து போனான்.

''என்னடி ஆச்சு? கேட்கிறோமில்ல?''

''அது வந்தும்மா...''-எனத் தொடங்கிய பாலாவை பார்வையால் தடுத்தாள் பாரதி. பின் தாயிடம் திரும்பி புன்னகைத்தாள்.

''அம்மா! அக்கா! ஏன் பதறுறீங்க? எனக்கு ஒண்ணுமில்ல.''

''ஒண்ணுமில்லையா? தலையில இவ்வளவு பெரிய காயம் இருக்கு. ஐயோ ரத்தம் கசியுதே''

''அக்கா! அது மருந்துக்கா. நீயும் பயந்து அம்மாவையும் பயமுறுத்திடாதே.''

''பாரதி! அம்மாகிட்ட எதையும் மறைக்காதே. என்ன நடந்தது?''

''அம்மா! இது ஒரு சாதாரண காயம்மா. டேபிள் முனையில இடிச்சிகிட்டேன். லேசா ரத்தம் வந்தது. அதுக்குள்ள இவர் பயந்து போய் ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டுபோய் கட்டு போட வெச்சிட்டார்.

அடடா! இவரை அறிமுகம் செய்து வைக்க மறந்திட்டேனே! அம்மா! இவர் பாலா. அஸிஸ்டெண்ட் மானேஜர். பாலா ஸார்! இது என் அம்மா. அக்கா''


செங்கமலம் அவசரமாய் கண்களை துடைத்துக் கொண்டாள்.

''உள்ளே வாங்க தம்பி!''

''இருக்கட்டும்மா. எம்.டி. ஊர்ல இல்ல.வேலை எல்லாம் அப்படியே கிடக்கு. நான் போயிட்டு வர்றேன்.''

''பாலா ஸார்! ஒரு கப் காபியாவது சாப்பிட்டு போங்க. எங்க





உமாக்கா அருமையா காபி போடுவாள்.''-என்க பாலமுருகனின் பார்வை உமாவிடம் திரும்பியது.

அவள் இன்னமும் விசும்பிக் கொண்டிருக்க, ''பாரதி மேடம்! முதல்ல உங்க சிஸ்டரை சமாதானப் படுத்துங்க. நான் இன்னொரு நாள் வந்து காபி சாப்பிடுகிறேன்''-என்றான்.

''அக்கா! என்னக்கா இது குழந்தை மாதிரி... நான் தான் சொன்னேனில்ல... சும்மா சாதாரண காயம்தான்னு''

''பொய் சொல்லாதடி. டேபிள் முனை எப்படி பின் மண்டையில இடிக்கும்?''

''அ..அது.. அது நான்.. குனியும் போது...''

''பொய்! எனக்குத் தெரியும். நீ எதையோ மறைக்கிற?''



''நம்முடைய போர் ஆயுதங்கள் காணாமல் போவதற்கும் அரசருக்கும் சம்பந்தம் இருக்குமுன்னு நெனைக்கிறேன்...!''

''எதனால அப்படிச் சொல்றே...?''

''அரசரோட அறை மூலையில பேரிச்சம்பழக் கொட்டைகள்நிறையகுவிஞ்சு கிடக்கே...!''

-ஆர்.எம்.வடுகநாதன், வேதாரண்யம்

''நீ மட்டும் நம்பமாட்டியே. இன்ஜெக்ஷன் போட்டது ரொம்ப டயர்டா இருக்குதுக்கா. படுக்கணும் போல இருக்கு.''

''வாம்மா. வந்து படுத்துக்க.''-மகளைக் கைத்தாங்கலாய் பற்றிக் கொண்டு வீட்டிற்குள் நுழைய, பாலமுருகன் ஆட்டோவை நெருங்கினான்.

'' ஒரு நிமிஷம் ஸார்''-உமாவின் அழைப்பில் நின்று திரும்பினான்.

''என்னங்க?''

''ஸார்! அவ பொய்சொல்றா. நீங்களாவது உண்மையைச் சொல்லுங்க. அவளுக்கு எப்படி அடிபட்டது?''

''அது...''-பாலமுருகன் தயங்கினான்.

''பிளீஸ் ஸார். சொல்லுங்க''

''மேடம்! நீங்க பயப்படுற மாதிரி பெரிய பிரச்சனை ஒன்னும்



இல்ல. ஜஸ்ட் சின்ன ஆக்ஸிடெண்ட்''

''என்ன? ஆக்ஸிடெண்ட்டா?''-பதறினாள்.

''டென்ஷனாகாதிங்க. ஆபீஸ்ல ஒரு சின்ன பிரச்சனை''-எனத் தொடங்கி ரொம்பவும் பயமுறுத்தாமல் எளிதாய் நடந்தவற்றை சொன்னபோதும் பலமாய் அதிர்ந்தாள் உமா.

''என்ன? இவ்வளவு நடந்திருக்கு. அவனை சும்மாவா விட்டீங்க?''

''அதெப்படிங்க சும்மா விடுவோம். வகையாய் கவனிச்சுதான் அனுப்பினோம்.''

''போலீஸ்ல சொல்லிட்டீங்களா?''

''சொல்லலாம்னுதான் சொன்னேன். பாரதிமேடம் தான் வேணாம்னுட்டாங்க.''

''அவ சொன்னதால விட்டுறதா? இவளுக்கு ஏதாவது ஆகியிருந்தால்...''

''மேடம்! உங்க சிஸ்டர் ரொம்ப தைரியசாலி. அவங்களுக்கு எதுவும் ஆகாது. அவங்களுக்கே தெரியாம பேப்பர் வெயிட்டை தூக்கியெறிஞ்சுட்டான்.

அவன் வொய்ப் கெஞ்சி கேட்டதால விட்டோம். இல்லேன்னா ஜெயில்ல தள்ளியிருப்போம். எம்.டி.யும் ஊர்ல இல்ல. அதனால பிரச்சனையை பெரிசு பண்ண வேண்டாம்னு மேடம் சொல்லிட்டாங்க.''

''அவன் திரும்பவும் வந்து பிரச்சனை பண்ணினால்?''

''மாட்டான்.எல்லாம் தெளிவா எழுதிவாங்கிட்டு தான் அனுப்பினோம்.''

''உமா!''-உள்ளிருந்து தாயின் குரல்கேட்டதும் திரும்பினாள்.

''இதோ வர்றேன்மா. ஸார்! என் தங்கைக்கு எதுவும் ஆகாமல் பார்த்துக்கங்க. அவ சின்னப்பபொண்ணு.''

''மேடம்! அவங்களா சின்னப்பொண்ணு? நாங்களே செய்ய யோசிக்கிற காரியத்தையெல்லாம் அவங்க எவ்வளவு தைரியமா செய்றாங்க தெரியுமா?

ராஜேந்திரனை ஒருவழி பண்ணிட்டாங்க. இனி ஜென்மத்துக்கும் அவன் எங்க ஆபீஸ் பக்கமே வரமாட்டான். அப்படியே வந்தாலும் நாங்க சும்மாவிடமாட்டோம். நீங்க தைரியமா இருங்க.''

''தேங்க்ஸ் ஸார்''- மென்மையாய் புன்னகைத்தவளைக் கண்டு



**''கல்யாணம் ஆயிட்ட பிறகும், பிள்ளை குட்டி பிறந்த பிறகும் கூட நான் 'செல்வி' தான்''**

**''எப்படி''**

**''ஹி...ஹி...என் பேரே செல்விதான்!''**

**-சீர்காழி, வி.ரேவதி**

தானும் புன்னகைத்தான்.

''நான் கிளம்புறேன் மேடம்''

''இருங்க ஸார். காபி சாப்பிட்டு...''

''நோ மேடம். ஏற்கனவே லேட்டா கிப்போச்சு. இன்னொரு நாள் பார்த்துக் கிறேன். வர்றேன்''-என்றவன் புன்ன கையோடு ஆட்டோவில் ஏறி அமர, ஆட்டோ உறுமிக்கொண்டு புறப்பட் டது.

உமா அமைதியாய் வீட்டுக்குள் நுழைந்தாள். படுக்கையில் படுத்திருந்த பாரதி தாயிடம் வெகு ஜாக்கிரதையாய் சந்தேகம் வராதபடி தன் தலைக்காயத் திற்கான காரணத்தை விவரித்துக் கொண் டிருக்க, தாயின் மனதில் பயத்தை ஏற்ப டுத்த விரும்பாமல் அடுக்களைக்குள் நுழைந்தாள்.

பாலை சூடாக்கி அதில் ஹார்லிக்கை கரைத்து தங்கையிடம் கொண்டு வந்து நீட்டினாள்.

''இந்தா! ரொம்ப களைச்சு போயிருப்பியே. குடி''

''அக்கா?''

''உன் வீர தீர சாகசங்களை எல்லாம் கேள்விப்பட்டேன். கேட்கவே ரொம்ப பெருமையா இருந்தது.''

''அக்கா! அது வந்து...''

''குடின்னு சொன்னேன்''-உமாவின் குரல் உயர்ந்ததும் மௌனமாய் வாங்கிக் குடிக்கத்துவங்கினாள் பாரதி. செங்கமலம் எதுவும் புரியாமல் மூத்த மகளை பார்த்தாள்.

''என்ன உமா சொல்ற?''

''அம்மா!''

''ம்?''

''பாரதிக்கும் வயசாகுதே. அப்பாகிட்ட சொல்லி நல்ல மாப்பிள் ளையா பார்க்கச் சொல்லுங்க''

''உமா!''



''ஆமாம்மா! படிக்கணும்னு சொன்னாள். படிக்க வெச்சோம். இப் பத்தான் படிப்பு முடிஞ்சுப்போச்சே. இனி கல்...''

''எனக்கு இப்ப என்ன அவசரம்? நான் வேலைக்குப் போகணும். நிறைய சம்பாதிக்கணும்.''

''பணத்தை மட்டும் சம்பாதிக்கணுமா? இல்ல விரோதிங்களையும் சம்பாதிக்கப் போறியா?''

''அக்கா!''

''நீ சம்பாதிச்சுத்தான் இங்கே நிறையணும்னு இல்ல. பேசாம நாங்க சொல்றதைக் கேளு.''

''அக்கா!இது ஒரு சாதாரண பிரச்சனை. இதுக்குப் பயந்து நான் கல் யாணம் பண்ணிக்கணுமா? என்னால முடியாது''

''ஏன் முடியாது?''

''முடியாதுன்னா முடியாது''

''அது தான் ஏன்னு கேட்கிறேன்? காலம்பூரா இப்படியே இருக்கப் போறியா?''

''ஆமா''-பாரதி அழுத்தம் திருத்தமாய்ச் சொல்ல. உமாவும் செங்கமலமும் அதிர்ந்து போயினர்.

''ஏய்! என்னடி சொல்ற?''

''ஆமாம்மா! அக்காவை இப்படி வெச்சிகிட்டு என்னால கல்யாணம் பண்ணிக்க முடியாது. நானும் அவகூடவே இருந்திடுறேன்''-தங்கை யின் பதிலில் உமாபலமாய் அதிர்ந்தாள்.

''ஏய்! உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?''

''அக்கா?''

''நான் வாழ்ந்து முடிச்சவடி. நீ...''

''கிழவி மாதிரி பேசாதேக்கா. உனக்கு இருபத்தி ஆறு வயசுதான் ஆகுது. மறந்திடாதே.''

''பாரதி! என் வாழ்க்கை அஸ்தமிச்சு போச்சு. இனி அதை நினைச்சு வருத்தப்பட்டு என்ன ஆகப்போகுது?''

''இல்லக்கா! மாலையில மறையுற சூரியன் மறுநாள் உதயமாகித் தானே ஆகணும்?''

''பாரதி?''

''உன் வாழ்க்கையில விடியல் ஏற்பட்டால் தான் என்னை நீ மணக் கோலத்தில் பார்க்க முடியும். இது சத்தியம்''-பாரதி உறுதியாய்ச் சொல்ல உமாவின் உடல் அதிர்ந்தது.

''அம்மா! அம்மா...இவ.. என்ன சொல்றா?''

''உமாம்மா! அவ சொல்றதுலயும் நியாயம் இருக்கே. நீயும் எத்தனை காலம்தான் இப்படியே இருப்பாய்?''

''அ..ம்..மா!''

''எங்க காலத்துக்குப் பிறகு உனக்கு ஒரு துணை வேண்டாமா? தனி மரமா நிற்கிறியே ராஜாத்தி!''

''அம்மா! அவதான் புரியாமப் பேசுறான்னா நீங்களும்...''

''நான் எல்லாம் புரிஞ்சுதான் பேசுறேன். நான் அம்மா அப்பா எல்லாருமே உன்னோட மறுவாழ்க்கையைப் பத்திதான் நினைச்சிட்டு இருக்கோம்.''

''கடவுளே!''-தலையைப் பற்றிக் கொண்டு அமர்ந்தாள் உமா. செங்கமலம் மகளின் தோளை ஆதரவாய்த் தொட்டாள்.

''உமா!''

''அம்மா பிளீஸ்! ஏற்கனவே நான் காயப்பட்டு நிற்கிறேன். திரும்பவும் என்னைக் காயப்படுத்தாதீங்க.''

''அழாதேக்கா! உன்னை அழவெச்சிட்டு அவன் மட்டும் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலாம். நீ மட்டும் இப்படியே முடங்கிக் கிடப்பியா?''



**''நீங்க ரத்ததானம் குடுத்திங்களாமே?''**

**''ஆமாங்க ரத்தத்திலே நிறைய சர்க்கரை இருக்குன்னு சொன்னார். அதான் கொஞ்சம் தானம் கொடுத்தேன்''**

**-ஆர்.கவுரி, வேலூர்.**

''அவன் ஆம்பிளைடி''

''ஆம்பிளைக்கு நூறு பேர் பொண்ணைக் கொடுத்தால் ஒரு பத்து ஆம்பிளைங்களாவது உன்னை மாதிரி பெண்களுக்கு வாழ்க்கை தரமாட்டாங்களா?''

''நீ இன்னும் விளையாட்டு பிள்ளையாவே இருக்க பாரதி.நீ நினைக்கிறது எதுவும் நடக்காது''

''ஏன் நடக்காது?''

''நான் விவகாரத்தானை. அதுவும் என்ன காரணம் சொல்லி அந்த ஆள் என்னை ரத்து பண்ணுனான்? மறந்து போச்சா?'

''எதுவும் மறக்கலக்கா. ஆனா அது எதுவும் உண்மை இல்லையே. அவன் கிட்ட தான் குறைஇருக்குன்னு வெட்டவெளிச்சமாயிடுச்சே.''

''அது உனக்கும் எனக்கும் தானே தெரியும்?''

''ஊருக்கே தெரியும்க்கா, இப்ப அது நமக்கு முக்கியமில்ல. உன்னைக் கட்டிக்க சம்மதிக்கிற மாப்பிள்ளையை நீ மறுக்காம கட்டிப்பியா?''

''என்ன? இன்னொரு கல்யாணமா?''

''ஒருமுறை தோத்திட்டா போராடி ஜெயிக்கணும்க்கா. நீ உன் வாழ்க்கையில ஜெயிச்சாத்தான் எனக்குன்னு ஒரு வாழ்க்கை அமையும். இல்லன்னா நானும் இப்படித்தான் இருப்பேன். முடிவு உன் கையிலதான் இருக்கு''-பாரதியின் உறுதியில் தளர்ந்து போனாள் உமா.




**உறங்கினாலும் விழித்தாலும்**
**ஊர்கள் தோறும் அலைந்தாலும்**
**மயங்க வைப்பது ஒரு முகமே**
**மங்கை உந்தன் திருமுகமே!**

இரண்டு நாட்களாய் பாரதியின் முகம் காண ஏங்கி, தன் வேலைகளை அவசரமாய் முடித்துவிட்டு ஊர்திரும்பிய சஞ்சய் அலுவலகத்தில் நடந்தவற்றை கேட்டு பதறிப்போனான். பாலாவிடம் சீறினான்.

''உங்கிட்ட எத்தனைமுறை சொல்லிட்டு போனேன்? இவ்வளவு கேர்லெஸ்ஸா இருந்திருக்கியே இடியட்!''

''ஸாரி ஸார். நான் வெளியே போனதை பார்த்திட்டுதான் வந்திருக்கிறான்.

''உன்னை யார் வெளியே போகச் சொன்னது?''

''பேங்க்ல கிரெடிட் பண்ணப் போயிருந்தேன் ஸார்''

''ஷிட்! எல்லாத்துக்கும் ஒரு ரீஸன் வெச்சிருப்பியே. இப்ப பாரதி

எப்படியிருக்காங்க?''

''மறுநாளே டியூட்டிக்கு வந்திட்டாங்க ஸார். ரெண்டு நாள் ரெஸ்ட் எடுத்திட்டு வாங்கன்னு சொன்னேன்.பட் அவங்க கேட்கல.''

''பாலா! அடி ஒண்ணும் பலமா படலையே?''

''மூணு ஸ்டிச் போட்டிருக்கு ஸார்''

''மை காட்! நிறைய ப்ளட் வந்திருக்குமே. அந்தப் பொண்ணு எப்படித் தாங்கினாள்? ம்ப்ச்! நான் தான் தப்பு பண்ணிட்டேன். ஊருக்கு போயிருக்கக்கூடாது. என்னாலதான் அவளுக்கு அடிபட்டி டுச்சி''-இருப்பு கொள்ளாமல் அறைக்குள் நடைபோட்டவனை வியப் பாய் பார்த்தான் பாலமுருகன்!

'இது என்ன விந்தை? எதற்கும் பதறாதவன் அலட்டிக் கொள்ளாத வன் இன்று ஏன் இப்படி கிடந்து தவிக்கிறான்? துடிக்கிறான்?'

''பாலா!''

''ஸார்?''

''பாரதி வந்தாச்சா?''

''இன்னும் இல்ல ஸார்''

''வந்ததும் என்னை வந்து பார்க்கச் சொல்லுங்க''

''யெஸ்சார்!''

''சரி. நீ போய் வேலையைப் பார்''

''யெஸ் ஸார்!''-பாலமுருகன் வெளியேறிய பிறகும் சஞ்சயின் பதட்டம் குறையவில்லை. தன் மேஜைமீதிருந்த பேப்பர் வெயிட்டை எடுத்து கையில வைத்து அதன் கணத்தை அளவெடுத்தான்.

எப்படியும் முந்நூறு கிராம் வெயிட் இருக்குமே. இதை வீசியெ றிந்தால் எப்படி வலித்திருக்கும்? கற்பனை செய்து பார்க்கவே மனம் கலங்கியது. ஸாரி பாரதி!என்னால் தான்...

''மே ஐ கமின் ஸார்?''-பாரதியின் தேன் குரலில் திரும்பி ஓடிச் சென்று தானே கதவைத் திறந்தான்.

''கமின் பாரதி! வாங்க''

''குட்மார்னிங் ஸார்'-குளிர்தென்றலாய் புன்னகைத்தவளை இமைக் காமல் பார்த்தவனின் கண்கள் தலையில் போடப்பட்ட கட்டில் நிலைத்தது.

பின்னந்தலையில் கெட்டியாய் பஞ்சு வைத்து அதைச் சுற்றி கட்டு போடப்பட்டிருந்தது. தன்னையும் மீறி அந்தகாயத்தை தொட்டுப்



பார்த்தான்.

''ஸ்ஸ்...''-வலியில் பாரதியின் முகம் சுருங்க, பதறினான்.

''ஸாரி..ஸாரி..''

''பரவாயில்ல ஸார்.''

''ரொம்ப வலிக்குதா?''

''லைட்டா''-பளிச்சென புன்னகைத்தாள்.

''எப்படி...எப்படி உங்களால சிரிக்க முடியுது பாரதி?''

''ஏன் ஸார்? சிரிப்புன்றது மனித இனத்தால் மட்டுமே செய்யக் கூடிய ஒரு காரியம். நான் மனுஷிதானே?''

''ஜோக்கா? நான் எவ்வளவு சீரியஸா பேசிட்டு இருக்கேன்?''

''ஏன் ஸார் என்னாச்சு?''

''அந்த பிராடுபய வந்து இவ்வளவு ரகளை பண்ணியிருக்கான். உங்க மண்டையை உடைச்சிருக்கான். எனக்கு ஒரு போன் பண்ணிச் சொல்லணும்னு கூட தோணல உங்களுக்கு? எங்கிட்ட சொல்லக் கூடாதுன்னு மத்தவங்களுக்கும் ஆர்டர் போட்டிருக்கீங்க? இதுக்கு என்ன அர்த்தம்?'' சற்று கோபமாகவே அவன் கேட்க, மென்மையாய் புன்னகைத்தாள்.

''சொல்லியிருந்தால் என்ன பண்ணியிருப்பீங்க?''

உடனே புறப்பட்டு வந்து அவனை..

இதுதான். இதற்குத்தான் சொல்லவில்லை.

என்ன?

ஸார்!இது ஒரு சாதாரண பிரச்சனை. வேலை போன ஆத்திரத்தில அந்த ஆள் குடிச்சிட்டு வந்து கலாட்டா பண்ணினான். நானும் பேச வேண்டிய விதமா பேசி முடிச்சிட்டேன்.

இது அவனுடைய இயலாமையைக் காட்டினதால் ஏற்பட்ட காயம். உண்மையிலேயே என் தலையில ரத்தத்தை பார்த்ததும் பதறிட்டான்.

போதாக்குறைக்கு நம்ம ஸ்டாப் அவனோட வொய்ப் எல்லோருமே செருப்பு பிஞ்சு போற அளவுக்கு அவனை பின்னி எடுத்துட்டாங்க. ஒரு வாரம் உடம்பை அசைக்க முடியாது. இதுக்கும் மேலே அவ னுக்கு ஒரு தண்டனை தேவையா?

இருந்தாலும் அவனை அப்படியே விட்டிருக்க கூடாது. போலீஸ்ல.

நோ ஸார். சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லாம் போலீஸ்

வரைக்கும் போகக்கூடாது. அது பிரச்சனையை இன்னும் அதிக மாக்கும். அவனுடைய எதிர்காலமும் வீணாகும்.

பாவம்...! மூணு பெண் குழந்தைங்க இருக்குதே. இவனுக்காக அந்தக்குழந்தைங்க ஏன் அவமானத்தை சுமக்கணும்? அதோட நம்ம கம்பெனி பேரும் கெட்டுப்போயிடக்கூடாதுன்னு தான் இதை இப்படியே விட்டுட்டோம்.

தவிர நீங்க முக்கியமான வேலை விஷயமா வெளியூர் போயிருந்தீங்க. இதைச்சொன்னால் வேலை கெட்டுப்போயிடுமே.

அதான் சொல்லவிடல. தப்புன்னா மன்னிச்சிருங்கா.

என்னங்க பாரதி! மன்னிப்பு எல்லாம் கேட்டுகிட்டு.. சரிவிடுங்க.. ஒரு ரெண்டு நாள் ரெஸ்ட் எடுத்திட்டு வரலாமே?

நோ ஸார்.. இந்த வலியைக் கூட தாங்கிக்கலாம். ஆனா வீட்ல எல்லோரும் படுற அவஸ்தையை தாங்க முடியாது.

அப்படீன்னா?



''மந்திரியாரே, உடனே கணக்கெடுப்பை ஆரம்பித்தாக வேண்டும்...!''

''மக்கள் தொகைக் கணக்கெடுப்பைத்தானே சொல்கிறீகள், மன்னா...?''

''ஊகூம்... சின்னவீடு...! எத்தனை என்று குழப்பமாக உள்ளது...!''

-ஆர்.எம்.வடுகநாதன்,
வேதாரண்யம்

காயம்பட்டதை வீட்ல சொல்ல. பட் அக்கா எப்படியோ பாலா ஸார்கிட்ட இருந்து உண்மையை வாங்கிட்டா. அதுல இருந்து ஒரே அட்வைஸ்தான். தாங்க முடியல. கஷ்டமாய் அவள் தலையாட்டியதும் புன்னகைத்தான்.

ஆச்சர்யமா இருக்கு.

எது?

எல்லாத்தையுமே ஈஸியா எடுத்துக்கிறீங்களே. அது எப்படி?

ஸார்! மணி நைன் தர்ட்டி. வொர்க்கிங் ஹவர்ஸ்ல பேசினா உங்களுக்கு சுத்தமா பிடிக்காதே?

அட! ஆமாம். ஸாரி! நான் மறந்திட்டேன்.



ஓ.கே.ஸார். நான் போலாமா?

ஒன் மினிட் பாரதி!- என்றவன் மேசை மீதிருந்த பரிசுப்பொருளை எடுத்து அவளிடம் நீட்டினான்.

இது.. உங்களுக்காக.

எனக்கா? என்ன ஸார் இது?

பிரிச்சுப்பாருங்களேன்.'' - அவன் வேடிக்கையாய்ச் சொல்ல குழப்பமாய் அதைப்பிரித்தாள். வண்ணக்காகிதங்களை கழற்றிவிட்டு உள்ளே பார்த்தவளின்கண்கள் விரிந்தது.

கண்ணாடிப் பேழையில் வெண்முத்துக்களால் பதிக்கப்பட்ட தாஜ் மஹால் சிற்பம் பளபளத்தது.

என்ன ஸார் இது?

இது தெரியாதா? இதுதான் தாஜ்மஹால்.

அது தெரியுது. இதை ஏன் எனக்கு..

நான் எந்த ஊருக்கு போனாலும் ஏதாவது ஒரு பொருள் வாங்கிட்டு வர்றது வழக்கம். இதை ஒரு ஆர்ட் காலரியில பார்த்தேன். வாங்கணும்னு தோணிச்சி. ஏன்? நல்லா இல்லையா?

சேச்சே! எவ்வளவு அருமையான வேலைப்பாடு. அவ்வளவும் முத்துதானே?

யா! பியூர் பேர்ல்ஸ்.

அப்போ விலையும் அதிகமாக இருக்குமே?

ம்.பிப்டி தௌஸண்ட் ஒன்லி.

என்ன? ஐம்பதாயிரமா?

ம் ஜஸ்ட் ஐம்பதாயிரம் தான்.

இந்த பணத்தை நீங்க எவ்வளவு யூஸ் புல்லா செலவழிச்சிருக்கலாம் சார்?

பாரதி?

அடுத்த மாசம் தீபாவளி வருதே. இந்த பணத்தில நம்ம வொர்க்கர்ஸுக்கு டிரெஸ், ஸ்வீட்ஸ்ன்னு எடுத்துக்கொடுத்திருக்கலாம். இல்லன்னா போனஸாக்கூட கொடுத்திருக்கலாம். கைச்செலவுக்கு உதவியாயிருக்கும். - பாரதி சொல்ல சஞ்சயின் முகம் வாடியது.

எத்தனை ஆசையாய் இவளுக்கென்று தேடி அலைந்து வாங்கினது? தன் பிரியத்தை இவளால் உணர்ந்து கொள்ள முடியாதா?

ஏன் ஸார்! அப்செட் ஆகிட்டீங்க? இப்பவும் ஒன்னும் கெட்டுப்

போயிடல..இதை.

வீட்டுக்கு கொண்டு போயிடுங்க.

எங்க வீட்டுக்கு எதுக்கு ஸா. என் தம்பி ஒரே நாள்ல உடைச்சி டுவா. இதை இங்கே உங்க பார்வையில படுறமாதிரி வெச்சிடுறேன்.- என்றவள் சுவரில் மாட்டப்பட்டிருந்த கிறுக்கலான ஓவியத்தை கழற்றி விட்டு அந்த தாஜ்மஹாலை மாட்டினாள்.

நீல நிற சுவரில் கச்சிதமாய் பொருந்தியதை ஒரு கணம் ரசனையாய் பார்த்துவிட்டு அவனிடம் திரும்பினாள்.

எப்படி ஸார் இருக்கு?

ம்..ம்..நைஸ்..

இதைப்பார்க்கும் போதெல்லாம் யாருக்கும் அநாவசியமாய் விலை யுயர்ந்த பொருட்களை வாங்கக்கூடாதுன்னு உங்களுக்குத் தோணனும். அதுக்குத்தான் மாட்டியிருக்கேன். வரட்டுமா ஸார்?- இனிமேல் இப் படி எதையும் வாங்கி வந்து என்னிடம் நீட்டாதே. என சொல்லா மல் சொல்லவிட்டு போனவளைக் கண்டு அசைவற்றுப் போனான் சஞ்சய்.




**ஒன்றும் அறியாத பெண்ணோ**
**உண்மை மறைக்காத கண்ணோ**
**மாற்றுக்குறையாத பொன்னோ**
**மயங்குது நெஞ்சம் தயங்குது கொஞ்சம்!**

மதிய உணவிற்காக அலுவலகத்தை விட்டு வெளியே வந்த பாலமு ருகனின் நெற்றி சுருங்கியது. வாசலுக்கு வெளியே கொளுத்தும் வெயி லில் கையில் சிறு கூடையோடு தயக்கமாய் நின்று கொண்டிருந்தாள்



உமா.

சட்டென அவளை அடையாளம் கண்டு கொண்டவனாய் புன்ன கையோடு நெருங்கினான்.

ஹலோ மேடம்! ஏன் இப்படி வெயில்ல காயுறீங்க? பாரதி மேடத் தைப் பார்க்கணுமா?

இ..ல்ல.. அவளுக்கு சாப்பாடு கொண்டு வந்தேன்.. நெற்றியில் வியர்வை வழிந்தோட அவள் நின்ற கோலம் மனதை வருத்த, அவசர மாய் உள்ளே அழைத்தான்.

"என்னங்க நீங்க? முதல்ல உள்ளே வாங்க"

இருக்கட்டும் ஸார்.

அட! வாங்க மேடம். இந்த வெயில்ல கொஞ்ச நேரம் நின்றால் என் கலருக்கு மாறிடுவீங்க.- விளையாட்டால் சொன்னவனை முதன்மு றையாய் நிமிர்ந்து பார்த்தாள்.

மாநிறமாய் இருந்தாலும் படித்த களையான முகம். சிரிக்கும் கண் கள். இயல்பாகவே புன்னகைத்த முகம். அவன் கண்களை சந்திக்க திராணியற்று மீண்டும் தலையைக் கவிழ்த்து கொண்டாள்.

ஸார்!

சொல்லுங்க மேடம்!

நீங்க தப்பா எடுத்துக்கலன்னா ஒரு ஹெல்ப் கேட்கலாமா?

இது என்ன கேள்வி மேடம்.. ஆர்டர் போடுங்க.. செய்கிறேன்.

வந்து.. இந்த லஞ்சை பாரதிகிட்ட கொடுத்திடுறீங்களா?

ஏன் மேடம்.. நீங்க உள்ளே வந்து..

வேண்டாம்.. வேண்டாம்..

ஏன்? என்னாச்சு?

அவ எம்மேல ரொம்ப கோபமா இருக்கா. அந்த கோபத்தில தான் சாப்பாடு எடுத்திட்டு வராம வந்திட்டாள். பசி தாங்க மாட்டாள். பிளீஸ் கொடுத்திடுறீங்களா?- என தயக்கமாய் நீட்டிய கூடையை வாங்கிக்கொண்டான்.

கொடுத்திடுறேன்.

ரொம்ப தேங்க்ஸ் ஸார்

இதைக்கொடுக்கவா இவ்வளவு நேரம் வெயில்ல நின்னீங்க?

ம்

என்ன மேடம் நீங்க? வாட்ச்மேன் கிட்ட கொடுத்திட்டு போயிருக்

கலாமே?

இல்ல.. லஞ்ச் டைம் எப்போன்னு தெரியல. அதான்.

ஓ.கே.இனிமே வீட்ல என்ன சண்டைன்னாலும் இப்படி வந்து உங்களை வருத்திக்காதீங்க. இங்கேயே கேன்டீன் இருக்கு. உங்க சிஸ்டர் சாப்பிட்டுடுவாங்க.

இல்ல ஸார். அவ வெளியே எங்கேயும் சாப்பிடமாட்டாள்.

ஓ!. சரி. கொடுத்திடுறேன்.

தேங்க்யூ ஸார். அப்புறம்.. நான்தான் சாப்பாடு கொண்டு வந்தேன்னு சொல்லாதீங்க.

ஏன்?

வீம்புக்காரி. எம்மேல உள்ள கோபத்தில சாப்பிடமாட்டாள். என் தம்பி வந்து தந்ததா சொல்லிடுங்க.

அப்படியென்னங்க சண்டை உங்களுக்குள்ள...?

அது.. எனத்தொடங்கியவள் தயங்கி நிற்க, புன்னகைத்தான்.

சரி! சரி! உங்க பர்ஸனல்ல தலையிடமாட்டேன். இப்ப எப்படி வீட்டுக்கு போவீங்க?

பஸ்லதான்.

லஞ்ச் டைம்ல பஸ் கிடைக்கிறது கஷ்டமாச்சே. இருங்க ஆட்டோ பிடிச்சு அனுப்புறேன்.

ஐயோ வேணாங்க. - பதறினாள் உமா.

ஏங்க?

''தனியா ஆட்டோவில போய் பழக்கமில்ல. நான் பஸ்லயே போயிடுவேன். மறக்காம சாப்பாடை பாரதிகிட்ட கொடுத்திடுங்க.''- என்றவாறு விடுவிடுனென கிளம்பிச் சென்றவளைப் பார்க்கையில் பாலமுருகனின் மனதிற்குள் இனம் புரியாத மாற்றம் தோன்றி இம்சிக்கத்துவங்கியது.

தங்கை பாயும்புலி என்றால் இவள் பதுங்கும் மானா? ஆம்! மான் தான்.. மருண்ட விழிகள் மானைத்தானே நினைவுப்படுத்துகிறது. தனக்குள் புன்னகைத்துக்கொண்டே பாரதியைத் தேடிச்செல்ல, அவள் சஞ்சயிடம் இண்டர்காமில் நாசூக்காய் மறுத்துக்கொண்டிருந்தாள்.

''ஸாரி ஸார்! விருந்து சாப்பாடெல்லாம் எனக்கு ஒத்துக்காது. என் அம்மா கையால சமைச்ச சாப்பாடு மட்டும் எனக்கு உள்ளே



இறங்கும்.''- என்று ரீஸிவரை வைத்தாள்.

இதோ வந்திடுச்சி!- என சாப்பாட்டுக் கூடையை நீட்டினான் பாலமுருகன்.

பாலா ஸார்?

உங்க அம்மா கையால சமைச்ச சாப்பாடு.

இது எப்படி உங்ககிட்ட?

உங்கள் சிஸ்.. இல்ல பிரதர் வந்து தந்திட்டு போனாரு.

தம்பியா? இருக்காதே? அவன் காலையிலே ஸ்கூலுக்கு போயிட்டானே?

யார் தந்தால் என்ன மேடம்? சாப்பிடுங்க.

அக்கா வந்தாளா?- பாரதியின் குரலில் கோபம் தொனிக்க, பாலமுருகனின் முகம் கனிந்தது.

மேடம்! பாவம் அவங்க.. இந்த வெயில்ல கால்கடுக்க நின்னுட்டு இருந்தாங்க.. யாருக்காக? உங்களுக்காகத்தானே? நீங்க பசியில வாடக்கூடாதுன்னு தானே?

பாலா ஸார்..

பிளீஸ் மேடம்.. இனிமே எதுக்காகவும் அவங்களை கோவிச்சுக்காதீங்க.. இந்த மாதிரி அன்பான உறவுகள் எல்லோருக்கும் அமையுறதில்லை..- பாலமுருகனின் வார்த்தைகள் தடைபட, பாரதியின் முகம் மாறியது.

ஸார்?

ஸாரி! தப்பா எதுவும் சொல்லியிருந்தால் மன்னிச்சிடுங்க.. சாப்பிடுங்க மேடம்..- என்றவாறே அவன் வெளியேற, தயக்கமாய் அவனைப் பார்த்துக்கொண்டே நின்றாள்.



''என் தாத்தா இப்படியாரு சீரியல் பைத்தியமா இருப்பாருன்னு நினைக்கலே...''

''ஏன் என்ன ஆச்சு?''

''சீரியலைப் பார்த்து ஆன்னுவாயைப்பிளந்துகிட்டு இருந்தப்போ, யாரோ ரெண்டு தங்கப் பல்லையும் எடுத்துட்டுப் போயிட்டாங்க...!''

**-ஆர்.எம்.வடுகநாதன், வேதாரண்யம்**

பின் மனம் இளகியவளாய் சாப்பாட்டு பாத்திரத்தை திறந்து உமாவை எண்ணியவாறே சாப்பிடத்துவங்கினாள்.

தன் அறையிலிருந்து அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்த சஞ்சயின் உள்ளம் உலைக்களமானது. தான் அழைத்த போது மறுத்தவள் இப்போது அவன் கொடுக்கும் சாப்பாட்டை ரசித்து சாப்பிடுகிறாளே!

அப்படியென்றால் இந்த சாப்பாடு மட்டும் உள்ளே இறங்குமா என நேரிடையாய் கேட்டுவிடத் துணிந்தவன் தன்னையே கட்டுப்படுத்திக் கொண்டான்.

முதலில் சாப்பிடட்டும், அதைத்தடை செய்ய வேண்டாம் என்றவாறே தன் வீட்டிலிருந்து வந்த சாப்பாடு கூடையை மூடிவைத்தான். பசி சுத்தமாய் மறைந்து விட்டிருக்க,, பாரதியின்மேல் கோபம் கோபமாய் வந்தது.

அதை வெளிக்காட்ட முடியாமல் மனம் கொதித்து கொண்டிருந்த போது பாரதி கதவை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தாள்.

ஸார்! இன்னிக்கு மூணு மணிக்கு ஆடிட்டரை பார்க்கணும்னு சொன்னீங்க.

ம்.. ம்.. பார்க்கலாம்.. சாப்பிட்டாச்சா?

ஆச்சு ஸார்.

உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்

சொல்லுங்க ஸார்.

உட்காருங்க.. - இறுகிய முகத்துடன் எதிரே இருந்த இருக்கையைக் காட்ட குழப்பமாய் அமர்ந்தள்.

மிஸ் பாரதி!

ஸார்?

நான் உங்க.. - எனத் தொடங்கிய போது பாரதியின் செல்போன் கிணுகிணுத்தது., தயக்கமாய் அவனை ஏறிட, பேசுங்க. என்றான். போனை காதில் வைத்துமெல்லிய குரலில் பேசினாள்.

ஹலோ!

பாரதி! நான் ரமேஷ் பேசுறேன்.- என்ற குரலில் வியந்து சட்டென்று எதிரே இருப்பவனின் பார்வையை கவனித்து குரலை தழைத்துக் கொண்டாள்.

என்ன ரமேஷ்? இந்த நேரத்தில்...



நான் உங்கிட்ட அவசரமா பேசணும்

ஸாரி! நான் ஆபீஸ்ல இருக்கேன். அப்புறமா பேசலாமே.

நோ.. நான் இப்பவே பேசியாகணும்.. அதுவும் நேர்ல- பிடிவதமாய் வந்த பதிலில் திணறினாள் பாரதி.

அவளது முக மாற்றத்தை கூர்ந்து கவனித்து கொண்டிருந்த சஞ்சயின் முகம் மேலும் இறுகியது.

யார் பாரதி?

அ..து..'' தெரிஞ்சவங்க தான் ஸார்.

இப்ப நம்ம பேசலாமா?

பே..சலாம்.. ஸார்- என போனைக்கட் பண்ணினாள்.

ஸாரி ஸார்!சொல்லுங்க ஸார்.

பாரதி! நான் உங்களை.. என்றபோது மீண்டும் அவளிற்கு அழைப்பு வர கடுப்பானான் சஞ்சய்.

ஸாரி ஸார்.

பேசுங்க பேசி முடிங்க.. நான் வெயிட் பண்றேன்.- அவனது குரலில் கோபம் தொனிக்க எரிச்சலாய் போனை ஆன் பண்ணினாள்.

ரமேஷ்!நான் முக்கியமான வேலையா இருக்கேன். அப்புறமா...

இது அதை விட முக்கியமான வேலை. இப்பவே உன்கிட்ட பேசியாகணும்.

அப்படியென்ன முக்கியமான விஷயம்.

கல்யாண விஷயம்.

எ..ன்ன? கல்யாண.. விஷயமா?

ஆமா! உங்கப்பா இப்போ எங்கவீட்லதான் இருக்காரு... குடும்பத்தோட கல்யாணத்தைப் பத்தி பேசிட்டு இருக்காங்க.- ரமேசின் வார்த்தையில் பாரதியின் முகம் மலர்ந்தது

அட! நல்ல விஷயம் தானே? அப்பாதான் பேசுறாங்களே. என் கிட்ட பேசணும் என்ன நீங்க?

நிறைய விஷயம் பேசணும்.. உடனே கிளம்பி இங்கே பக்கத்தில இருக்கிற காந்தி பார்க்குக்கு வா..

ரமேஷ்! என்ன இது? நான் இப்போ எங்கேயும் வரமுடியாது.

இன்னும் அரைமணி நேரம் வெயிட் பண்ணுவேன். அதுக்குள்ள நீ வரலேன்னா நான் உன் ஆபீசுக்கு வர வேண்டியதிருக்கும்.- உரத்த குர

லில் மொழிந்துவிட்டு போனை வைத்து விட்டான் ரமேஷ்.

பாரதி இன்னும் திகைப்பு மாறாமல் காதிலிருந்து போனை எடுக்க, சஞ்சயின் கனவு மாளிகை சடசடவென உதிரத்துவங்கியது.

அவர்களது பேச்சைக்கவனியாதவன் போல் தன் முன் இருந்த கோப்புகளில் பார்வையைப் பதித்திருந்த போதும் ரமேசின் பலத்த குரல் அவனது செவியைத் தீண்டாமலில்லை.

கல்யாண விஷயம் பேசுகிறார்கள் என்றதும் இவளது முகத்தில் எத்தனை மலர்ச்சி? அப்படியென்றால் இவள் அந்த ரமேசை விரும்புகிறாளா? அவனுக்காக நிச்சயிக்கப்பட்டவளா?

அதனால் தான் நான் கொடுக்கும் பரிசை மறுத்தாளா? என்னுடன் அமர்ந்து சாப்பிட, என்னோடு காரில் வருவதை நிராகரித்தாளா? ச்சே! ஒரு பெண்ணின் மனதில் என்ன இருக்கிறதென்று புரியாமல் என் மனதில் ஆசையை வளர்த்துக் கொண்டேனே?

ஸார்! பாரதி தயக்கமாய் அழைக்க தன் முகத்தை இயல்பாக்கிக் கொண்டே நிமிர்ந்தான்.

யெஸ்! சொல்லுங்க.

நான் கொஞ்சம் அவசரமா.. வெளியே போகணும்.. ஒரு ஒன் அவர் பெர்மிஷன் கொடுத்தீங்கன்னா.

திருமண பேச்சு பேச ஒன் அவர் போதுமா?

ச்சே! அவர் எங்க பேமிலி பிரெண்ட் ஸார்!

இந்தக்கல்யாணத்துக்காக எங்க ஒட்டுமொத்தக் குடும்பமே பிரார்த்தனை பண்ணிட்டு இருக்கு

ஓஹோ!

ரமேஷ் பேமிலி அருமையான பேமிலி ஸார். அவங்க அப்பாவுக்கு ரொம்பப் பெரிய மனசு.. ரமேசுக்கும் தான்- பாரதி பெருமையாய்ச் சொல்ல, சஞ்சயின்



**“இந்த டாக்டரு கிட்டேதான் ஒரு வருடமா வைத்தியம் பண்ணிட்டுருக்கேன்...!”**

**“வியாதிகள் எல்லாமே போயிடிச்சா...?”**

**“இல்ல...ஆனா,என்சொத்து எல்லாமே போயிடிச்சு...!”**

**-ஆர்.எம்.வடுகநாதன், வேதாரண்யம்**



இதயம் அடைத்துக்கொணடது.

அந்த அளவிற்கு அவனை விரும்புகிறாயா பாரதி. நான்.. நான் அதிர்ஷ்டமில்லாதவன்,. அந்த ரமேஷ் அதிர்ஷ்டசாலி. இனி.. உன்னைப்பற்றி நினைப்பது கூட தவறு. நீ இன்னொருவனுக்கு சொந்தமானவள். உன்னுடன் வாழ எனக்கு கொடுப்பினை இல்லை - மனம் கனத்து சஞ்சயின் கண்கள் கலங்கத்தயாராயின.

## 11

**கண்ணில் என்ன கார்காலம்**
**கன்னங்களில் நீர்க்கோலம்**
**அழகே மலரே துணை நான்**
**உயிரே துயரம் விடு!**

காந்தி பார்க் மதிய வேளையில் வெகு அமைதியாய் இருந்தது. வெயிலின் தாக்கம் இல்லாமல் அடர்த்தியான மரங்கள் சூழ்ந்திருந்தது. ஆங்காங்கே இருந்த சிமெண்ட் பெஞ்சுகளில் ஒரு சில வயதான தம்பதிகள் அமர்ந்து தங்களுடைய மலரும் நினைவுகளை பகிர்ந்து கொண்டிருந்தனர்.

ஒரு சில விடலைப்பருவங்கள் தங்கள் இணையோடு அமர்ந்து கிசுகிசுத்துக் கொண்டிருக்க, மரங்களில் இளைப்பாறும் பறவைகளின் ஒலியைத்தவிர வெகு அமைதி நிலவியது. குழந்தைகளுக்காக போடப்பட்டிருந்த சறுக்கு மரத்தின் அருகே நின்று கொண்டிருந்த ரமேஷைக் கண்டதும் புன்னகையோடு அவனை நெருங்கினாள்.

ஹாய் ரமேஷ்! பாரதியின் அழைப்பில் திரும்பிய ரமேஷ் அழகாகவும் அதைவிட கோபமாகவும் இருந்தான்.

வந்திட்டியா? எங்கே வரமாட்டியோன்னு நினைச்சேன்?

அதெப்படி ரமேஷ்? நானே உங்களைப்பார்த்து பேசணும்னு அப்பாகிட்ட சொல்லிட்டு இருந்தேன். நீங்க பத்துநாளா ஊர்ல இல்லையாமே?

ஆமா! நேற்று தான் வந்தேன்.

அப்படியா? சொல்லுங்க ரமேஷ்! என்ன விஷயம்? அதுக்கு முன்னால உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறேன். ரமேஷ்! தேங்க்யூ வெரிமச்.

எதுக்கு?

என்ன ரமேஷ் இப்படிக் கேட்கிறீங்க? எங்க குடும்பமே உங்களுக்கு நன்றிக்கடன்பட்டிருக்கு. உங்களுக்கு எவ்வளவு உயர்ந்த மனசு?

வெயிட் பாரதி! நீயும் உன் அப்பா மாதிரியே பேசாதே.

ரமேஷ்?

என்ன நினைச்சிட்டு இருக்கார் உன் அப்பா? என் மனசில என்ன இருக்குன்னு தெரியாம அவங்களே பேசி முடிவெடுத்தா அதுக்கு என்ன அர்த்தம்? சுற்றுப்புற அமைதியை கீறிக்கொண்டு ரமேஷ் சீற, முகம் மாறினாள் பாரதி.

ர..மே...ஷ்! என்ன ஆச்சு?

இன்னும் என்ன ஆகணும்? உங்க அப்பாவும், எங்கப்பாவும் சேர்ந்து என்ன காரியம் பண்றாங்க தெரியுமா?

எ..ன்ன பண்ணினாங்க?

என்னை உன் அக்காவுக்கு கட்டி வைக்க ஏற்பாடு பண்றாங்க. எத்தனை பெரிய ஏமாற்று வேலை இது? ஆக்ரோசமாய் அவன் கேட்க, திகைத்துப்போனாள் பாரதி

ரமேஷ்! என்ன சொல்றீங்க?

பார்த்தியா? நீயே இவ்வளவு ஷாக்கானால் எனக்கு எப்படி இருக்கும்? அதான் ரெண்டு பெருசுகளையும் தாறுமாறாத்திட்டிட்டு வந்திட்டேன்.

எ..ன்..ன? எங்க அப்பாவைத் திட்டுனீங்களா?

அதிர்ச்சியாய்க் கேட்டவளைப்பார்த்து அலட்சியமாய்க்கேட்டான்.

பின்னே? வேற என்ன செய்யச்சொல்ற?

ஏன்? எங்க அப்பாவைத்திட்ட வேண்டிய அவசியம் என்ன வந்தது? உங்ககிட்ட கேட்டுட்டுத்தானே எல்லா பேச்சையும் தொடங்கினாங்க?

ஹேய்! என்ன நீ புதுசா கதை விடுற?

ரமேஷ்! நீங்க கூட அக்காவைக்கட்டிக்க சம்மதம் சொன்னீங்களாமே?

ஏய்! சீச்சீ! யார் சொன்னது? முகச்சுளிப்போடு சொன்னவனைப் பார்க்கையில் பாரதியின் இயல்பான குணம் தலை தூக்கியது. குரலை உயர்த்தினாள்.

ரமேஷ்!



இதோ பாரு பாரதி! எம் பொண்ணை கட்டிக்க சம்மதமான்னு கேட்டாங்க. நானும் தலையாட்டினேன். ஆனா அது உமான்னு எனக்குத் தெரியாது.

வ்வாட்?

நீன்னு நினைச்சுத்தான் சம்மதிச்சேன். இப்ப என்னன்னா உன் அக்கான்னு சொல்றாங்க. என்னைப்பார்த்தால் இளிச்சவாயன் மாதிரி தெரியுதா? என்றதில் பலமாய் திகைத்தாள்.

ரமேஷ்! ஏன் இப்படியெல்லாம் பேசுறீங்க. நீங்க சம்மதிச்சபிறகு தான் எங்க அக்காகிட்ட பேசி கொஞ்சம் கொஞ்சமா அவ மனசை மாத்திட்டு இருக்கோம். இந்த சமயத்தில்..

ஸ்டுப்பிட் மாதிரி பேசாதே பாரதி. எனக்கு எப்பவுமே செகண்ட் ஹேண்ட் பொருளை வாங்குறது பிடிக்காது.

ரமேஷ்!

நான் படிச்சிருக்கேன். நல்ல வேலையில இருக்கேன். கை நிறைய சம்பாதிக்கிறேன். நான் ஏன் ஒரு டிவர்ஸ் ஆன பொண்ணை அதுவும் மலட்டு பொண்ணைக் கட்டிக்கணும்?

ரமேஷ்! கிறீச்சிட்டாள் பாரதி. ஆத்திரத்தில் முகம் சிவக்க ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தாள்.

வார்த்தையை நிதானிச்சு பேசு.

எங்கிட்ட ஏன் கோபப்படுற பாரதி. இதையெல்லாம் நீங்களே யோசிச்சிருக்கணும். உன் அக்காவுக்கு கல்யாணம் பண்றது நல்ல விஷயம் தான். ஆனா என்னை ஆசைப்பட்டது தான் தப்பு.

ஒரு நாற்பது அம்பது வயசுக்காரரா மனைவியை இழந்திட்டு குழந்தைகளை வெச்சிக்கிட்டு அல்லாடுறவனா பார்த்திருக்கணும். மைனஸூம் மைனஸூம் பிளஸ்ஸாகுற மாதிரி பொருந்திப் போயிருக்கும்.

அதை விட்டுட்டு வாட்ட சாட்டமா இருக்கிற என் மேலே ஆசைப்பட்டால் எப்படி? இது பேராசை இல்ல? அலட்சியமாய்க் கேட்டவனைப்பார்த்து விரக்தியாய் சிரித்தாள் பாரதி

தப்புதான். என் அப்பா அவரோட நண்பரை மாதிரியே அவரோட புள்ளைக்கும் விசாலமான மனசு இருக்கும்னு தப்பு கணக்கு போட்டுட்டாங்க.

ஆனா நீ இவ்வளவு குப்பைகளை



**'பல்' எடுக்கப் போனாயே.. ஏன் திரும்பி வந்துட்டே?"**

**"டாக்டர் 'பில்' அதிகம் கேட்டார்!"**

**-காசிதாசன், வந்தவாசி**

மனசுக்குள்ள வெச்சிருக்கிறவன்னு எனக்கே இப்பத்தானே தெரியுது. உன்னைப் போய் ரொம்ப உயர்ந்தவன்னு நினைச்சேனே? நீ படிச்சிருக்கலாம். கை நிறைய சம்பாதிக்கலாம்.

ஆனா உம்மனசு வெறும் இருட்டுதான்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வாழ்க்கையளிக்கக்கூடிய பெருந்தன்மை உன்கிட்ட இல்லாம இருக்கலாம்.

ஆனா அதை நாகரிகமா மென்மையா மறுக்கக்கூடத் தெரியலையே. நீயெல்லாம் என்னடா படிச்சு கிழிச்ச?

பாரதீ!

ஷ்! கத்தாதே! நான் இங்கே வரும் போது இந்த இடத்தை கூட்டி பெருக்குறவர் காலை தெரியாம மிதிச்சுட்டேன். அதுக்கு அவர் கோபப்படல. பார்த்துப் போங்கம்மான்னு பரிவா சொன்னாரு. படிச்ச உன்னை விட அந்த மனுஷன் உயர்வானவர்..

படிக்கிறதுலயோ பணம் சம்பாதிக்கிறதுலயோ ஒருத்தர் உயர்வாக முடியாது. மனசு. பரந்த மனசு. அன்பான மனசு இருக்கணும். கனிவான பேச்சு இருக்கணும். அடுத்தவங்க மனசு புண்படாம பேசத்தெரிஞ்சிருக்கணும்.

இது எதுவுமே இல்லாத நீ இதை விடக்கேவலமானவன் - என ஓரமாய் கூட்டி வைத்திருந்த குப்பையைக் காட்டிவிட்டு திரும்பி நடக்கத் துவங்கினாள்.

அவமானத்தால் முகம் சிவக்க வேகமாய் அவள் முன் வந்து கை நீட்டி தடுத்தான்.

எனக்கு பதில் சொல்லாமப் போறீயே.

அதான் சொன்னேனே. நீ ஒரு குப்பைன்னு.

வேணாம் பாரதி. என் பொறுமையை சோதிக்காதே.

எனக்கு உமாவைக் கட்டிக்கத்தான் விருப்பமில்ல. உன்னைக்கட்டிக்க முழு சம்மதம்.

ஒரு குப்பையைக்கட்டிக்க இந்த பாரதி ஒன்னும் குருடி இல்ல.

பாரதி!

லுக்! சதாசிவம் அங்கிளோட பையன்றதால இதோட விட்டுட்டுப்போறேன். இதுக்கு மேலே எம்பேரைச் சொல்லிட்டு பின்னாடி வந்தேன் செருப்பு பிஞ்சிடும்.

ஏய்!

போடா! புறங்கையால் ஒதுக்கிவிட்டு விடுவிடுவென வெளியேறினாள். மனம் எரிமலையாய் குமுறிக்கொண்டிருந்தது. ஆத்திரமும் அவமானமும் பீறிட்டுக் கொண்டு வந்தது

இதே முகத்தோடு வேலைக்குச் செல்ல முடியாது என்று தோன்றிட, பேசாமல் வீட்டுக்கு போய் விடலாம் என நடக்கத்துவங்கினாள்.

மனதை அதன் கொந்தளிப்பை அடக்க சிறிது நேரம் அமைதி தேவைப்பட்டது. இவனுக்காக அக்காவிடம் சண்டையிட்டோமே. அவள் மனதை புண்படுத்தினோமே என்ற எண்ணம் தோன்றிட, கண்களில் நீர் ஊற்றெடுத்தது.

அக்கா! என்னை மன்னித்துவிடு. உன்னை வெயிலிலிருந்து காப்பதாய் நினைத்துக்கொண்டு அடுப்பிலிடப்பார்த்தோமே- மனம் விம்ம, கண்ணீர் வழிந்தோடியது.

நடுரோடு என்றும் பாராமல் விம்மிக்கொண்டு கடந்து சென்றவளைக்கண்டு சிக்னலில் நின்ற காருக்குள் இருந்த சஞ்சயும் பாலமுருகனும் திகைத்துப்போயினர்.



**''அரசே... போருக்குப் புறப்படுகிற தாங்கள் காலணி அணியாமல் செல்கிறீர்கள்...?''**

**''புறமுதுகிட்டு ஓடி வரும்போது அதை வேறு தூக்கிக் கொண்டு ஓடி வரவேண்டியிருக்கிறது...!''**

**-ஆர்.எம்.வடுகநாதன்,**
**வேதாரண்யம்**






**நங்கை உந்தன் கூந்தலுக்கு**
**நட்சத்திரப் பூப்பறித்தேன்**
**நங்கை வந்து சேரவில்லை**
**நட்சத்திரம் வாடுதடி!**

கரியவானில் வைரத்துணுக்குகளாய் மினுக்கிய நட்சத்திரக்கூட்டங்களை வெறித்துக்கொண்டிருந்தான் சஞ்சய். வழக்கமாய் ரசிக்கும் மனம் இன்று வெறுமையாய் இருந்தது. கண்ணை சிமிட்டிக்கொண்டிருக்கும் நட்சத்திரங்களில் எல்லாம் பாரதியின் முகங்களே பிரதிபலித்

தது.

ஏன் அழுதாள்? உற்சாகமாகத்தானே புறப்பட்டு போனாள்? பிறகேன் அந்தக்கண்களில் அத்தனைக்கண்ணீர்! நடுவீதியில் போய்க் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வில்லாமல் அப்படி கண்ணீர் சிந்தும்படி என்ன நடந்திருக்கும்?

அந்த ரமேஷுக்கும் இவளுக்கும் ஏதேனும் உரசலா? இல்லையே! அதற்கெல்லாம் கலங்குபவள் அல்லவே பிறகேன் அழுதாள்? வெகு நேரமாய் இதே சிந்தனையில் உழன்று கொண்டிருக்க, நெற்றிப்பொட்டில் வலித்தது.

சஞ்சய்! தந்தையின் மென்குரலில் கலைந்து திரும்பினான்.

அ.. அப்பா!

என்னப்பா! சாப்பிடாம இங்கே வந்து நிற்கிற? அம்மா கூப்பிடுறா பார். வா சாப்பிடலாம்.

இ.. இல்லப்பா! எனக்கு பசிக்கல. நேராய் பார்த்து பேசாத மகனை உற்றுப்பார்த்தார் கிருஷ்ணதாசன்.

என்னடா கண்ணா? இன்னிக்கு என்ன பிரச்சனை?

ஒ..ண்ணுமில்லப்பா

அப்பா கிட்ட ஏம்ப்பா மறைக்கிற? சும்மா சொல்லு. அந்த பாரதிப் பொண்ணைப் பத்திதானே நினைச்சிட்டு இருக்க?

அ..ப்..பா!

என்ன? இன்னிக்கு எதுக்காவது உங்கிட்ட கோவிச்சுக்கிட்டாளா?

இ.. இல்லப்பா!

வேற என்ன? நீ அவகிட்ட எதையாவது சொல்லிட்டியா? நான் தான் கொஞ்ச நாள் போகட்டும்ன்னு சொன்னேனே. அவசரப்பட்டு சொல்லிட்டியா? ஆர்வமாய் கேட்ட தந்தையை பார்க்கையில் தொண்டை அடைத்தது.

அப்பா!

என்னப்பா?

நான் நினைச்சது எதுவும் நடக்காதுப்பா.

சஞ்சய்?

ஆமாம்ப்பா! அந்தப்பொண்ணுக்கு ஏற்கனவே வேற மாப்பிள்ளை பார்த்திட்டாங்க போலிருக்கு. லவ்பண்றாங்கன்னு நினைக்கிறேன். பேமிலி பிரெண்டாம்.



இதெல்லாம் உனக்கு யார் சொன்னது?

அவளே சொன்னாள். எம் முன்னாடி தான் போன்ல பேசினாள். நான் தான் பையத்தியக்காரத்தனமா அவளை நினைச்சிட்டு இருந்திருக்கேன். ம்ப்ச்! வருத்தமாய் சொன்ன மகனைக்கண்டு வருந்தினார்.

அவளை பார்த்த முதல்நாளிலிருந்து அன்றாட நிகழ்வுகளை ஒரு தோழனாய் பகிர்ந்து கொண்ட பிள்ளை இன்று கலங்கி நிற்பதை கண்டு பெற்ற மனம் தவித்தது.

சஞ்சய்!

அப்பா?

நான் வேணா அந்தப் பொண்ணுகிட்ட பேசிப்பார்க்கட்டுமா?

நோ டாடி. நோ. அவ மனசில இன்னொருத்தன் இருக்கான்னு தெரிஞ்ச பிறகும் என் விருப்பத்தைச் சொல்றது பெரிய தப்பு.

இப்படி கலங்கிப்போய் நிற்கிறியேப்பா!

மனசுக்கு வலிக்கத்தான் செய்யுது. ஆனா தாங்கித்தான் ஆகணும். ஆனா இப்ப என் மனசு பூரா அவ அழுததை நினைச்சித்தான் குழம்பித் தவிக்குது

என்ன? அழுதாளா? ஏன்?

மதியம் நடந்தவற்றையும் சாலையில் அவளைக்கண்ணீரோடு பார்த்ததையும் மகன் சொல்ல யோசனையில் ஆழ்ந்தார் கிருஷ்ணதாசன்.

ஒரு வேளை அவங்களுக்குள்ள எதுவும் பிரச்சனையோ?

எனக்கும் அப்படித்தாம்ப்பா தோணுது. அவளோட பிரச்சனையை சால்வ் பண்ணி அவமுகத்தில சிரிப்பை வரவழைக்கணும்னு மனசு கிடந்து அடிச்சுக்குதுப்பா-என்ற மகனை வியப்பாய் ஏறிட்டார்.

நேற்று வரை வாழ்ந்தால் அவளோடுதான் என்ற மகன் இன்று அவர் வேதனையை தீர்த்து அவனோட சேர்த்து வைக்கத்துடிக்கிறானே? என்ன பிள்ளை இவன்? என் மகனின் மனம் இத்தனை உயர்வானதா?

அப்பாவும், புள்ளையும் என்ன பண்றீங்க? சாப்பிட வாங்கப்பா - கீழேயிருந்து தாயின் குரல் கேட்டதும் தந்தையிடம் திரும்பினான்.

அப்பா! அம்மாவுக்கு இப்ப எதுவும் தெரியவேண்டாம். பிறகு சொல்லிக்கலாம்.

சரிப்பா - மகனின் வார்த்தையை மதித்து அதோடு விட்டு விட்டார். இருவரும் படிக்கட்டில் இறங்க மகனை அழைத்தார் கிருஷ்ணதாசன்.

சஞ்சய்!

அப்பா?

மனசைப்போட்டு குழப்பிக்காதே. எதுக்கும் நாளைக்கு பாரதி வந்ததும் என்ன பிரச்சனைன்னு கேட்டுப்பார். நம்மால எதுவும் ஹெல்ப் பண்ணமுடிஞ்சா செய்யலாம்.

சரிப்பா!

ஆனா இது அவங்களுக்குள்ள ஏற்பட்ட சாதாரண ஊடலா இருந்தால் நாம தலையிட முடியாது. அது அநாகரீகமாகப் போயிடும். புரியுதா?

புரியுதுப்பா. நான் பார்த்துக்கறேன்.

சரி. எதுவும் பிரச்சனைன்னா எங்கிட்ட சொல்லு,

ம்.ம். மவுனமாய் தலையாட்டிய மகனைக் கண்டு அவர் மனம் வாடியது. என் பிள்ளையை கட்டிக்கொள்ள அவளுக்கு யோகமில்லையா? இல்லை அவளைக் கட்டிக்கொள்ள என் பிள்ளைக்கு கொடுப்பினை இல்லையா?

ஆண்டவா! எதுநடந்தாலும் நல்லாதாகவே நடக்கட்டும்.

என் பிள்ளையின் மனதை நோகடித்து விடாதே. அவன் சோர்வதைக்காண எனக்கு சக்தியில்லை. கிருஷ்ணதாசன் பெருமூச்சோடு இறைவனை வேண்டிக்கொண்டிருந்த நேரம். பாரதி தன் வீட்டில் கடவுளின் திருவுருவபடத்தின் முன் நின்று மனமுருகிக்கொண்டிருந்தாள்.

கதிர்வேலனும் செங்கமலமும் ஒரு புறம் முடங்கிக்கிடக்க, நடந்தவற்றை அறியாத மோகன் கவலையின்றி உறங்கிக்கொண்டிருந்தான்.



**"உன்னோட முருங்கைக்காய் தோலையெல்லாம் எதுக்கு என் இலைக்குப் பக்கத்துல வைக்கிறே?"**

**"உஷ்...சத்தமா கேக்காதீங்க... என் இலையைப் பார்த்தால் எல்லாரும் கண்ணு வைப்பாங்கன்னுதான் பாதியைப் பிரிச்சு உங்க இலையில போட்டேன்!"**

**வி.ரேவதி, தாம்பரம்.**

பாத்திரங்களைக் கழுவி கவிழ்த்துவிட்டு அடுக்களை விளக்குகளை அணைத்து விட்டு வந்த உமா சாமிபடத்தின் முன் நின்று விழிகள் கசிய வேண்டிக் கொண்டிருந்த தங்கையை புன்னகையோடு ஏறிட்டாள்.

என்ன? வேண்டுதல் பலமா இருக்கு? தமக்கையின் கேள்வியில் பாரதியின் கண்கள் திறந்தன.

வேண்டினது போதும். வந்து படு. காலையில வேலைக்கு போகணுமில்ல?

அக்கா!

ம்?

உனக்கு வருத்தமே இல்லையா?

வருத்தமா? ஏன் வருத்தப்படணும்?

அக்கா?

பாரதி! இப்படியெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சு தான் நான் முதல்லயே வேண்டாம்னு சொன்னேன்? நீங்க தான் கேட்கல. அதிலும் நீ பெரிய புரட்சி பண்றதா நினைச்சி உண்ணா விரதம் , மவுனவிரதம்னு இருந்து என்னை சம்மதிக்க வெச்சு இப்ப என்ன ஆச்சு? ஆளாளுக்கு சங்கடப்பட்டு சாப்பிடாம முடங்கிக்கிடக்கிறீங்க? இதெல்லாம் தேவையா? நான் தான் நான் உண்டு என் வேலை உண்டுன்னு நிம்மதியா இருக்கேனே!

என்னை வாழ வைக்கிறதா நினைச்சி நீங்க ஏன் அவமானப்படுறீங்க? இதெல்லாம் சரியாவராது பாரதி. விட்டுடு.

அக்கா! நீ நிஜமாவே நிம்மதியா இருக்கியா?

ஆமா! அந்த ஆளுகூட வாழ்ந்ததை விட இப்பத்தான் எந்த மன உளைச்சலும் இல்லாம நிம்மதியா சந்தோஷமா இருக்கேன்.

ஆனா நாங்க சந்தோஷமா இல்லயேக்கா.

பாரதி!

வாழவேண்டிய வயசுல இப்படி ஒத்தையா நிற்கிறியே. உன்னைப் பார்த்து அம்மாவும் அப்பாவும் எவ்வளவு வேதனைப்படுறாங்க தெரியுமா?

வேதனைப்பட்டால் எல்லாம் மாறிடுமா? இது என் விதி பாரதி.

இல்லக்கா! மனுஷங்க பண்ற தப்புக்கு விதிமேலே பழிபோடக் கூடாது. என்னால உன் விதியை மாத்த முடியும்? என்று உறுதியாய் சொன்னவளைப் பார்த்து விரக்தியாய் புன்னகைத்தாள் உமா.

என்ன? மறுபடியும் புரட்சியா? ஒருத்தன் கிட்ட அவமானப்பட்டது போதாதா உனக்கு?

ரமேஷை மாதிரி முட்டாளை தேர்ந்தெடுத்தது தான் தப்புக்கா. நல்ல மனசுள்ள எத்தனையோ ஆம்பிளைங்க இருக்காங்க. அதுல ஏதாவது ஒரு உத்தமனை உனக்கு.

பாரதி... உமா கத்தினாள்.

கோபப்படாதக்கா! நான் எப்படியும்...

வாயை மூடு. இப்படி கண்டபடி உளறுறத முதல்ல நிறுத்து. எரிச்சலா இருக்கு. இது எதுவுமே சரிப்பட்டு வராது.

ஏன்க்கா சரியா வராது?

பாரதி! நல்லவனோ கெட்டவனோ அவனுக்கு பெண் கொடுக்க ஆயிரம் பேர் வருவாங்க. ஒரு ஆம்பிளை எத்தனை வயசுல கல்யாணம் பண்ணினாலும் அவனுக்கு இளமையான புதுப்பொண்டாட்டிதான் கேட்பான்.

இது காலங்காலமா நடந்திட்டு வர்றதுதானே. ஒரு பொண்ணு அவமேலே எந்தத் தப்பு இல்லாட்டியும் புருஷனை விட்டு பிரிஞ்சிட்டா அவளை இந்த சமூகம் மதிக்கிறதில்லயே.

ஆனா நீயா பிரிஞ்சு வரலையே. அவன்தானே அக்கா உன்னை அனுப்பினான்?

ஹூம். விதவைகளைக்கூட பரிதாபப்பட்டு யாராவது வாழ்க்கை கொடுப்பாங்க. ஆனா என்னை மாதிரி டிவோர்ஸ் ஆனவங்களை அவ்வளவு சுலபமா யாரும் ஏத்துக்கமாட்டாங்கடி.

அப்போ.. உன் நிலைமை?

கடைசிவரை இப்படியே இருந்திட வேண்டியது தான். மலடி வாழாவெட்டின்னு நிறைய பட்டம் எனக்குக் கொடுத்திருக்கானே எம் புருஷன். இந்த பெயர்களை சுமந்துகிட்டு வீட்டுக்குள்ள ஒரு ஓரமா நானும் என் தையல் மிஷினும் உழைக்கிற வரைக்கும் உழைச்சிட்டு.. ஒருநாள்... நிரந்தர ஓய்வெடுக்க வேண்டியது தான்.

இயல்பாக பேசிக்கொண்டிருந்த உமா இறுதியில் துக்கம் தொண்டையை அடைக்க, விம்மலோடு படுக்கையில் சாய்ந்தாள். அவளது கண்ணீர் பாரதியை பொசுக்கியது.

விடமாட்டேங்க்கா! உன்னைக் கடைசிவரை இப்படியே. ஒரு ஜடமா வாழவிடமாட்டேன். உன் தலையெழுத்தை நான் மாற்றிக்காட்டுகிறேன். மனதிற்குள் சூளுரைத்துக்கொண்டாள்.






**புத்தம் புது மலரே -என்**
**ஆசை சொல்லவா பொத்தி**
**வைத்து மறைத்த என்**
**நேசம் சொல்லவா?**

பளிச்சென்ற புன்னகையோடு அன்றலர்ந்த மலர்போல் தன் முன் வந்து நின்றவளைக்கண்டு வியந்து போனான் சஞ்சய். நேற்று கண்ணீரோடு சென்றவளா இவள்?

எதுவுமே நடவாதது போல் எத்தனை இயல்பாய் வந்து நிற்கிறாள்? எல்லாவற்றையும் மறைத்துக்கொண்டு எப்படி இவளால் சிரிக்க முடிகிறது?

ஸார்! ஹலோ ஸார்! என்னாச்சு? - கேலியாய் அவன் முகத்தின் முன் சொடுக்கினாள் பாரதி.கனவிலிருந்து மீண்டவன் போல் தலையை உலுக்கிக்கொண்டான்.

வாங்க பாரதி! உட்காருங்க.

உட்கார்தா? இந்த பைலை பார்த்து முடிச்சிட்டீங்கன்னா ஆடிட்டர் கிட்ட சப்மிட் பண்ணிடலாம் ஸார். பார்த்திடுறீங்களா? என்றவளின் கையிலிருந்த பைல்களை வாங்கி மேசை மீது வைத்தான்.

இருக்கட்டும். முதல்ல உட்காருங்க. உங்ககிட்ட பேசணும்.

என்ன விஷயம் ஓ! ஸாரி ஸார். நேற்றே பேசணும்னு சொன்னீங்களே. ஸாரி ஸார் என்ன விஷயம் ஸார்?

நேரிடையாவே கேட்கட்டுமா பாரதி? தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே?

என்ன ஸார்! இவ்வளவு புதிர்போடுறீங்க?

அப்படியென்னதான் கேட்கப்போறீங்க?

இது உங்க பர்ஸனல்தான். ஆனா உங்க மேலே உள்ள அக்கறையில

கேட்கிறேன். கேட்கலாமா?

கேளுங்க ஸார்.

நேற்று போன விஷயம் என்னாச்சு?

ஸா..ர்?

உங்க பேமிலி பிரெண்ட் என்ன சொன்னார்?

கல்யாணம் முடிவாகிடுச்சா? எப்போ கல்யாணம் - தயக்கமாகவும், ஆர்வமாகவும் சஞ்சய் கேட்க, முகம் கடுத்தது.

ஸார்! நிறைய வேலை இருக்கு இந்த நேரத்தில இந்த வெட்டிப் பேச்சு தேவையா? என எழ முயன்றவளைத் தடுத்தான்

பிளீஸ் பாரதி! எனக்கு பதில் சொல்லுங்க. நேற்றிலிருந்து எனக்கு தலையை பிச்சுக்கலாம் போலிருக்கு

என்ன?

நேற்று ஈவ்னிங் சிக்னல்ல உங்களைப்பார்த்தேன். அதுவும் கண்ல கண்ணீரோட சஞ்சய் நிறுத்த திகைப்பாய் அவனை ஏறிட்டாள்.

ஸார்?

இங்கிருந்து போகும் போது சந்தோஷமாகத்தானே போனீங்க? அப்புறம் என்ன நடந்தது?

ஸார்! அது எங்க குடும்ப விஷயம். அதைப்பத்தி பேச விரும்பல.

நோ. எனக்கு ரீசன் தெரிஞ்சாகணும்.

உங்களுக்கும் அந்த பிரெண்டுக்கும் அப்படி என்ன பிரச்சனை?

ஸார்! முதல்ல அந்த நாயை என் பாய் பிரெண்டுன்னு சொல்லாதீங்க. கேட்கவே சகிக்கல - எரிச்சலாய் சொன்னவளை புருவம் நெறியப் பார்த்தான்.

பாரதி அப்போ...அந்த ரமேஷ்?

என் அப்பாவின் நண்பரோட மகன். அவ்வளவுதான்'' - அவளது பதிலில் மனதிற்குள் லேசாய் குளிர் தென்றல் ஊடுருவியது.

எ..ன்..ன? அப்போ.. கல்யாணம்ன்னு..

ம்ப்ச்! எல்லாம் முடிஞ்சு போச்சு ஸார். மனசு சங்கடப்பட்டது தான் மிச்சம்.

என்ன சொல்றீங்க பாரதி? அவருக்கு உங்களை பிடிக்கலையா? - தயக்கமாய்க் கேட்டவனை சடக்கென நிமிர்ந்து பார்த்தாள்.

என்னை பிடிச்சிருக்காம். எங்க அக்காவைத் தான் பிடிக்கலையாம். அதுக்கு அவன் சொன்ன காரணம் இருக்கே... - பற்களைக் கடித்தவளை கையமர்த்தினான்.

இருங்க! உங்களைக் கட்டிக்கப் போறவருக்கு உங்க அக்காவை ஏன் பிடிக்கணும்?



ஸார்! நீங்க வேற எரிச்சலைக் கிளப்பாதீங்க. அந்த ஆளை எங்க அக்காவுக்குத் தான் பேசினோம். சஞ்சய்க்கு ஆகாயத்தில் மிதப்பது போலிருந்தது. வானம் பூமாரி பொழிவதைப் போலிருந்து.

அடடா! இவளுக்கு ஒரு அக்கா இருக்கிறாரா?

நான் தான் சரியாகக் கேட்கவில்லையா? மைகாட்! ஒரே நாளில் எத்தனை துடித்துபோனேன்?

எங்க அப்பாவும் அவங்க அப்பாவும் பால்ய சிநேகிதர்கள். அந்த அன்புல சதாசிவம் அங்கிள் அக்காவை மருமகளா ஏத்துக்க தயாராய் இருந்தார். நாங்களும் சந்தோஷமா சம்மதிச்சோம்.அக்காவையும் பிடிவாதமா சம்மதிக்க வெச்சோம். ஆனா...அவன் எங்க மொத்த சந்தோஷத்திலயும் மண் அள்ளிப் போட்டுட்டான். பாவி!

ஏங்க! ஏன் அவருக்கு உங்க அக்காவை பிடிக்கல்ல?

திருமண வாழ்க்கையில் பாதிக்கப்பட்ட பெண்ணை எந்த ஆம்பிளை ஸார் முழுமனதோட ஏத்துப்பாங்க? பாரதி கசப்பாய் கேட்க, எதிரே இருந்த சஞ்சயும், அறைக் கதவை திறந்து கொண்டு நுழைந்த பாலமுருகனும் ஒரு சேர அதிர்ந்தனர்.

எ..ன்...ன? என்ன சொல்றீங்க பாரதி?


எங்க அக்கா ஏற்கனவே திருமணமானவள். ரெண்டே வருடத்தில் புருஷனால விவாகரத்து செய்யப்பட்டவள்.

மை..காட்! ஏன்? எதுக்காக?

அவளால குழந்தை பெத்துக்க முடியாதுன்னு? சொல்லி அனுப்பிட்டான். பட்! அவன்கிட்டதான் குறையிருக்குன்னு சமீபத்தில் தான் மருத்துவ ரீதியா நிரூபணம் ஆச்சுது!!

ஏன்? முதல்லயே நீங்க டெஸ்ட் பண்ண வச்சிருக்கலாமே?

பண்ணியிருக்கலாம். உன்னோட வாழமுடியாதுன்னு சொன்னவன்கிட்ட எதையும் நிரூபிச்சி வலுகட்டாயமா வாழ என் அக்கா பிரியப்படல்ல. அவன் நீட்டின பேப்பர்ல தயங்காம ஸைன் பண்ணிட்டா. எங்களுக்கும் அந்த நேரத்தில் இதெல்லாம் தோணல. அவள் வாழ்க்கை போயிடுச்சேன்னுதான் கலங்கி நின்னோமே தவிர போராடி



'பேயைக் கண்ட நாய் குரைக்குமாமே...?''

''மாமியாரைப் பார்க்கும்போதுமருமகள் கத்துறதில்லையா...! அந்த மாதிரிதான்...!''

-சீர்காழி, வி.ரேவதி

அதை மீட்கணும்னு கூட தோணல.

அவனும் அவசரமா வேறொரு கல்யாணம் பண்ணிட்டான். இப்போத்தான் அவன் மனைவி மூலமா இவன் குறை கோர்ட்டு வரை போனபிறகு வெளியே வந்திருக்கு. எது தெரிஞ்சு என்னாகப் போகுது.

என் அக்கா இழந்தது இழந்ததுதானே. அவளுக்கு எப்படியாவது ஒரு வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்கணும்னு தான் போராடுறோம். ம்ப்ச்! நினைச்சது நடக்கல'' - வெறுப்பாய் சொல்லிவிட்டு கண்ணோரம் துளிர்த்திருந்த துளிநீரை சுண்டி எறிந்தாள்.

சஞ்சய் எதுவும் பேசத்தோன்றாமல் வருத்தம் தோய்ந்த முகத்துடன் அமர்ந்திருக்க, பாலமுருகன் உறைந்து போய் நின்றான்.

அந்த அப்பாவிப் பெண்ணின் வாழ்வில் இத்தனை துயரங்களா?

உமாவை சந்தித்த நொடிகள் கண்முன்னே வந்து போயின.

எத்தனை சின்னப்பெண்? அவளது எதிர்காலம் இருண்டுவிடக் கூடாது. சின்னஞ்சிறுவயதில் தன் தந்தையை இழந்து தன் தாய் பட்ட துன்பங்களைப் பார்த்தே வளர்ந்ததால், உமாவின் துன்பங்களை அவனால் உணர முடிந்தது. பாலமுருகனுக்கு! இயல்பாகவே பெண்களின் மேல் அளவிட முடியாத மரியாதையும் அன்பும் கொண்டவன். தன்னுடன் பணிபுரியும் பெண்களிடம் அந்த அன்பை பாசமாக வெளிப்படுத்துவதுண்டு. தன் தாயைப் போல் வாழ்க்கையில் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்குத்தான் தன் மனதிலும் வாழ்விலும் பங்குண்டு என உறுதியாய் இருப்பவன்.

அவனது உறுதியான முடிவை சஞ்சயும் அறிந்திருந்ததால் அவனது பார்வை அனிச்சையாய் வாசலருகேயே நின்றுவிட்ட பாலமுருகனிடம் சென்றது.

இருவரின் பார்வையும் மவுனமாய் பேசிக் கொள்ள, அதை கவனியாத பாரதி எழுந்து கொண்டாள்.

ஸாரி ஸார்! என்னோட கதையைச் சொல்லி போரடிச்சிட்டேன். கொஞ்சம் வேலையையும் பார்ப்போமே.

ஸாரி பாரதி!

எதுக்கு ஸார்?

நேற்று பேசினதை வெச்சு உங்களுக்குத்தான் கல்யாணம்னு...தப்பா நினைச்சிட்டேன் - என்றவனைப் பார்த்து கலகலவென் சிரித்தாள்.

கல்யாணமா? எனக்கா? அது இந்த ஜென்மத்தில நடக்காது.

ஐயோ! ஏங்க?

என் அக்காவைப் பார்த்த பிறகு கல்யாண ஆசையே போயிடுச்சு.



இப்படி வெச்சிகிட்டு என்னால கல்யாணம் பண்ணவும் முடியாது..

ஏன் பாரதி! உங்க அக்காவுக்கு ஒரு அருமையான மாப்பிள்ளை கிடைச்சுட்டா நீங்க கல்யாணம் பண்ணிக்க சம்மதிப்பீங்களா? - ஆர்வமாய்க் கேட்டவனை வியப்பாய் ஏறிட்டாள்.

என்ன ஸார் சொல்றீங்க?

கேட்டதுக்கு பதில் சொல்லுங்க. சம்மதிப்பீங்களா?

முதல்ல கிடைக்கட்டும் ஸார்.பிறகு பார்க்கலாம்!

கிடைச்சாச்சுன்னே வச்சுக்கங்களேன். அவன் உறுதியாய்ச் சொல்ல, வியப்பின் எல்லைக்கே சென்றுவிட்டாள்.

ஸார்! எப்படி..இவ்வளவு உறுதியா சொல்றீங்க? உங்களுக்கு தெரிஞ்சவங்க யாராவது...ஸார்! ஒருவேளை நீங்கதான் அந்த மாப்பிள்ளையா? ஆர்வமாய் கேட்டவளிடம் அவசரமாய் பதறி மறுத்தான்.

அய்யய்யோ! உங்க சிஸ்டர் எனக்கும் சிஸ்டர் மாதிரி. இது வேற மாப்பிள்ளை. என்னை விட அருமையான மாப்பிள்ளை.

யார் ஸார் அது?

எல்லாம் உங்களுக்குத் தெரிஞ்சவர்தான் - என்றவனை யோசனையாய் ஏறிட்டாள்.

அப்படியெல்லாம் பார்க்காதீங்க பாரதி. நானும் பரந்த மனப்பான்மை உள்ளவன்தான். ஆனா எம்மனசில ஏற்கனவே ஒரு பொண்ணு இருக்கா. அவளுக்கு என்னால துரோகம் பண்ண முடியாது. ஷீ ஈஸ் மை லைப் - ரசனையாய் சொன்னவனைப் பார்த்து புன்னகைத்தாள். மனதின் ஓரமாய் சிறிய வலி தோன்றியது.

ஓ! கன்கிராட்ஸ் ஸார். ஆனா மாப்பிள்ளை யாருன்னு சொல்லவே இல்லையே?

சொல்றேன். நாளைக்கே மாப்பிள்ளையோட உங்க வீட்ல வந்து சொல்றேன். அதுவரை சஸ்பென்ஸ் - சிரித்தவாறே அவன் சொல்ல அந்த சிரிப்பில் தடுமாறிப் போனாள் பாரதி.

என்ன பாரதி?

ஒ.ஒண்ணுமில்ல சார். நான்.. என் சீட்டுக்குப் போறேன். - மனதின் ஏமாற்றம் விழியில் தெரிந்துவிடக்கூடாது என அவசரமாய் எழுந்தாள்.

ஒன் மினிட் பாரதி!

ஸார்?

என் மனசில இருக்கிற பொண்ணு யாருன்னு தெரிஞ்சுக்க ஆசை இல்லையா? - குறும்பாய்க் கேட்டவனைக் கண்டு விறைப்பாய் நிமிர்ந்தாள்.

அது உங்க சொந்த விஷயம். அதை தெரிஞ்சுக்கிட்டு நான் என்ன பண்ணப் போறேன்? - அவளது கோபமும் ஏமாற்றத்தை மறைத்த முகமும் அவனை வெகுவாய் ஆனந்தப்படுத்தியது.

என்னிடமே மறைக்கிறாயா? உன் முகமூடியை நாளையே கிழித் தெறிகிறேன். இன்னும் எத்தனை நாள்தான் இப்படி கண்ணாமூச்சு ஆடுவது? உன் மனதை அதில் நான் இருப்பதை கண்டுபிடித்தே ஆக வேண்டும்!

பாரதி!

சொல்லுங்க ஸார்.

நாளைக்கு நான் எங்க பேமிலியோட உங்க வீட்டுக்கு வருவேன். தயாரா இருங்க - என்றதும் துணுக்குற்றாள்.

நீ..ங்களா? எதுக்கு?

மாப்பிள்ளை சார்பாய் பேசத்தான். மாப்பிள்ளையும் வருவார் - பூடகமாய் அவன் சொல்ல, குழப்பமாய் தலையசைத்து விட்டு வெளி யேறினாள்.

## 14

**மயங்கினேன் சொல்லத்**
**தயங்கினேன் உன்னை**
**விரும்பினேன் உயிரே**
**தினம் தினம் உந்தன் தரிசனம்**
**பெற தவிக்குதே மனமே!**

தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தாள் பாரதி. விடிவதற்கு இன்னும் சற்று நேரமே இருக்க. இமைகள் ஒன்று சேராமல் விலகியே நின்றன. இரவு முழுக்க சஞ்சயின் நினைவுகள் தொடர்கதையாய் மன திற்குள் ஓடிக் கொண்டிருக்க அதை அழிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தாள்.

என் மனசுல ஒரு பொண்ணு இருக்கா. ஷீ ஈஸ் மை லைப் - என்ற வார்த்தைகள் அவளது இதயத்தை கூறுபோட்டுக் கொண்டிருந்தன. இனி அவன் தனக்கில்லை என்ற எண்ணமே வதைத்தது.

அவனைப் பார்க்கும் ஒவ்வொரு நொடியும் அவனுடன் பேசும் இனிய பொழுதுகளிலும் தன்னையும் மீறி தன் உள்ளம் அவனிடம் சென்றுவிட்டதே.

வேலைக்கு செல்கிறோம் என்பதை விட அவனைக் காணப்போகி றோம் என்ற ஆவலில்தானே தினமும் இனிய விடியலாய் தோன்றியது. அன்று தாஜ்மஹாலை பரிசளித்த போது கூட அக்காவின் நிலையை எண்ணியேதானே மறுத்தேன்?

அதை வாங்கியிருந்தால் அவன் தன் விருப்பத்தை வெளிப்படை யாக சொல்லியிருக்கக்கூடும். அதை மறுத்ததோடு நில்லாமல் அவ னிடம் இயல்பாய் பேசாமல் விலகியே சென்றதால் தன் துணையைத் தேடிக் கொண்டானோ?

ஒருவேளை இதற்கு முன்பே யாரையேனும் விரும்பிக் கொண்டி ருப்பானோ? அந்த பரிசு கூட இயல்பாய் கொடுத்ததுதானா? இருக் காது. என்னைக் காணும் போதெல்லாம் அந்தக் கண்களில் நேசம் மின் னியது. அவனது பேச்சில் அது தென்பட்டது.

நான்தானே அதை உதாசீனம் செய் தேன். எனக்குள் எழுந்த நேசக்கொடியை மண்போட்டு மூடிமறைத்தேன். ஆனால் அது என்னையும் மீறிக் கொண்டு வெளியே எட்டிப்பார்க்கிறதே.

இனி இதை எப்படி மறைப்பது? மறைத்து தான் ஆக வேண்டும். அக் காவிற்கு நல்ல வாழ்வு அமையட்டும். அதற்காகத் தானே ஏங்கினேன்? காரியம் கைகூடி வரும்போது இந்த கண்கள் ஏன் கலங்குகின்றன?

அவன் யாரையோ விரும்பட்டும். மணக்கட்டும். இது எனக்குள் தோன்றிய நேசம். என்னோடு மடிந்து போகட்டும்.



**"பாட்டிக்கு ஜன்னி பிறந்துடிச்சாம்"**
**' ' இ வ் வ ா று வயசுலயா...?"**
**-சீர்காழி, வி.ரேவதி**

தினமும் அவன் முகத்தைப் பார்க்கும். அவன் குரலைக் கேட்கும் வரம் போதும். வேறு எதற்கும் ஆசைப்படக் கூடாது.

பெருமூச்சோடு எழுந்தாள். கடிகாரமுள் மணி ஐந்து என்றது. இனியும் படுத்திருந்தால் இந்தப்பாழும் மனம் தேவையில்லாமல் கண்டதையும் நினைத்து குழம்பித் தவிக்கும். என் மன உறுதியை தகர்த்து விடும்.

சஞ்சய் வந்து நிற்கும் போது என் கண்களில் துளியும் வருத்தம் தென்படக்கூடாது. என்னை வெளிப்படுத்திக் கொள்ள கூடாது என்று மனதிற்கு ஆயிரம் கட்டுப்பாடு விதித்திருந்த போதும் சரியாய் ஒன்பது மணிக்கு தன் குடும்பத்தாரோடும் பாலமுருகனோடும் வந்திறங்கியவ னைக் கண்டு மனம் கட்டவிழ்த்துக் கொண்டது.

வந்தவர்களை அம்மாவும் அப்பாவும் உபசரிக்க கிருஷ்ணதாசன் அனைவரையும் அறிமுகப்படுத்தினார். பாரதி பித்து பிடித்தாற்போல் தன் அறையில் அமர்ந்திருக்க, உமா உற்சாகமாய் ஓடிவந்தாள்.

ஏய்! பாரதி! உங்க எம்.டி.பேமிலி பூ பழத்தோட வந்திருக்காங்கடி. அவங்க பேசுறதப் பார்த்தால் கல்யாணப் பேச்சு மாதிரி தோணுது.

ஆமா! கல்யாணம் பேசத்தான் வந்திருக்காங்க.

அடிப்பாவி! எங்ககிட்ட ஒரு வார்த்தை கூட சொல்லலியே. கள்ளி!

அக்கா! நீ தான்.

மாப்பிள்ளை சூப்பரா இருக்கார்டி. மாப்பிள்ளை கூட வந்திருக் காரே. அவரும் உன் ஆபீஸ்லதானே வேலைப்பார்க்கிறார்.

ம்.ம். - என்றவள் திடுக்கிட்டு எழுந்தாள். அட! என்னாயிற்று எனக்கு? மாப்பிள்ளையோடு வருவேன் என்றானே! பாலாதான் மாப் பிள்ளையா? கடவுளே! என்னைப் பற்றியே உழன்று கொண்டிருக்கி றேனே!

நெற்றியிலறைந்து கொண்டு பதறினாள்.

ஐயோ! அக்கா! வந்தவங்களை கூட கேட்கலையே வாக்கா!

'' நான் எதுக்குடி?நல்ல காரியம் நடக்கும்போது நான் முன்னே நிற்கக் கூடாது!

அட அக்கா! நல்ல காரியமே உனக்குத் தான் நடக்கப் போகுது!

எ.ன்.ன? - பலமாய் அதிர்ந்தாள் உமா.

ஷ்! வா என்னோட. - என் தமக்கையின் கைப்பற்றி பின் அறைக்குள் நுழைந்து பக்கவாட்டு சன்னலருகே கொண்டு வந்து நிறுத்தினாள்.



பாரு! இவர்தான் உன்னைக் கட்டிக்கொள்ள போகிறவர் - என பால முருகனைச் சுட்டிக்காட்ட, உமா பேச்சற்று போனாள். கதிர்வேலனைப் பார்த்து பவ்யமாக கைகூப்பிக் கொண்டிருந்தவனைக் கண்டு மறுத்துப் பேச இயலாமல் தடுமாறி நிற்க, கிருஷ்ணதாசன் வெகு இயல்பாய் உரையாடிக் கொண்டிருந்தார்.

கதிர்வேலன் ஸார்! சஞ்சய் மட்டுமில்ல பாலாவும் என் பிள்ளை தான்! எனக்கு தூரத்து உறவும் கூட. ரொம்ப நல்ல பையன்.அவன் அம்மா நிழல்லதான் வளர்ந்தான்.

அதனால காயம்பட்ட ஒரு பொண்ணோட மனசுக்கு மருந்தா இருக் கணும்னு சொல்வான். அதுதான் அவனுடைய வாழ்நாள் லட்சியம். உங்க பொண்ணுக்கு நல்ல துணையா அவளுக்கேத்த இணையா இருப் பான்.

நீங்க தைரியமா உங்க பெண்ணைக் கொடுக்கலாம். என்ன பாலா? நான் சொல்றது சரிதானே? - என்றதும் மென்மையாய் புன்னகைத் தான் பாலமுருகன்.

சரிதான் ஸார். நான் கொஞ்சம் பேசலாமா?

பேசப்பா? இது உன் வாழ்க்கை. தாராளமா பேசு, என்றதும் கதிர் வேலனையும் செங்கமலத்தையும் பார்த்தான்.

ஸார்! சின்ன வயசுல எங்கம்மாவை விட்டுட்டு என் தாய்பட்ட கஷ் டத்தை எந்தப் பெண்ணும் அனுபவிக்கக் கூடாதுன்னு நினைக்கறவன் நான்.

ஆனா...உங்க பொண்ணு மேல பரிதாபப்பட்டோஅனுதாபப் பட்டோ இல்ல என்னோட இலட்சியத்திற்காகவோ இப்ப பெண் கேட்டு வரல்ல - அவன் நிறுத்த அனைவரின் முகமும் மாறியது.

உமாவின் விழிகள் கசியத் தயாராய் இருந்தது. என்ன சொல்லவரு கிறான்?

கடந்த காலம்றது முடிஞ்சு போன ஒன்று. அதைப்பத்தி நாம பேசவேண்டாமே. உங்க பொண்ணை நான் ரெண்டொரு சமயம் பார்த்திருக்கேன். அவங்களோட மென்மை,கனிவு,அன்பு எல்லாமே எனக்கு பிடிச்சிருந்தது.

அவங்களை மனசார விரும்பித்தான் பெண் கேட்டு வந்தேன். என்னை உங்களுக்கும் உங்க பொண்ணுக்கும் பிடிச்சிருந்தால் ரொம்ப சந்தோஷப்படுவேன். குறிப்பா உங்க பொண்ணுக்கு என்னைப் பிடிக்

கணும். ஏன்னா அவங்க முடிவு தான் எனக்கு முக்கியம். எந்த சூழல்லயும் அவங்க சங்கடப்பட நான் காரணமா இருக்க மாட்டேன். அவங்ககிட்ட கேட்கிறீங்களா? - என்றவனைக் கண்டு பாரதியே பிரமித்துப் போனாள்.

கிருஷ்ணதாசன் பெருமையோடு அவனைக் கட்டிக் கொள்ள, கதிர்வேலனும் செங்கமலமும் நிறைவாய் புன்னகைத்தனர். கண்ணீரும் புன்னகையுமாய் நின்ற உமாவை அசைத்தாள் பாரதி.

அக்கா! கேட்டியா? அவர் சொன்னதை..

கேட்டேன்

பிடிச்சருக்கா?

பாரதி! என்னைப் பற்றி எல்லாவற்றையும் அவர் கிட்ட சொல்லிட்டீங்களா?

எல்லாம் தெரியும். ஆனா இப்ப அது முக்கியமில்ல. எனக்குத் தேவை உங்க சம்மதம் - என ஜன்னல் பக்கமாய் திரும்பியவனைக் கண்டு கண்ணீரோடு தலையசைத்தாள் உமா. பாரதி அவளை வந்தவர்களிடம் அழைத்து வர அனைவரையும் நமஸ்கரித்தாள். ஹேய்! ஒரு வழியா அக்கா சம்மதிச்சிட்டா.

அப்பா! அப்படியே இவளுக்கும் ஒரு மாப்பிள்ளையை பார்த்திருங்கப்பா - என்ற மோகனை இடித்தாள் பாரதி.

உனக்கேன்டா அவசரம்? எனக்கு கல்யாணம் பண்ற எண்ணமே இல்ல

என்னம்மா இப்படிச் சொல்லிட்ட? நாங்க எங்க ரெண்டு புள்ளைக்குமே இன்னிக்கு நிச்சயம் பண்ணிடலாம்னு வந்தோமே! - சஞ்சயின் அம்மா சொல்ல, திகைப்பாய் சஞ்சயை ஏறிட்டாள்.

கண்களை சிமிட்டி புன்னகைத்தவனை குழப்பமாய் பார்த்தாள்.

சார்! என்ன இது?

நீங்கள் தானே பாரதி சொன்னீர்கள்?

என்ன? நானா? நான் என்ன சொன்னேன்?

எங்க அக்காவிற்கு மாப்பிள்ளை கிடைத்தால் நானும் கல்யாணத்திற்கு ரெடி என்றீர்களே?

அ..அது...

அந்த தைரியத்தில் தானே இன்று அம்மாவையும் அப்பாவையும் அழைத்து வந்தேன்? என் ஆசையை நிராசையாக்கி விடாதீர்கள் பிளீஸ்!

சார்! நேற்று...ஏதோ ஒரு பெண் உங்கள் மனதில் இருப்பதாய்...

அது நீங்கள் தான் பாரதி - என்றதும் குபீரென மலர்ந்து சிவந்தாள். உள்ளம் படபடக்க ஆதரவாய் அருகே நின்ற உமாவைப் பற்றிக் கொண்டாள்.

அய்யோ! பாரதிக்காவுக்கும் கூட வெட்கப்பட தெரியுதும்மா - மோகன் கூக்குரலிட வீடு முழுக்க உற்சாக வெள்ளம் கரைபுரண்டது.

தங்கள் பிள்ளைகளுக்கு அருமையான வரன்கள் அமைந்ததில் பெற்றவர்களின் மனங்களும், தாங்கள் விரும்பிய துணையே இணையாய் கிடைத்ததில் இளையவர்களின் மனங்களும் இன்பத்தால் நிறைந்தன.

## முற்றும்


**கண்மணி சந்தா**

**கண்மணி**

**உங்கள் இல்லம் தேடி வர.**

**1 ஆண்டு சந்தா : ரு 600**

**6 மாத சந்தா : ரு 300**

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி:

**நிர்வாகி**

**தேவியின் கண்மணி,**

**246, அண்ணாசாலை,**

**சென்னை - 600 006**


## பட்டுசேலை

## பரிசு பெற்றவர்கள்

பதில் : அம்மி **24-07-2013**

1. வெ.பத்மாலதி, தூத்துக்குடி- 628 003.
2. வி.மேனகா, திருவண்ணாமலை- 604 406.
3. பி. ஜெயலட்சுமி, கன்னியாகுமரி- 629 001.

Deviyin KANMANI-Tamil Weekly 14-08-2013 Regd.No. TN/CH(C)/360/12-14 Registered With Registrar of News papers for India Under No.49510/89 published every Wednesday of every Week.



# என்னைப் பற்றி

என் அன்பான கண்மணியின் கண்மணிகளுக்கு வணக்கம். மீண்டும் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. கணவனால் கைவிடப்பட்ட தன் சகோதரிக்கு மீண்டும் ஒரு வாழ்க்கை அமைத்துத்தர பாடுபடும் ஒரு தங்கையின் போராட்டமே இந்த நாவல்.

தன் தாயைப் போல் வாழ்க்கையை இழந்த ஒரு பெண்ணுக்கே வாழ்க்கை கொடுப்பதாய் முடிவெடுக்கும் நாயகனை உங்கள் அனைவருக்கும் பிடிக்கும் என நம்புகிறேன். இந்த வாய்ப்பை அளித்த கண்மணிக்கு நன்றி! நன்றி!

அன்புடன்

சொ.கலைவாணி சொக்கலிங்கம்